www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00


දිනමුරසු වාරමලර්

மார்ச்.01-07,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 246

## எட்டிக்குப் போட்டியான இழுத்தடிப்பு தந்திரம்



## பரவலாகும் போர் முனை



## இரும்பு மனிதர் சதாம் உசேன்



## ரோகன விஜயவீரவின் கடைசி நாள்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## சென்ற ஆண்டின் சிறந்த மனிதர்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஆண்டுதோறும்
ஒரு சிறந்த மனிதரை
தெரிவு செய்து கௌரவிக்க
'முரசு' ஆசிரியபீடம்
முடிவு செய்திருக்கிறது!

சென்ற ஆண்டின்
சிறந்த மனிதராக
ஈராக் அதிபரும்
இரும்பு மனிதருமான
சதாம் உசேனை
'முரசு' கௌரவிக்கிறது!

உலகை
தன் விருப்பப்படி
ஆட்டிப்படைக்கத் துடிக்கிறது
அமெரிக்க ஏகாதிபத்தியம்!

தான் நினைப்பதே
தர்மம்!
தான் வைப்பதே
சட்டம்!
என்று வாலாட்டும்
வல்லூறுதான் அமெரிக்கா!

நாள் ஒரு நவீன ஆயுதம்
பொழுதொரு
புதுரக போர் விமானம்
என்று ஆயுதத் தயாரிப்பில்
ஆதிக்கம் வகிப்பதும்
அமெரிக்காதான்!

அலமாரியில்
அழகு சாதனப் பொருட்களை
அடுக்கி வைத்திருப்பது மாதிரி,
அணு ஆயுதங்களை
செய்து குவித்து வைத்திருக்கிறது!

உள்நாட்டு யுத்தங்களை
ஊக்குவித்து குளிர்காய்வதற்காக,
அடக்குமுறை அரசுகளுக்கு
உதவிக்கரமும் நீட்டுகிறது!

பாலஸ்தீன பிரச்சனையில்
சமாதானத் தூதர்போல
நாடகமாடிக்கொண்டு
இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை
மறைமுகமாக
தட்டிக் கொடுப்பதும்
சாட்சாத் அமெரிக்காதான்!

ஆடுகள் நனையுதென்று
ஓநாய்கள் அழுவதுபோல,
இடைக்கிடையே
மனித உரிமை ஓலங்கள்!
தர்ம உபதேசங்கள்!

அணு ஆயுதக் குறைப்பில்
அமெரிக்காவுக்கு
என்ன அத்தனை கரிசனம்?
தான் மட்டும் பலசாலியாக
இருக்க நினைக்கும் தந்திரம்தான்!

அணு ஆயுத விவகாரத்தில்
ஈராக்கை மட்டுமல்ல,
இந்தியாவையும்
கட்டுப்படுத்த நினைத்தது
அமெரிக்கா!

இந்தியா
பணிய மறுத்துவிட்டது!

எனவே-இன்று
ஈராக் பணிந்தால்,
நாளை
இந்தியாவையும்
பணியவைக்கலாம்!
மறுநாள் உலகையே
ஆட்டுவிக்கலாம் என்பதுதான்
அமெரிக்காவின் எண்ணம்!

ஆட்டைக் கடித்து
மாட்டைக் கடித்து
மனிதனையே குதறும்
கழுகுதான் அமெரிக்கா!

ஆகவே- அமெரிக்காவின்
ஆதிக்கத் திமிரை
எதிர்க்க
உலக நாடுகளும்
ஒடுக்கப்படும் மக்களும்
ஒன்றுபட வேண்டிய
கால கட்டம் இது!

சோவியத் யூனியன் வீழ்ந்தபின்னர்
அமெரிக்காவை எதிர்க்க
பல நாடுகள்
அஞ்சுகின்றன!

எனவே-எங்காவது
ஓரிடத்தில் இருந்து
எதிர்ப்பலை கிளம்பவேண்டும்!

அந்த எதிர்ப்பலை
ஈராக்கில் எழுந்திருக்கிறது!
அதன் தளபதி
சதாம் உசேன்!

ஈராக்கில் கிளம்பும்
ஏகாதிபத்திய எதிர்ப்பு
தீப்பொறிகள்
எங்கும் பரவட்டும்!

அமெரிக்க பயங்கரவாதம்
வெற்றி பெறுவது
அகில உலகுக்குமே
ஆபத்து!

வளரும் நாடுகளுக்கு மட்டுமல்ல,
போராடும் மக்களுக்கும்
பொல்லாத ஆபத்து!

எனவே-அமெரிக்காவை
எதிர்த்து நிற்கும்
ஈராக் மக்களுக்கு
நட்புக் கரம் நீட்டுகிறோம்!

ஈராக் அதிபர்
சதாம் உசேனை
வாழ்த்தி- கட்டியணைத்து
கை குலுக்கி கௌரவிக்கிறோம்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## 'ஆன்மீகம்' வளரட்டும்!

ஆன்மீகம் பற்றிப் பேசுபவர்கள் 'அன்பு' பற்றித்தான் பேசவேண்டும். ஏனெனில் ஆன்மீகம் என்பது அன்புள்ள செயல்களின் மறுபெயர். ஆம் அன்பில்லாத ஆன்மீகமில்லை. அதாவது அன்பை ஆதாரமாகக் கொண்டதே ஆன்மீகம்.

ஆம்,ஆன்மீகத்தைக் கடைபிடிப்பவன் இந்த உலகத்தின் மேல் உண்மையான அன்பு கொண்டிருப்பான். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் அன்பின் வடிவமானவன் என்பதை அவன் முழுமையாக நம்புகிறான். எனவே, அன்பும் எப்பொருளிலும்- எவ்வுயிரிலும் நிறைந்துள்ளது என்பதை உணர்கிறான். எனவே, எல்லா உயிர்கள் மேலும் அன்பு கொண்டிருப்பான். நல்லதோ கெட்டதோ எல்லாம் நன்மைக்காகவே என்றிருப்பான்.

இந்த 'அன்பு' எப்படிப்பட்டது? என்னென்ன செய்யும்? என்பதை அப்போஸ்தலராகிய பவுல், கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில், பதின்மூன்றாம் அதிகாரத்தில் நன்கு விளக்குகின்றார். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது."

"அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது." "அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்."

"சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்." (கொரி 1-13:4-8) அதன்பின் சொல்லப்படுவது என்ன தெரியுமா? ஆம்- 'அன்பு ஒருக்காலும் ஒழியாது.'- எனவே-

அன்பை வளர்ப்போம்; அவனியை செழிக்கச் செய்வோம்; வளர்க ஆன்மீகம்.

ஏ.பி.வி. கோமஸ்.

## கேலி செய்ய வேண்டாம்!

ஒருவர் மற்றவரை கேலி செய்வது இன்று வழக்கமாகி விட்டது. ஒருவர் பிறருடைய குலம் கோத்திரத்தை சுட்டிக்காட்டி மற்றும் பிறருடைய உடல் அமைப்பை நிறத்தை, நடை, உடை, பாவனை ஆகியவைகளைச் சுட்டிக்காட்டி கேலி செய்கின்றனர். இதனை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

"இறை நம்பிக்கையாளர்களே! ஆண்களில் எவருமே வேறெந்த ஆணையும் கேலி செய்ய வேண்டாம்! (கேலி செய்யப்படும்) அவர்கள் (கேலி செய்யும்) இவர்களைவிட (அல்லாஹ்விடத்தில்) மேலானவர்களாக இருக்கலாம். இவ்வாறே பெண்களில் வேறெந்தப் பெண்ணையும் கேலி செய்யவும் வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவருக்கு விரும்பத்தகாத பட்டப் பெயர் சூட்டவும் வேண்டாம். ஈமான் கொண்ட பின் கெட்ட பெயர் சூட்டுவது மிகப் பெரும் பாவமாகும். எவர்கள் (இவற்றிலிருந்து விலகி) பாவமன்னிப்பு கோரவில்லையோ அவர்கள்தான் அக்கிரமக்காரர்கள் ஆவர்" (குர்ஆன்-49-11)

"ஒருவர் மற்றவனைப் பார்த்து பரிகாசமாகச் சிரித்தால் அவனும் ஒரு நாள் மற்றவர்களால் பரிகாசமாகச் சிரிக்கப் படுவான்" எனும் நபி மொழியும் ஏளனம் செய்பவர்களை எச்சரிக்கிறது.

ஆகவே இறை நம்பிக்கையாளர்களே! யாரையும் கேலி செய்யாது, பட்டப் பெயர் சூட்டி அழைக்காது, மற்றவர்களின் மனதை நோகடிக்காது இறை மறை கூறியபடி நடப்போமாக.

எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.243

### பரிசுக்குரிய கவிதை



### பொன்விழா

சுவருக்கும் காதிருக்கும் சுருக்கமாய் சொல்....
சுதந்திர பொன் விழாவின் பொருள் என்ன?
'பொன்னம்பலவாணேஸ்வரர்கோவில்
பெருவிதியில் ஐம்பதாவது தடவை அகதியாவது!'

புனிதா-திருகோணமலை.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்.

### கனவுச் சொர்க்கம்

நம்
சொந்தக் குடிசைக்கு
மீண்டும் போய்
ஒரு கவளம்
சோறு தின்றதாய்
ஒரு கனவு!
யாருக்கும் சொல்லாதே.
சொன்னால் பலிக்காதாம்!

சிவன்சுதன்-உரும்பராய்.

### அவசியம்

உண்மைகளைச்
சொல்வதென்றால்
வேண்டுமிந்த இரகசியம்
உயிர் காத்து வாழ்தற்கு
இது கூட அவசியம்.

ஆர்.றஜீவன்- நெலுக்குளம்
சந்தி, வவுனியா.

### எதிரொலி

ஒரு அந்தரங்கம்
அம்பலமாகிறது-
யார்தலை
கவிழுமோ!

வை.சித்திகிருஷ்ணா-
பாண்டிருப்பு-01.

### நாளை எதுவோ?

புன்னகையும் பொன்னகையும்
மேனி எழில் கூட்டும்!
இந் நாளில் அந்நகைகள்
புதை குழியும் காட்டும்!
காதோர இரகசியங்கள்
கற்பனைகள் மிளிரும்!
நாளை என எண்ணுகையில்
நம்பிக்கைகள் தளரும்!

ம.திருவரசுராசா-வவுனியா.

### ஏக்கம்

வாய்விட்டு சிரிப்பதனால்
நோய் விட்டுப் போகுமென்றார்!
சீர்கெட்ட எம் வாழ்வு
நேர் பட்டு போவதெப்போ?

சி.மு.சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### சு(தந்தி)ரம்!?

சிரிக்காமல் கேளடி
இரகசியம் தானடி!
தேர்தல் முடிந்ததடி
சுதந்திரம் வந்ததடி!

டி.ஜோர்ஜ்- லபுகலை.

### இரகசியம்

பலத்த பாதுகாப்பிலும்...?
பாரடி;
வெடிக்கிறது...!

ந.மதி, மோதர.

### நிலையாமை

"என்ன இரகசியம்?
எனக்கும் சொல்லு!"
எந்த இன்பமும்,
இந்த வயதில் மட்டுமே!

வேலு நிரஞ்சன் குமார்-
கபரகலை டிவிசன்.

### பூச்சியம்!

தோழி! தேர்தலில்
ஓட்டுக் கேட்டவர்க்கு
அம்மா போட்ட
புள்ளடி பூச்சியம்!

ஏ.யாழினி- மட்டக்களப்பு..

### பேச்சுச் சுதந்திரம்!

இவர்கள்
தலை நகரில்
தமிழ் கதைக்கிறார்கள்!

ந.ரதீஸ்வரன்- தம்பிலுவில்-02.

## கவிதைப் போட்டி இல.246



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதை களை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 07.03.1998

முகவரி:
கவிதைப் போட்டி இல.246,
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



"ஒரு தடவை போட்டா வோட்டு நூறு தடவை போட்ட மாதிரி" ரஜனியின் கற்பனையில் அசத்தியிருந்தார் காதிலை பூ கந்த சாமியார். ஒரு தடவை வாசித்து நூறு தடவை சிரித்து விட்டோம்!

ரவி, சிவா, சாந்தினி, கொட்டகலை.

அபிமான முரசே!

நீ வாரம் தோறும் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வெரி வெரி சூப்பர். அதிலும் 'டயானாவின் கண்ணீரில் கரைந்த இரவுகள்', 'கொள்ளைராணி' அனைத்து அம்சங்களும் நன்று

பொ. புனிதா, கோட்டைக் கல்லாறு-2.

அன்பின் முரசிற்கு!

கள நிலவரங்கள் பற்றிய செய்திகளைச் சுடச் சுடத் தரும் நாரதருக்கு நன்றிகள். களுவாஞ்சிக்குடி யோகனின் சிறுகதை நீண்ட நாட்களின் பின்னர் பிரசுரமாகியிருந்தது. அவருக்கு எனது பாராட்டுக்கள்!

எம். கனகராஜா, கொழும்பு-11.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அம்சங்கள் அனைத்தும் எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' தொடரில் நாம் தெரியாத செய்திகளை அறிய முடிகின்றது. முரசே உனக்கு எங்கள் வாழ்த்துக்கள்!

கு. றஜீதா, களுபோவிலை.

டியர் முரசே!

விறுவிறுப்பாகவும் இனிமையாகவும் உன் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. 'காதிலை பூ கந்தசாமியார்' என்பதற்கு பதிலாக 'மிஸ்டர் கந்தசாமியார்' என்பது பொருந்தும்! சாள்ஸுடன் கமிலா தொலைபேசி தொடர்பு கற்பனையில் உண்மையையும் தெளிவு படுத்தினார். 'பூலான் தேவி'யும் வெகு ஜோர்! ரசிகனுக்கு நன்றிகள்; 'இலக்கிய நயத்'துடன்!

தலவாக்கலையூர் சிவம் ஜெயசுப்பிரமணியம்.

உலகில் தாங்கள் மட்டும்தான் பொதுநலவாதிகள் என்றும், ஏனையோர் யாவருமே சுயநலமிகள் என்றும் நினைத்து சுயதிருப்தி கொள்ளும் ஆட்கள் இருக்கின்றனர். அவர்களுக்குத் தங்களைத் தவிர வேறு எவராவது பாராட்டப்பட்டால் பொறுக்காது. பிற தரப்புக்களில் உள்ள நல்ல விஷயங்கள்கூட கண்ணில் தெரியாது. அவ்வாறான ஒன்றிரண்டு பொறாமையாளர்களுக்கு வேலை மெனக்கெட்டு அய்யாத்துரையார் பதில் சொல்லத்தான் வேண்டுமா? இலவசமாக விளம்பரம் செய்வதை ஏன் தடுக்கிறீர்கள்?

இ. மருசலீன், மன்னார்.

செம சூப்பர்தான் போங்கோ! 'சினிவிசிட்' படங்கள் யாவும் கண் கொள்ளாக் காட்சிதான்! குறிப்பாக கமல்-பிரபுதேவாவின் 'காதலா காதலா' படம் அமர்க்களமாய் உள்ளது. சபாஷ்! மேலும் 'முரசம்' அடித்திருந்த சொல்லடி இருக்குதில்லே, சரியான செல்லடியாக துளைத் திருக்கும் சம்பந்தப்பட்டவர்களின் மனங்களை! துணிச்சல் சுதந்திரம் இதுதான் முரசின் தனித்துவம்!

செல்வி. ப்ரியநேசி, களுத்துறை (தெற்கு)

இனிய முரசே!

நாரதரின் 'எதிர்பார்த்திருந்த முனையில் எதிர் கொள்ள முடியாத தாக்குதல்' எம்மையும் களம்வரை இழுத்தது. இராஜ தந்திரியின் யாழ் அலசலும் பாராட்டத் தக்கது! காதிலை பூ கந்தசாமியாருக்கு என் பாராட்டுக்கள்!

சி. கிரவுஞ்சன், வவுனியா.

எனது அபிமான தினமுரசுக்கு பல கோடி வந்தனங்கள். முரசுக்கு நிகர் முரசுதான். முரசில் சாள்ஸ் சம்பந்தமாக முரசு கூறிய விடயங்கள் அனைத்தும் அணுவளவும் பிசகாது அப்படியே நடந்தது. இளவரசர் சாள்ஸ் மடிப்புக் கசங்காத காகிதத் தாளில் எவரோ எழுதிக் கொடுத்ததையே பார்த்துப் பார்த்து வாசித்தாரே, (முரசு கூறியவாறு) இது தேவைதானா? உனக்கு நிகர் நீதான் முரசே!

சி.எம்.எம். நியாஸ், பள்ளிவாசல்துறை.

### பொய்க்குற்றம்?

9.2.1998 அன்று 'திவயின' 10ம் பக்கத்தில் வெளியாகி இருந்த கட்டுரையில், 'மலையகத் தோட்ட தொழிலாளர்களின் ஊதியத்தில் ஒரு தொகையை, புலிகளுக்கு நிதியாக அனுப்புவதாகவும் லுனுவத்த தோட்டத்தில் உள்ள ஒருவர் புலிகளின் மொழிபெயர்ப்பாளராக இருப்பதாகவும் அதுபற்றி தினமுரசுசில் செய்தி வெளியாகி இருந்ததாக' வும் குறிப்பிட்டுள்ளனர். அப்படி முரசில் செய்தி வரவில்லையே. ஏன் முரசுமேல் பொய்க் குற்றம் சுமத்துகிறார்கள்?

ஜெ. சித்திரன், கந்தபளை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

### இன்னொரு தேர்தல் வரும்

முரசே! யாழ் மாவட்டத் தேர்தலில் புலிகளை விமர்சனம் பண்ணாமல், தங்களைப் புலிகளுக்கு எதிரானவர்கள் என்று கூறாமல் வாக்குக் கேட்டன தமிழ்க் கட்சிகள். தேர்தலில் கூட உடன்பாடு இல்லாமல் போட்டியிடுவதாகவே 'பாவ்லா' காட்டினார்கள். தேர்தல் முடிந்ததும் புத்தியைக் காட்டிவிட்டனர். அரசின் பிரசாரத்துக்கு ஒத்து ஊதுகின்றன. இன்னொரு தேர்தல் வராமலா போகப்போகிறது? இப்போதெல்லாம் மக்களுக்கு ஞாபக சக்தி அதிகம்.

எஸ். செந்தில்குமார், மட்டக்களப்பு.

### கடும் சந்தேகம்

அன்பு முரசுக்கு!

யாழ் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் அரசு கிழித்த கோட்டுக்குள் நின்று ஆடினார்கள் தமிழ்க் கட்சித் தலைவர்கள். அரசையும் கடுமையாக காரசாரமாக எதிர்த்து பேசினார்கள். தேர்தல் முடிந்ததும் வீதக் கணக்குக் கூறி அறிக்கை கொடுத்தனர். "50 வீத மக்கள் வாக்களித்தனர்" என்றுகூட சில கட்சிகள் கூறி, அரசின் சார்பாக உலகை ஏமாற்றின. இக் கட்சிகள் எல்லாம் கடந்த காலத்தில் போராளிக் கட்சிகளாக இருந்தது உண்மைதானா? சந்தேகமாக இருக்கிறது. சூடு, சொரணை துளிகூட வேண்டாமா?

ஜி. ரவீந்திரன், பருத்தித்துறை.

### சாள்ஸுக்கு என்ன மரியாதை?

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் பற்றிய முரசின் கண்ணோட்டமும், 'காதிலை பூ கந்தசாமி' கொடுத்த கிண்டலும் பிரமாதம். பற்றி எரியும் பிரச்சனை தொடர்பாக கவலையே படாத ஒருவருக்கு மரியாதை கொடுப்பதோ, முக்கியத்துவம் கொடுப்பதோ முறையற்றது. முரசு மரியாதை கொடுக்காதது சரியானதே. கொம்பனிவீதி குண்டுவெடிப்பை சாள்ஸ் கண்டித்தது ஏன்? போரில் மோதிக்கொள்ளும் இரு தரப்புக்கள் தமக்கிடையே நடத்தும் தாக்குதல்களை புத்தியுள்ள யாரும் கண்டிப்பதில்லை. அப்பாவி மக்களை குறி வைத்திருந்தால் சாள்ஸ் கண்டித்திருக்கலாம். நியாயமாகவும் இருந்திருக்கும். வெந்ததை தின்று வாயில் வந்ததைப் பேசும் நபர்தான் சாள்ஸ். இதே சாள்ஸ் இங்கு நிற்கும்போதுதானே தம்பலகாமம் படுகொலை நடந்தது. வாய்திறந்தாரா மனுசன்?

ஆர். ருத்திரமூர்த்தி, மட்டக்களப்பு.

### இணைப்பு யாருக்கு?

இவர்கள் சொல்வதையே கேட்க ஆளில்லை. இந்த இலட்சணத்திலே இரு தரப்பாரையும் சேர்த்துவைக்கப் போகிறார்களாம். ஆளும் கட்சியையும், எதிர்க்கட்சியையும் சேர்த்து வைக்க அரும்பாடுபடும் தமிழ்க் கட்சிகளைத்தான் சொல்கிறேன். இது என்ன எம்.ஜி.ஆர். படமோ? வில்லனின் கையில் வாளைக் கொடுத்துவிட்டு சண்டை பிடிப்பதற்கு- உரிமைகளில் பாதியைக்கூட தரமறுக்கும் தரப்புக்களை சேர்த்துவைப்பதால், 'உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா' என்ற கதியன்றோ நமக்கு வரும்?

வ. விநாயகம்பிள்ளை, மட்டக்குளி.



படிப்பகம்

www.padippakam.com

# இந்த ஆண்டில் பாரிய அழுத்தம்

# விடுதலைப் புலிகள் உறுதி தெரிவிப்பு

## "தீர்வுத்திட்டம் செத்துக் கொண்டிருக்கிறது"

இந்த ஆண்டு இலங்கை அரசுக்கு பாரிய நெருக்கடியை கொடுக்கும் ஆண்டாக இருக்கும் என்று விடுதலைப் புலிகள் உறுதி தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவது என்ற இலட்சியத்தில் புலிகள் இயக்கம் அன்றிலிருந்து உறுதியாக இருக்கிறது.

எத்தனையோ சோதனைகள், நெருக்கடிகள் சூழ்ந்தபோதும் அந்த அரசியல் இலட்சியத்தில் இருந்து வழுவாது, கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளது. தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தையும் உயர் நிலைக்கு வளர்த்துவிட்டுள்ளது.

போராடவெனப் புறப்பட்ட தமிழ்க் குழுக்களின் தலைமைகள் பேரினவாதத்திற்கு துணைபோய்க் கொண்டிருக்கின்றன. தமிழ்க் குழுக்களின் இத்துரோகச் செயற்பாட்டை சந்திரிக்கா அரசாங்கம் நன்றாகப் பயன்படுத்தி வருகிறது.

### சாதுரிய நிலைப்பாடு

சந்திரிக்கா அரசாங்கம் பதவி ஏற்றதும் தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கப்போகின்றது என்று உலகம் நம்பவைக்கப்பட்டது. சந்திரிக்காவின் சாதுரியமான பேரினவாத நிலைப்பாட்டால் புலிகளின் அரசியல் உறுதியை வெற்றி கொள்ள முடியவில்லை.

இன அழிப்பிற்கான போர் என்ற பேரினவாத நிலைப்பாடு சமாதானத்திற்கான போர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் நிலத்தை ஆக்கிரமித்தல் என்ற பேரினவாத இலட்சியம் தமிழ் மக்களை விடுவித்தல் என்று வார்த்தை மாற்றம் பெற்றது.

ஆனால் படையெடுப்பை நாம் தந்திரமாகவும், வீரமாகவும் எதிர்கொண்டோம். வார்த்தை ஜாலங்கள் நீண்ட நாள் நிலைக்கவில்லை. அம்மையாரின் தீர்வுப் பொதியும் செத்துக் கொண்டிருக்கிறது. இராணுவ பலத்தையும் புலிகள் இயக்கம் உடைத்து வருகிறது.

இவை காரணமாக முன்னெப்போதையும்விட இப்போது புலிகள் இயக்கத்தின் பின்னால் தமிழ் மக்கள் அணி திரண்டு வருகின்றனர்.

புதிய வருடம் தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் ஆண்டாகவே திகழப்போகின்றது.

இராணுவ ரீதியாக என்னதான் முயற்சி எடுத்தாலும் புலிகள் இயக்கத்தை வெற்றி கொள்ள முடியாது என்பதையும், அரசியல் ரீதியாக எத்தகைய கூத்துக்களை நடத்தினாலும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் சிறீலங்கா அரசு இந்த ஆண்டில் ஏற்றுக் கொள்ளத்தான் போகின்றது.

புலிகள் கொடுக்கும் அழுத்தங்களும், மனவுறுதியின் வெளிப்பாடும் இந்த ஆண்டில் மேலும் பாரிய பரிணாமம் பெறும்!" என்று விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# பூகோள நிலைக்கு மாறான தகவல்கள்!

## அவசர கோலத்தில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகள்


பெப்ரவரி 04ம் திகதிக்கு முன்பாக வவுனியா-யாழ் தரைப்பாதையை திறக்க முடியாமையும், கிளிநொச்சி நகரின் மையப் பகுதி புலிகளின் பிடியில் சென்றமையாலும் படைத்தரப்பின் 'இமேஜ்' சரிந்துள்ளது.

அதனால்தான், பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று தாம் நிலை கொண்டுள்ள இடங்களை காண்பிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகினர்.

சமீபத்தில் வன்னிப் பகுதியில் 'ஜயசிக்குறுய்' படையினர் நிலை கொண்டுள்ள பகுதிகள் பற்றிய தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன. வன்னியின் பூகோள நிலைக்கே மாறானவையாக அவை அமைந்துள்ளன.

கனகராயன்குளத்தில் படையினரின் முகாம் இருப்பதாக சில செய்திகளில் கூறப்பட்டது. வவுனியா யாழ் சாலையில் புளியங்குளத்திற்கு அடுத்ததாக அமைந்திருப்பதே கனகராயன் குளம்.

இதுவரை வவுனியா யாழ் சாலையில் புளியங்குளம் ரயில் நிலையப் பகுதிவரைதான் படையினர் நிலைகொண்டுள்ளனர். புளியங்குளம் சந்திக்கு செல்ல வேண்டுமாயின் மேலும் சில கிலோ மீட்டர்கள் நகர வேண்டும். ஆனால் அவசர அவசரமாக எழுதப்பட்டதும், வவுனியா என்பதை **வவுநியாவ** என்றும் நெடுங்கேணி என்பதை **நெடுங்னேி** என்றும் தமிழில் பெயர் பொறிக்கப்பட்டதுமான பெயர் பலகை ஒன்றை தாம் நிலை கொண்டுள்ள பகுதியில் நிறுத்திவைத்துவிட்டு, அதுதான் புளியங்குளம் சந்தி எனக் காண்பித்துள்ளனர்.




### ஆற்றைக் கடக்க வேண்டும்

புளியங்குள சந்தியை கைப்பற்றியிருந்தால் புலிகளின் பாரிய பங்கர்களை நிச்சயம் காண்பித்திருப்பர். அங்குள்ள பாரிய காப்பரண்களில் இருந்துதான் கிட்டத்தட்ட ஆறு மாத காலமாக புலிகள் தாக்குப்பிடித்து வருகின்றனர்.

அதேபோல கனகராயன் குளம் என்று படையினர் குறிப்பிடுவது, வவுனியா யாழ் சாலைக்கு கிழக்கே உள்ள கரப்புக் குத்தி பகுதியுடன் தொடர்புடைய பகுதியாகும்.

நெடுங்கேணி, மதியாமடு மற்றும் பெரிய மடு பகுதிகளில் இருந்து முன்னேறிய படையினர் கடந்த நான்கு மாதகாலமாக அப்பகுதியில் நிலைகொண்டுள்ளனர். கனகராயன் குளப்பகுதி என்று அதனை அழைக்கின்றனர். தற்போது அதனையே கனகராயன் குளம் என்று காண்பித்துள்ளனர்.

படையினர் தற்போதுள்ள நிலையில் இருந்து கனகராயன் குளச் சந்திக்கு செல்ல வேண்டுமாயின் அல்லது, வவுனியா யாழ் சாலையை அடையவேண்டுமாயின் குறுக்கே ஓடும் கனகராயன் ஆற்றைக் கடந்தாக வேண்டும்.

அதேபோல மன்னகுளம் என்று பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது புளியங்குளத்திற்கு மேற்காக உள்ள புதூர் சார்ந்த பகுதிகளாகும். அங்கிருந்து மன்னகுளம் வழியாக கனகராயன் குளத்தை சென்றடைய படையினர் மேற்கொண்ட முயற்சிதான் புலிகளால் முறியடிக்கப்பட்டது. நூற்றுஐம்பதுக்கு மேற்பட்ட விசேஷ அதிரடிப் படையினர் பலியாகி இருந்தனர். அதன் பின்னர் மன்னகுளம் நோக்கி நகர்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

மன்ன குளத்தில் பலியான படையினரின் உடல்களையும் புலிகளே ஒப்படைத்திருந்தனர். அப்பகுதிக்கு படையினர் செல்ல முடியவில்லை. அதன்பின்னர் சென்றிருந்தால் அதனை பெரும் செய்தியாக படையினர் அறிவித்திருப்பர்.

### அதே நிலைகள்

கடந்த ஆண்டு 'ஜயசிக்குறுய்' படையினர் எங்கு நிலைகொண்டிருந்தனரோ அதே நிலைகளில்தான் இச் செய்தி எழுதப்படும் வரை படையினர் நிலைகொண்டுள்ளனர்.

புளியங்குளத்தில் நடைபெறும் சண்டைகள்கூட கனகராயன் குளத்தில் சண்டை என்றும், கரிப்பட்ட முறிப்பில் நடைபெறும் மோதல்களை மாங்குளப் பகுதியில் நடைபெறும் மோதல்கள் என்றும் படையினரின் செய்திகள் தெரிவிக்கின்றன.

22.02.98 அன்று முதல் புளியங்குளம், ஓமந்தை பகுதிகளை நோக்கி புளியங்குளம் சந்தியில் இருந்து புலிகளால் ஷெல்கள் ஏவப்பட்டன. இதனையே மாங்குளப் பகுதியில் மோதல் என்று செய்திகளில் கூறப்பட்டன.

கிளிநொச்சி நகரின் மையப் பகுதிகளில் புலிகள் நிலைகொண்டிப்பதை பற்றி வெளியான தகவல்களின் தாக்கத்தை குறைக்கவே மாங்குளம் நோக்கி பாரிய படை நடவடிக்கை என்று செய்திகளில் கூறப்பட்டது. ஆயினும் மட்டுப்படுத்தப்பட்டளவிலான படை நகர்வு முயற்சிகளே நடந்தன. ■

# ஏட்டிக்குப் போட்டியான நிதி வசூலிப்பு!

கிழக்கில் நெல் அறுவடை சூடுபிடித்துள்ளது. இம்முறை நெற்செய்கை கணிசமான அளவு நல்ல விளைச்சலைக் கண்டுள்ளது. எங்கும் ஏககாலத்தில் நெல் அறுவடை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர் பிரச்சனை புதிதாகத் தோன்றியுள்ளது ஒரு புறமிருக்க; இச்சந்தர்ப்பத்தை தமிழ் இயக்கங்களும் தவறவிடவில்லை. கங்கணம் கட்டிக்கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக நிதி வசூலிப்பில் இறங்கியுள்ளனர். நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், நெல் வாங்கும் வர்த்தகர்கள், வாகனச் சொந்தக்காரர்கள் என்று சகல தரப்பாரிடமும் நிதி வசூலிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் ரெலோ, புளொட் இயக்க அங்கத்தவர் நிதி சேகரிப்பில் தீவிரமாக இறங்கியுள்ளனர். ஒரு நெல்மூட்டைக்கு ரூபா 15/= என்று ரெலோ இயக்கத்தினரும் ஒரு உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றப்படும் நெல் மூட்டைகளுக்கு ஒரு நெல் மூட்டை என்று புளொட் இயக்கத்தினரும் வசூலிப்புச் செய்கின்றனர். நகருக்குள் நெல் ஏற்றிவரப்படும் எல்லா வழிகளிலும் ரெலோ, புளொட் இயக்கத்தவர்கள் நிதி வசூலிப்புக்காகக் காத்துக் கிடக்கிறார்கள்.

இதேவேளை புலி இயக்கத்தினரும் ஒரு மூட்டை நெல்லுக்கு ரூபா 15/=ஐ வரியாக வசூலிக்கின்றனர். ■

# தமிழ்க் கட்சிகள் மௌனம்

## வவுனியாவின் பெயர் 'வவுநியாவ'

'ஒப்பரேசன் எடிபல' இராணுவ நடவடிக்கையின் பின்னர் **பறையனாங்குளம்** என்னும் பெயர் **சப்புமல்புர** என்று மாற்றப்பட்டது. இதனை பத்திரிகைகள் சுட்டிக்காட்டியதால், சில தமிழ்க் கட்சிகளும் பெயர் மாற்றத்துக்கு எதிராக கண்டனம் தெரிவித்திருந்தன.

மேல்மட்டத்திற்கு தெரியாமல் நடந்த சம்பவம் என்றும், தனக்குக் கூட அதுபற்றி தெரியாது எனவும், இனிமேல் அவ் வாறான தவறுகள் நேரவிடமாட்டோம் என்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்திருந்தார். சமீபத்தில் வன்னிக்கு பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்றனர் படையினர். அங்கு படையினரால் வைக்கப் பட்டிருந்த பெயர் பலகைகளில் சிங்களத்திற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி வவுனியா என்பதை தமிழில் **வவுநியாவ** என்றே எழுதி வைத்திருந்தனர்.




அப் பெயர் பலகையின் புகைப்படம் பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்தது. அதனை கண்ணுற்றும்கூட தமிழ்க் கட்சிகள் எதுவும் வாய் திறக்கவில்லை. ■

# ஈ.பி.டி.பி அலுவலகத் தாக்குதல்

## புளொட் மீது குற்றச்சாட்டு

(சஞ்சீவன்)

திருமலையில் ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது 21.02.98 அன்று துப்பாக்கிப் பிரயோகமும், கைக்குண்டு வீச்சும் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக மதிலோரத்தில் நின்ற மாணவன் ஒருவர் பலியானார்.

இச் சம்பவத்திற்கு புளொட் இயக்கத்தினரே காரணம் என்று ஈ.பி.டி.பி. பா.உ மு.சந்திரகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

புலிகள்மீது பழிவிழும் என்ற நம்பிக்கையில் நடத்தப்பட்ட தாக்குதலே இதுவாகும். ஐக்கியத்தைப் பற்றி உதட்டளவில் பேசிக்கொண்டு சக இயக்கங்களின் முதுகில் குத்துவது குறிப்பிட்ட இயக்கத்தின் நீண்டகால வழக்கம் என்றும் சந்திரகுமார் எம்.பி தெரிவித்தார்.

எனினும் புளொட் இயக்கத்தினர் அச் சம்பவத்துக்கும் தமக்குப் தொடர்பில்லை என்று மறுத்துள்ளனர்.

'முரசு'க்கு கிடைத்த தகவலின்படி சி.90 ரக மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பி ஓடினர். அவர்கள் இரண்டு கைக் குண்டுகளையும் வீசினர். அதில் ஒன்று மட்டுமே வெடித்திருந்தது.

மோட்டார் சைக்கிளின் பின்புறம் சற்று நீண்ட தலை முடியுடன் இருந்தவரே துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். கைக் குண்டுகளையும் பதற்றத்துடன் வீசியெறிந்தனர். ஒரு கைக்குண்டு அலுவலக மதிலுக்கு மேலாக வீசப்பட்டது. அது வெடித்தது. இன்னொன்று வெடிக்காமல் வெளியே விழுந்து கிடந்தது. இரண்டு நிமிடத்துக்குள் தான் எல்லாம் நடந்து முடிந்தது. ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் இருந்தவர்கள் ஆயுதம் எதுவும் வைத்திருக்கவில்லை. சந்திரகுமார் எம்.பி. அங்கு நிற்கும்போதுதான் ஆயுதப் பாதுகாப்பு இருப்பது வழக்கம்.

மேற்கண்ட தாக்குதல் புலிகளால் நடத்தப்படவில்லை என்றே அறிய முடிகிறது. ■

# வீமன் தலைமையில் தாக்குதல்

## இரு தடவை ஊடுருவல்!

யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. தென்மராட்சியில் உள்ள மிருசுவிலில் 16.02.98 அன்று படையினர்மீது புலிகள் இயக்க தாக்குதல் அணியினர் தொடுத்த தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஏழு படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் ஒருவர் பலியானார்.புலிகளின் தாக்குதல் அணித் தளபதிகளில் ஒருவரான வீமன் தலைமையிலேயே மேற்கண்ட தாக்குதல் நடைபெற்றது.

இந்தியப் படை காலத்தில் தென்மராட்சியில் பல தாக்குதல்கள் வீமன் தலைமையில் நடைபெற்றிருந்தன. இந்தியப் படையினரால் வீமன் பலமாக தேடப்பட்டார்.

தற்போது வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் வீமன் தலைமையிலான தாக்குதல் அணி நடமாடுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கடற் பகுதியூடாக பிரவேசிக்கும் புலிகள் அணிகள் இந்த மாதத்தில் மட்டும் இரண்டு தடவைகள் குருநகரில் ஊடுருவி படை நிலைகள்மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

புலிகளின் அணிகளின் தாக்குதலால் ஏழு படையினர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. சிலர் காணாமல்போனதாகவும் கூறப்பட்டது. ஆயினும் முழு விபரங்களை படையினர் தெரிவிக்கவில்லை. ■

# வவுனியாவில் புலிகள்

வவுனியா நகரில் புலிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ஜெயசிக்குறுய்' படையினர் வன்னியில் புலிகளை பல திசைகளில் இழுத்து பலவீனப்படுத்த முனைகின்றனர். புலிகளும் படையினரை பல திசைகளில் இழுக்கும் திட்டத்தோடு தாக்குதல் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, யாழ் தேர்தலில் தங்கள் இயக்கப் பெயரைப் பயன்படுத்தி வாக்குக் கேட்பவர்களை மன்னிக்கப்போவதில்லை என்றும் புலிகள் இயக்கத்தினர் கூறியுள்ளனராம்.

அதனால் வவுனியாவில் படையினர்மீது மட்டுமல்லாமல், தங்கள் பெயரை பயன்படுத்தியோர்மீதும் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று தெரிகிறது. ■

# மின் கம்ப மரண தண்டனை!

மட்டக்களப்பு- சித்தாண்டியில் சென்ற 19.02.98 அன்று அப்பகுதி வாசியான வேலாயுதம் மதுரைவீரன் (49) எனும் நபருக்குப் புலி இயக்கத்தினர் மின் கம்ப மரண தண்டனை வழங்கினர். சித்தாண்டி உப தபாலகத்திற்கு முன்னாலுள்ள மின் கம்பத்தில், இவர் கட்டித் தொங்கவிடப்பட்டபின் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று கூறப்படுகிறது. மட்டக்களப்புப் பகுதியில் நீண்ட காலத்திற்குப் பின்னர் புலிகள் நிறைவேற்றிய மின் கம்ப மரண தண்டனை இதுவாகும்.

சமீப சில மாதங்களுக்கு முன்னர் சித்தாண்டிப் பகுதியில் படையினரைத் தாக்க வந்த புலி இயக்கத்தினர் படையினரின் வியூகத்திற்குள் சிக்கிக் கொண்டதில் புலிகளின் அணியிலிருந்த 32 பேரும் கொல்லப்பட்டார்கள். புலி இயக்கத்தினர் திட்டமிட்டிருந்த மேற்படி தாக்குதல் பற்றிய தகவல்களை இந்த நபரே படையினருக்குத் துல்லியமாக வழங்கியிருந்தாராம். அதனாலேயே தங்களது அங்கத்தவர்கள் 32 பேரையும், ஆயுதங்களையும் இழக்க நேரிட்டதாகவும் அதற்கமையவே இந்த மரண தண்டனை எனவும் கூறும் பிரசுரமொன்றை புலி இயக்கத்தினர் சடலத்தின் அருகில் விட்டுச் சென்றிருந்தனர்.

தனது பெற்றோருக்கு ஏற்பட்ட சுகவீனத்தைப் பார்க்கச்செல்லத் தனது படை அதிகாரி தனக்கு விடுமுறை வழங்கவில்லை என்ற விரக்தியினால் பெரும்பான்மை இனப் படைவீரர் ஒருவர் புலி இயக்கத்தினரிடம் சமீபத்தில் தப்பியோடினார். விசாரணையின் பின்னர் அவரைப் புலி இயக்கத்தினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். புலிகளிடம் தப்பியோடிய படைவீரரே மேற்படி மதுரைவீரன் புலிகள் பற்றிய துல்லியமான தகவல்களைப் படையினருக்கு வழங்கியதாகக் கூறியிருந்தாராம். அதனைத் தொடர்ந்தே புலி இயக்கத்தினர் கடந்த 02.01.98 அன்று அவரைக் கடத்திச் சென்று பின்னர் மரண தண்டனை விதித்தனர் என்று கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர் சரளமாகச் சிங்களம் பேசத் தெரிந்தவராம்.

# கண்டியில் தொடர் கைதுகள்

## போட்டியால் மாட்டிவிடுகிறார்கள்

(கண்டி நிருபர்)

கண்டியில் தலதா மாளிகைக்கு முன்பாக இடம் பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக பலர் கொடுக்கும் இரகசியத் தகவல் மூலமாக சந்தேகத்தின் பேரில் பல தமிழர்கள் கடந்த ஒரு மாதமாகக் கைது செய்யப்பட்டபோதிலும் அவை அனைத்தும் வியர்த்தமாகிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குண்டு வெடிப்பைச் சம்பந்தப்படுத்தி சிலர் வர்த்தகத் துறையில் ஈடுபட்டோரையும் சந்தேகப் பேர்வழியாக சிங்கள, ஆங்கில தினசரிகள் மூலம் வேண்டுமென்றே குற்றம் சுமத்தி காரியம் பார்க்க எத்தனித்தோர் இப்பொழுது வெட்கித் தலை குனிந்துவிட்டதாகவும் பேசப்படுகின்றது.

கண்டியில் பிரபல சமூக சேவையாளரான தமிழர் ஒருவரின் சிரேஷ்ட புதல்வரை இந்தக் குண்டு வெடிப்போடு சம்பந்தப்படுத்த எடுத்த முயற்சிகளினால் நீதி நியாயத்தை பொலிஸாருக்கும் உயர் பீடங்களுக்கும் எடுத்துக் கூற பல சட்டத்தரணிகள் எடுத்துக் கொண்ட முயற்சியை பலரும் பாராட்டுகின்றனர். இது தொடர்பாக தமது பெயரை நேரடியாகச் சம்பந்தப்படுத்தியதால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக சிங்களத் தினசரி ஒன்றின்மீது நஷ்டஈடு கோரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

மலையகத்தைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் கண்டியில் உள்ள சிங்களவர் ஒருவரின் ஹோட்டலில் வேலை பார்த்து வந்த வேளையில் அவர்கள் இருவரும் சந்தேகப்பேர் வழியாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்டனர். பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் சந்தேகத்தில் தமிழ் இளைஞர்கள் சமீபத்தில் கைதாகினர். விசாரணையின் பின்னர் அவர்கள் விடுதலையாகினர்.

லியுகேமியா என்னும் நோயினால் பீடிக்கப்பட்ட நபர் ஒருவர் தனியார் வைத்திய சாலை ஒன்றில் இரத்தம் ஏற்றிக் கொண்ட பொழுது. அவர் ஒரு புலி என்று யாரோ தகவல் கொடுத்துவிட்டனர். அவரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். இவ்வாறு கண்டியில் தொடரும் கைதுகளால் தமிழ் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ■

# பௌத்த காங்கிரஸ் வருத்தம்

"இந்நாட்டிலுள்ள இருபெரும் அரசியல் கட்சிகளான ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்த ஏனைய சில கட்சிகளும் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதைப் பற்றி எதுவிதமான கவனமும் எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவர்களைப் பற்றியே கவலைப் படுகிறார்கள். ஆகவே பெரும்பான்மையினரான பௌத்த சிங்கள 'மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒருதனி அரசியல் கட்சி அமைக்கப்பட்டேயாக வேண்டும்."

கண்டியிலுள்ள சர்வதேச பௌத்த மையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பௌத்த பிக்குகளும், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஒரேமனதாக எடுக்கப்பட்டது. ■



படிப்பகம்

www.padippakam.com

# கணக்கு விட்ட கணக்காளர்!
## புத்தி மழுங்கிய அதிகாரிகள்!

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் விவசாய காணி கூட்டுறவு அமைச்சைச் சார்ந்த ஒரு கணக்காளர், வாழ்க்கைச் செலவுப்படி 260/=ஐ மாதா மாதம் ஒழுங்காகப் பெற்று வந்திருக்கிறார். இந்த மோசடி உள்ளகக் கணக்காய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் சாதிக்கிறது மாகாண அமைச்சு.

இந்தக் கணக்காளர் 27.11.1989ல் கடமைக்கு நியமனம் பெற்றிருக்கிறார். அவர் நியமனம் பெற்ற காலத்தில் மாதாந்தம் 2975/=க்குக் கீழ்

(திருமலை நிருபர்)

அடிப்படைச் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களே வாழ்க்கைச் செலவுப்படி 260/= பெற உரித்துடையவர்கள். இவரின் ஆரம்பச் சம்பளமோ 3000/ ஆக இருந்தமையால் இந்தப் படி இவருக்கு வழங்கப்படவில்லை.

எனினும் எல்லோரும் கணக்கு விடும் மாகாண சபையில் கணக்காளர் கணக்கு விட்டால் என்ன என்று நினைத்த இவர் 1994 டிசம்பரில் தனக்கும் வாழ்க்கைச் செலவுப் படி பெற உரித்துண்டு என்று அமைச்சுக்கு விண்ணப்பம் செய்தார். என்ன ஆச்சரியம்! புத்திசாலித்தனமான அமைச்சு உடனே அனுமதி வழங்கிவிட்டது. கணக்காளர் தனது நியமனத் திகதியிலிருந்து நிலுவையுடன் வாழ்க்கைச் செலவுப் படியை 1996 டிசம்பர் வரையும் பெற்று வந்திருக்கிறார். 1997ல் புதிய சம்பளத் திட்டம் நடைமுறைக்கு வந்ததாலேயே இது நிறுத்தப்பட்டது.

இலங்கையில் எந்தக் கணக்காளருக்கும் வழங்கப்படாத வாழ்க்கைச் செலவுப் படியை இவருக்கு மாத்திரம் வழங்க உத்தரவிடுமளவுக்கு மாகாண அமைச்சின் அதிகாரிகளுக்கு 'பொது அறிவு' மழுங்கிவிட்டதா என்று கேட்கிறார்கள் ஏனைய கணக்காளர்கள்.

கணக்காய்வாளர்களால் இந்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டு முறைப்பாடு செய்யப்பட்டு மாதங்கள் எட்டு உருண்டோடிவிட்டன. இன்றுவரை அமைச்சு நடவடிக்கை எடுக்காமலிருப்பது ஏன்? இதுதான் தற்போதைய கேள்வி!

# புலிகள் நடத்திய தெருக்கூத்து



கிழக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் தெருக்கூத்துக்களை நடத்தி பிரசாரம் செய்து வருகின்றனர். சமீபத்தில் மட்டக்களப்பு படுவான்கரையில் 'தோல்வி நிச்சயம்' என்னும் தெருக்கூத்து நடைபெற்றது. அதில் ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி ஆகியோர் போன்று வேடமிட்டு நடித்தனர். அந்தத் தெருக்கூத்தின் ஒரு காட்சியே இதுவாகும்.

# இயக்கங்களின் வசூல்
## பாஸ் பெற இலஞ்சம்

மன்னாரில் தமிழ்க் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் வரி வசூலிப்பு அதிகமாகிக் கொண்டே வருகின்றது. மன்னாரில் ஓடும் அத்தனை வாகனங்களும் ரெலோ இயக்கத்திற்கு ரூபா 25 ஆயிரம் ரூபாய் கண்டிப்பாகக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டாவிட்டால் அந்த வாகனம் மன்னாரில் ஓட அவர்கள் தடை விதித்துள்ளனர். மன்னாரில் ஓடும் அத்தனை ஆட்டோக்களும் ரூபா 25 ஆயிரம் கப்பம் கட்டித்தான் ஓட்டப்படுகின்றன.

மன்னாரில் தேங்காய் விற்பனை முதற்கொண்டு முட்டை விற்பனைவரை புளொட் இயக்கத்தினரிடம் வாங்கித்தான் வியாபாரிகள் விற்க வேண்டும். தேங்காய், முட்டை போன்ற பொருட்களுக்கும் காய்கறிகளுக்கும் மொத்த வியாபாரிகளும் புளொட் இயக்கத்தினர்தான். இதனால் சில்லறை வியாபாரிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அவர்களின் அனுமதியில்லாமல் தேங்காய், முட்டை, காய்கறி போன்றவைகளை விற்பனை செய்தால் புளொட் இயக்சத்தால் தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து, மன்னாருக்கு வந்து தங்கி, நிற்கும் பயணிகள் கொழும்பு செல்வதற்கு காவல்துறையினரால் பாஸ் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த பாஸ் எடுப்பதற்கு இலஞ்சம் கட்டினால் உடனே பாஸ் பெற்றுக்கொள்ளலாம். அப்படியானால் பணமே இல்லாத ஏழைகளின் கதி என்ன?

இலஞ்சம் கொடுத்து பாஸ் பெற்றுக் கொடுப்பதில் தொலைபேசி நிலையம் வைத்திருக்கும் ஒரு பிரமுகரும், தங்கும் விடுதி நடத்தி வரும் ஒரு முதலாளியும் முக்கியமான தரகர்களாக உள்ளனர். ஒருவருக்கு பாஸ் எடுத்துக் கொடுத்தால் அவருக்கு ரூபா பத்தாயிரம் மீதி மிச்சமாகுதாம்.

எஸ்.காந்தி, மன்னார்.

# ஆங்கில அழைப்பிதழ்

தமிழ் மொழி அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளதென்பது யாவருமறிந்ததொன்றாகும். இதனை ஒழுங்காக நடைமுறைப்படுத்த வேண்டுமென தமிழ் ஆர்வலர்களும், அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகோபித்து குரலெழுப்பிக் கொண்டு வருகின்றனர்.

ஆனால் நுவரெலியா மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் நடைபெறும் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கான அழைப்பிதழ்களிலும் நிகழ்ச்சி நிரல் அறிக்கைகளிலும் முற்றாகவே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, ஆங்கில மொழியிலேயே வெளியிடுகின்றனர்.

இத்தகைய பொறுப்பற்ற செயலையிட்டு பெற்றோர்களும் தமிழ் அபிமானிகளும் பெரிதும் விசனப்படுகின்றனர். நாமே நமது மொழியைப் புறக்கணிக்கலாமா, என்று வினாத் தொடுக்கின்றனர்.

சிங்கள மொழிப் பாடசாலைகளில் இவ்வாறான நிகழ்வுகளுக்கு ஆங்கில மொழியில் அழைப்பிதழ்களை அச்சடிப்பார்களா? தமிழ்ப்பாடசாலைகளில் மட்டும் ஏன் இந்த அடிமைப்புத்தி? சம்பந்தப்பட்டவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்விடயம் சம்பந்தமாக தமிழ்க் கல்வியதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவ.

# அதிகரித்த சம்பளம் கிட்டவில்லை!

நாடெங்கிலுமுள்ள சுபீட்சத் (சமுர்த்தி) திட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு இவ்வாண்டு ஜனவரி மாதத்திலிருந்து 1000/= ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோதும், கடந்த இரண்டு மாதங்கள் முடிவடைந்து விட்ட நிலையில், அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு தமக்கு இன்னமும் கிட்டவில்லை என்று சுபீட்சத் திட்ட ஊக்குவிப்பாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஊக்குவிப்பாளர்களுக்கு தற்சமயம் மாதாந்தப் படியாக ரூபா 2000/= மாத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.


## விளம்பரப் பகுதி

இலவச, சலுகை அடிப்படையில்
Computer கல்வி பயில

DCS
DATA CONNECTION SYSTEMS (PRIVATE) LIMITED

College of Computer Technology
(British ACP Recognised Training Centre)
5வது முறையாக வழங்கப்படும்

2000 புலமைப்பரிசில் திட்டம் 1998/99

* DIP IN COMPUTER SYSTEM DESIGN
* DIP IN COMPUTER PROGRAMMING

A/L 98 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
(A/L பரீட்சையின் பின் விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகும்.)
மேலதிக விபரங்களிற்கு

DCS
No. 399 1/3, Galle Road Colombo - 04 Tel :- 597169
DCS
No. 62, Bar Road, Batticaloa Tel :- 065 - 23990
DCS
NO. 24 2nd Cross Street, Vavuniya, Tel :- 024-22013
EDMS
No. 156, green Road, Trincomalle, Tel :- 026 - 21805
DCS
NO. 124 / 2, Palay Road, Thirunelvelly Jaffna.

விண்ணப்ப முடிவு திகதி 06.03.1998 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

Member of ACTOS

தேவை
தலைநகரில் முன்னணி நிறுவனமொன்றிற்கு தமிழ் தட்டெழுத்தாளர்கள் தேவை. மொழியாற்றல் கவனிக்கப்படும். அப்பிள் கொம்பியூட்டர் கையாளக் கூடியவராயின் நன்று.
இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
AD- T98
C/O THINAMURASU
P.O. BOX-1772,
COLOMBO.

ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

சேதி தெரியுமா? கண்டியிலும், கொழும்பிலும்
FOR SCHOOL LEAVERS
தையல் வகுப்புக்கள் / சமையற்கலை CAKE ICING, CAKE MAKING, FABRIC PAINTING, FLOWER MAKING, WOOL KNITTING, PATCH WORK, தமிழ்- ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்து சிகையலங்காரம் நவீன மணப்பெண்ணலங்காரம்.
LANGUAGE BANK குறுகிய கால பேச்சு பயிற்சி
☞ ENGLISH ☞ பிரெஞ்சு ☞ ஜேர்மன், ☞ சிங்களம் ☞ RUSSIAN
COMPUTER சார்ந்த சகல உள்ளூர் பாடநெறிகள்
● PHARMACY COURSE ● MONTESSORI COURSE
● SILK SCREEN PRINTING COURSE, ORGAN SECRETERIAL COURSE ● ADVANCED/BUSINESS, PROFESIONAL ENGLISH COURSE, TOEFL
● G.A.Q./BA, YEAR 1- O/L, A/L, AAT/IAB/CIMA
பின்வரும் EPIயின் எந்த ஒரு கிளையையும் தெரிவு செய்து பயிற்சிக்கு முந்துங்கள் சுய விலாசமிடப்பட்ட கடிதவுறையுடன் தொடர்பு கொள்க. அல்லது நேரில் வருக.
EPI கண்டியில் 83, KATUGASTOTA ROAD
கொழும்பில் 316, GALLE ROAD, BAMBALAPITIYA
64-2/2, HINNIAPPUHAMY MWT, KOTAHENA. TEL: 344518
EPI-EPI-EPI-EPI-EPI-EPI-EPI-EPI-EPI-EPI-EPI

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
கல்வி நெறிகள்
★ 30 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)
மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமோ அறிந்து கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.
விரும்பும் பாடநெறி:.........................
பெயர்:.........................
முகவரி.........................
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11. Tel: 434770, 074-718592

சந்தன எண்ணெய் அடங்கிய மணங்கவர் நறுமணம் கொண்ட சுதேச மருந்துகளின் கலவை
சஞ்சீவக தயாரிப்பான "சந்தனா லேப்பய"
தேமல், பரு, தழும்பு வடு, தோல் சுருக்கம், கன்னருகில் கறுப்பாகுதல், வியர்க்குரு, மற்றும் வெய்யில் சூட்டினால் களைப்பாவதால் ஏற்படும் சோர்வைப் போக்கி தோலினை செழிப்பாக்கி கவர்ச்சியான சுந்தர தோற்றத்தை தரும். அழகுத் தோற்றத்தைப் பேணும். சவரம் செய்த பின் தடவுவதற்கும் ஏற்றது. மிகவும் சிறந்த பயன் தருவது.
மொத்த விற்பனை முகவர்கள்:
1. வ/ப எம்.டீ.பீரிஸ் லிமிடட்-22, காபோஸ் லேன், கொழும்பு-11.
2. பத்தேகம ஸ்டோர்ஸ், பூந்தோட்ட வீதி, கொழும்பு-11.
3. வ/ப கண்டி ஆயுர்வேத மருந்துக் கம்பனி யட்டி நுவர வீதி, கண்டி.
சிங்கள மற்றும் ஆங்கில மருந்துக் கடைகளில்; மற்றும் வியாபாரிகளுக்கு வி.பி.பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
விலை ரூபா 25/=
தொடர்பு:
நிமல் மருந்துச்சாலை,
இல.46, பிரதான வீதி,
வேயன்கொடை.
தொலைபேசி: 033-87567

நவீன தொழில் நுட்பம்
ஆயுள் பூராவும்
உழைக்கக்கூடிய உத்தரவாதம்
PHOENIX
பைசிக்கள்
அசல் நூறு வீதம் சீனாவின் தயாரிப்பு



FS பைசால் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்
(FAIZAL HARDWARE STORES)
74, டாம் வீதி, கொழும்பு 12. தொலை: 433727
பெக்ஸ்: 446088, E-mail - faisto@sri.lanka.net
இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவு - பீனிக்ஸ் பைசிக்கள்




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கடற்பரப்பில் அழித்தொழிப்புச் சமர்

கடற்படையினருக்கும், கடற் புலிகளுக்கும் இடையிலான இந்த ஆண்டின் முதற் கடற்சமர் வட கடலின் மடியில் வெடித்த போது, அதன் உக்கிரம் படு பயங்கரமாக இருந்தது.

மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட துணிகரமான சமர் ஒன்றுக்காக இரு வாரங்களுக்கு மேலாக கடற்புலிகளும், கடற்கரும் புலிகளும் காத்திருந்தனர்.

சுதந்திரப் பொன் விழாவுக்காக கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்ட கடற்படையினர் உட்பட பெருமளவான படையினரை வான் மார்க்கமாக மட்டும் மறுபடி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு சேர்க்க முடியாது.

எனவே, கடல் மார்க்கமாக பெருமளவான படையினர் திரும்ப வருவர் என்பதை கடற்புலிகள் ஊகித்ததுதான் கடற் சமருக்கான திட்டம் விரியக் காரணமாக இருந்தது.

போரில் படையினரை எந்தெந்த முனைகளில் தாக்கி அழிக்கலாம் என்பது பற்றியே 24 மணி நேரமும் சிந்திக்கும் புலிகளுக்கு, மேற்கண்ட ஊகிப்புக்களும், அவதானிப்புக்களும் இயல்பானவை.

**ஆனால், புலிகள் அவ்வாறு ஊகித்து பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகக்கூடும் என்பதை கடற்படையினரோ, பாதுகாப்பு உயர் பீடத்தினரோ ஊகிக்கத் தவறிவிட்டனர்.**

இதுவரை வடக்கு கடற்பரப்பில் இரு தடவைகள் கடற்படைத் தொடரணிகள்மீது பாரிய தாக்குதல்களை கடற்புலிகள் நடத்தியிருந்தனர்.

எனினும் அத் தாக்குதல்கள் கடற்படைக் கப்பல்களையும், டோரா தாக்குதல் படகுகளையும் அழிப்பதையும், சேதப்படுத்துவதையுமே பிரதானமான இலக்காக கொண்டிருந்தன.

**கடற்படையினரின் ரோந்துகளை கட்டுப்படுத்துவது, கடற்படையினருக்கு படைக்கல ரீதியான இழப்புக்களை ஏற்படுத்துவது, கடற்பரப்பில் கடற்புலிகளின் ஆதிக்கத்தை வைத்திருப்பது என்பவைதான் அத் தாக்குதல்களின் நோக்கங்களாக இருந்தன.**

கடற்பரப்பில் பல கடற்சமர்களும், கரும்புலித் தாக்குதல்களும் இதுவரை நடந்திருப்பினும், கடற்படை தொடரணிமீது மொத்தம் மூன்று தாக்குதல்களே இன்று வரை நடைபெற்றுள்ளன.

**கடற்படைத் தொடரணி என்பது போர்க் கப்பல் ஒன்று உட்பட பீரங்கிக் கப்பல்கள், அதிவேக டோரா தாக்குதல் படகுகள் போன்ற பல கடற்கலங்களை உள்ளடக்கிய அணியாகும்.**

கடற்படை தொடரணி ஒன்றை எதிர் கொள்ளக்கூடிய கடற்கலங்களான போர்க் கப்பல், மற்றும் பீரங்கிப் படகுகள் போன்றவை கடற்புலிகளிடம் இல்லை.

எனவேதான், கடற்புலிகளின் தாக்குதல்களின் பின்னர் கடற்படையினர் தொடர் அணிகளாகவே பிரதான போக்குவரத்துக்களில் ஈடுபடுகின்றனர்.

ஆயுதங்களை கொண்டு செல்வது, படையினரை கொண்டு செல்வது, கடற் சண்டையை எதிர்நோக்கிய ரோந்துக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் தொடரணியாகவே செல்கின்றனர்.

**எனினும், கடற்புலிகளின் உயிராயுத மாக விளங்கும் கடற் கரும் புலிகளின் வெடி மருந்து நிரப்பிய படகுகள் பாரிய போர்க் கப்பல்கள், பீரங்கிப் படகுகள், டோராப் படகுகள் என்பவற்றுக்கு பெரும் சவாலாக மாறி நிற்கின்றன.**

**கடற்படை தொடரணிகளை அதிவேகமாக ஊடுருவி தாக்கும் கடற் கரும் புலிகள்தான் கடற்சமரில், கடற் புலிகளின் பிரதான பலமாகவும் உள்ளனர்.**

இதுவரை இரு தடவைகள் கடற்படை தொடரணிமீது கடற்புலிகள் சமர் நடத்தியுள்ளனர்.

23.03.97 அன்று முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெற்ற தாக்குதலே கடற்படை தொடரணிமீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலாகும்.

அந்த தொடரணியில் பராக்கிரமபாகு என்னும் போர்க் கப்பலும் ஜகத்தா, ரணவீர ஆகிய பீரங்கிப் படகுகளும், அவற்றோடு நான்கு அதிவேக டோரா தாக்குதல் படகு களும் இடம்பெற்றிருந்தன.

**முல்லைக் கடலில் அத் தொடரணியை வழிமறித்து கடற்புலிகள் தாக்குதல் தொடுத்த போது பாரிய கடற்சமர் மூண்டது. முடிவில் ஒரு டோரா செயல் இழந்தது. பராக்கிரமபாகு கப்பல் சேதமானது. கடற் படை வீரர் ஒருவர் பலியானார். கடற் புலிகள் தரப்பில் நான்கு கடற் கரும்புலிகள் உட்பட ஐந்து பேர் பலியாகினர்.**

**கடற்படை தொடரணியுடன் கடற் புலிகளின் இரண்டாவது சமர் 14.08.97ல் நடைபெற்றது. முல்லைக் கடலில்தான் அச்சமரும் வெடித்தது. அச்சமரில் ஒரு டோராப்படகு சேதமாக்கப்பட்டது. இரண்டு கடற்கரும் புலிகள் பலியாகினர்.**

கடற்படை தொடரணிமீதான மேற்கண்ட இரு தாக்குதல்களிலும், சமரிலும் எதிர் பார்த்த வெற்றியை கடற்புலிகள் பெற்றிருக்க வில்லை.

அதற்கெல்லாம் சேர்த்து வைத்தாற்போல கடற்படை தொடரணிமீது மூன்றாவது தாக்குதலை கடற்புலிகள் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர்.

**கடற்படை தொடரணியுடன் நடைபெற்ற முதலிரண்டு கடற்சமர்களும், மூன்றாவது கடற்சமரை துல்லியமாகவும், பாரியளவிலும் திட்டமிட்டு நடத்துவதற்கான கள அனுபவமாக கைகொடுத்திருக்கிறது.**

முதலிரு கடற்சமர்களின் இலக்கு கடற் படை தொடரணியில் வந்த கடற்கலங்கள். சமரின் நோக்கம் கடற்கலங்களுக்கு பாரிய அழிவைக் கொடுப்பது.

பெப்ரவரி 22ம் திகதி நடைபெற்ற கடற் சமரின் இலக்கும் கடற் தொடரணியும் அதன் கடற்கலங்களும்தான். ஆனால் நோக்கம் மட்டும் வேறு.

**பெருமளவான படையினரை அழித் தொழிப்பதுதான் நோக்கம். கடற் தொடரணியில் வரும் கடற்கலங்களை இலக்காக கொண்டு அழித்தொழிப்பது மூலம், அதற்குள் உள்ள பலநூறு படையினரை அழித்தொழிப்பதே நோக்கமாகும்.**

முல்லைத்தீவு, தாண்டிக்குளம், மன்னகுளம் போன்ற பகுதிகளில் பாரிய அழித்தொழிப்பு தரைச் சமர்களைப் புலிகள் நடத்தியிருந்தனர்.

கடற்பரப்பில் நடைபெற்ற முதலாவது பாரிய அழித்தொழிப்பு சமர் பெப்ரவரி 22ம் திகதி நடைபெற்ற சமர்தான்.

சுதந்திர பொன்விழா கொண்டாட்டத்துக்கு சென்ற படையினரில் கடல் மார்க்கமாக வரும் படையினரை தாக்குவது என்று முடிவு செய்யப்பட்ட பின்னர் திருமலை துறைமுகப் பகுதியில் கடற் புலிகள் தகவல் திரட்டத் தொடங்கிவிட்டனர்.

**பொன்விழாக் கொண்டாட்ட அணிவகுப்புக்காக கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட டாங்கிகளும், படையினரும் திருமலை கடற் படைத் தளத்தில் புறப்படத் தயாராகி நிற்கும் தகவல் கடற்புலிகளால் திரட்டப்பட்டுள்ளது.**

அதனையடுத்து கடற் புலிகளும், கடற் கரும்புலிகளும் தயாராகிவிட்டனர். முல்லையில் உள்ள கடற்புலித் தளத்தில் தாக்குதல் அணி தயாராக காத்திருந்தது.

கடற்படைத் தொடரணி திருமலையில் இருந்து புறப்படும் செய்திக்காகவே கடற் புலிகளின் அணிகள் காத்திருந்தன.

**சமரின் பாரிய பரிமாணம் கருதியும், அழித்தொழிப்பு சமர் என்பதாலும் முன்னெப் போதும் இல்லாதளவுக்கு அதிகளவான கடற்கரும் புலிகள் தெரிவாகினர்.**

வெடி மருந்து நிரப்பப்பட்ட ஆறு படகுகளில் மொத்தம் பன்னிரண்டு கடற்கரும் புலிகள் தயாராய் இருந்தனர்.

**கடற்கரும் புலிகளில் ஆறுபேர் பெண்கள், ஆறுபேர் ஆண்கள். சம அளவில் பங்கு பெறும் வகையில் தெரிவு இடம்பெற்றிருந்தது.**

கடற் புலிகள் எதிர்பார்த்த தருணம் வந்தது. பெப்ரவரி 22ம் திகதி காலை 8 மணியளவில் திருமலையில் இருந்து கடற்படைத் தொடரணி புறப்பட்டது.



தொடரணியில் மொத்தம் எத்தனை கடற் கலங்கள் இடம் பெறுகின்றன, எந்தெந்த கடற் கலங்கள் இடம்பெறுகின்றன போன்ற சகல விபரங்களும் கடற் புலிகளுக்கு கிடைத்துள்ளன.

**மொத்தம் ஏழு கடற் கலங்கள் புறப்பட்டன. போர்க் கப்பல் ஒன்று, பீரங்கிப் படகுகள் இரண்டு, இரண்டு அதிவேக டோரா படகுகள், தரையிறக்க கப்பல் ஒன்று, இராணுவ சரக்குக் கப்பல் ஒன்று ஆகியனவே தொடரணியாக புறப்பட்டன.**

கடற்படை தொடரணியை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து அதிரடியாய் எதிர் கொண்டு தாக்குவது என்று கடற்புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

பருத்தித்துறை கடற்பரப்பை சமருக்கான கடற்களமாக தெரிவு செய்தமைக்கு காரணம் இல்லாமல் இல்லை.

முல்லைத்தீவு கடலில் இருந்து பருத்தித் துறைவரை கடற்பரப்பு நேராக விரிந்து செல்கிறது.

எனவே, வேறு படகுகளின் நடமாட்டங்கள் இருந்தால் கடற்படைத் தொடரணியின் பார்வையில் பட்டுவிடும்.

கடற்புலிகளின் தாக்குதலை எந்நேரமும் எதிர்பார்த்தபடி வெகு ஜாக்கிரதையாக நகர்ந்து வரும் தொடரணிக்கு சிறு சந்தேகம் ஏற்பட்டால் கூட உஷாராகிவிடும்.

அதுதவிர முல்லைக் கடற்பரப்பில்தான் ஏற்கனவே இரண்டு தடவை கடற்படை தொடரணி தாக்கப்பட்டது. முல்லைத்தீவில்தான் கடற்புலிகளின் தளம் இருக்கிறது என்பதும் கடற்படையினருக்கு தெரியும் அதனால் மிக மிக எச்சரிக்கையாகவே முல்லைக் கடற்பரப்பில் பயணம் செய்வர்.

**எனவே-கடற்படையினர் எதிர்பாராத இடத்தில், கடற்படையினருக்கு தமது நடமாட்டம் தெரியாத முனையில் வைத்து தாக்க கடற் புலிகள் திட்டமிட்டனர்.**


தரையமைப்பைப் போலவே கடற்பரப்பிலும் சூட்சுமங்கள் உண்டு. கடற்சமருக்கு அந்த சூட்சுமங்களில் ஒன்றையே கடற்புலிகள் பயன்படுத்தினர்.

அது என்ன சூட்சுமம்?

**விரிந்து செல்லும் முல்லைக் கடல் பருத்தித் துறையில் (முனையில்) சடுதியாக மேற்குப்புறம் நோக்கி 90 பாகை சரிவாகத் திரும்புகிறது.**

**அந்த திருப்ப மறைவில்தான் கடற் புலிகள் காத்திருந்தனர்.**

முல்லையிலிருந்து கடற்படை தொடரணி புறப்பட்ட செய்தி அறிந்ததும், கடற் புலிகள் தமது தளத்தில் இருந்து ராடர்கள் மூலம் தொடரணியின் நகர்வை கண்காணித்தபடியே இருந்தனர்.




## திருப்பத்தில் காத்திருந்த கடற் கரும்புலிகள்

முல்லைக் கடற்பரப்பை தொடரணி சமீபித்தபோது மேலும் இரண்டு டோராக்கள் சேர்ந்து கொண்டதையும் கடற்புலிகள் தமது ராடர்களில் கவனித்துக் கொண்டிருந்தனர்.

முல்லைக் கடற்பரப்புக்கு கடற்படைத் தொடரணி வருவதற்கு முன்னரே கடற்கரும் புலிகளும், கடற் புலிகளும் பருத்தித்துறை கடலுக்கு சென்று திருப்ப மறைவில் காத்திருந்தனர்.

**பின்னிரவுக் காலம் என்பதால் வானத்தில் தாமதமாகத்தான் நிலவு முளைக்கும். கடற்படைத் தொடரணி பருத்தித்துறை கடலில் நுழையும் போது கடற்பரப்பில் இருள் சூழ்ந்திருக்கும். எனவே தாக்குதல் நடத்துவதும் சுலபம். அந்தக் கால நிலைச் சாதகத்தையும் கடற்புலிகள் தமது கவனத்தில் எடுத்திருக்கின்றனர்.**

இரவு 7.15 மணிக்கு பருத்தித்துறைக் கடற்பரப்பின் திருப்பத்தை தொடரணி அடைந்த போது கடற்புலிப் படகுகள் தாக்குதலை ஆரம்பித்தன.

போக்குக் காட்டிய கடற்புலிப் படகுகள் சிலவற்றை டோராப்படகுகள் துரத்தின. அவற்றை கடற்புலிப் படகுகள் ஒருபுறமாய் இழுத்துக் கொண்டிருக்கையில், இராணுவ சரக்கு கப்பலான வலம்புரியை நோக்கிப் படு வேகமாக பாய்ந்து சென்ற கடற்கரும்புலிப் படகு ஒன்று 8 மணியளவில் மோதியது. வலம்புரி சேதமானது.

அதன் உள்ளிருந்து படையினர் பலர் வெடி அதிர்வில் பலியாகினர். சிலர் கடலில் குதித்தனர்.

**இச் சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் போர்க்கப்பல் தப்பிச் சென்றுவிட்டது. அதனை நெருங்க கடற் புலிகளால் இயலவில்லை. போர்க் கப்பலுக்கு துணையாக டோராப் படகுகள் வியூகம் வகுத்து சமரில் ஈடுபட்டன. அச்சமரில் இரண்டு கடற் கரும் புலிப் படகுகள் கடல் நடுவே வெடித்துச் சிதறின.**

அதேசமயம் தரையிறக்க கப்பலான பவத்தமீது இன்னொரு கடற் கரும்புலிப் படகு பாய்ந்து மோதியது. கப்பலின் ஒரு பகுதியே சேதமானது. அதனால் இன்னொரு கரும்புலிப் படகு கப்பலின் இன்னொரு புறத்தில் மோதி இடிக்க, கப்பல் வெடித்துச் சிதறி எரியத் தொடங்கியது.

கடற்புலிகளின் சண்டைப் படகுகள் கடற்படை தொடரணியில் மீதமுள்ள கடற்கலங்களை தாக்கி அழிக்க முற்பட்டன.

எனினும் பீரங்கிக் கப்பல்களில் இருந்தும், டோராக்களில் இருந்தும் சரமாரியாக தாக்கிய படி காங்கேசன்துறை நோக்கி கடற்படை தொடரணி விரையத் தொடங்கியது.

கடற் புலிகளின் படகுகள் அவற்றை தமது வியூகத்திற்குள் வைத்திருந்து தாக்கிக் கொண்டிருந்தன.

அதனையடுத்து அதிகாலை 2 மணியளவில் திருமலையில் இருந்து நான்கு அதிவேக டோரா படகுகள் கடற்படையினருக்கு உதவிக்கு விரைந்தன.

அவற்றில் ஒரு டோராவுடன் மோத முற்பட்ட கரும்புலிப் படகின் ஓட்டி டோராவில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலால் பலியானார். அதிலிருந்த இன்னொரு கரும் புலி கடற்புலிகளால் மீட்கப்பட்டார். பொழுது புலரத்தொடங்கியதால் அதிகாலை இரண்டு மணியளவில் கடற்புலிகள் சண்டையை நிறுத்திவிட்டு திரும்பினார்கள்.

கிட்டத்தட்ட எட்டு மணிநேரமாக நடை பெற்ற கடற்சமரில் கடற்புலிகள் எவரும் பலியாகவில்லை. பலியானவர்கள் பதினொரு பேரும் கடற்கரும் புலிகளேயாவர்.

கடற் கரும்புலி தாக்குதல் அணியை தலைமை தாங்கிச் சென்றவர் தளபதியான கடற் கரும்புலி லெப்டினன்ட் கேனல் சுரன். (பாலசுந்தரம் கோபாலசுந்தரம் மன்னம்பிட்டி, பொலனறுவ).

கடற்படையினர் உட்பட படைத்தரப்பில் நூறு பேருக்கு மேற்பட்டோர் பலியானதாக சுதந்திரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. 52 பேர் வரை பலியானதாக படைத்தரப்பு உடனடியாக ஒப்புக்கொண்டிருந்தது.

வடக்கு-கிழக்கு கடலில் இதுவரைகால கடற்சமரில் பாரியளவான படையினர் பலியான முதலாவது கடற்சமர் இதுவேயாகும்.

**வெடித்து தீப்பிடித்த 'பவத்த' தரையிறக்க கப்பலில் இரண்டு யுத்த டாங்கிகளும் இருந்துள்ளன. சீனத் தயாரிப்பான யுத்த டாங்கிகளே அவை என்றும், சுதந்திரப் பொன்விழா அணிவகுப்புக்காக கொண்டு வரப்பட்டு திருப்பி எடுத்துச் செல்லப்பட்டன என்றும் கூறப்படுகிறது.**

தப்பிய கப்பலில் 200படையினர் இருந்தனர் என்று முதலில் கூறப்பட்டது. பின்னர் 400 படையினர் இருந்தனர் என்று கூறப்பட்டது.கடற்சமரில் தமக்கு ஏற்பட்ட இழப்பின் தாக்கத்தை குறைத்துக் காட்டு வதற்காக, தப்பிச் சென்ற படையினரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியும் கூறக்கூடும்.

கடற்சமர் தொடங்கியது 22ம் திகதி இரவு ஏழு மணிக்கு. 23ம் திகதி காலை எட்டு மணிக்கு புலிகளின் குரல் செய்தியில் மிகத் தெளிவாக தம்மால் தாக்கப்பட்ட கப்பல்களின் பெயர்கள் புலிகளால் அறிவிக்கப்பட்டன.

**எனவே, துல்லியமான தகவல், கவனிப்பு என்பவற்றின் பின்னரே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.**

ஆனால், படைத்தரப்பு 23ம் திகதி முழுவதும் வலம்புரி கப்பலைக் காண வில்லை என்று தேடிக்கொண்டிருந்தது. அவ்வாறே செய்திகளும் வெளியிடப்பட்டன.

கடற்சமரின் பின்னர் வழக்கம்போல படைத்தரப்பினர் வெளியிட்ட செய்திகளில் முல்லையில் கடற்புலி தளம் தாக்கப்பட்டதாகவும், பல கடற்புலிகள் பலி எனவும் கூறப்பட்டது. ஆனால் அச் செய்திகளில் உண்மை இருப்பதாக தெரியவில்லை.

எப்படியோ, இந்த ஆண்டின் கடற் சமரை கடற் புலிகள் வெற்றிகரமாக தொடக்கிவைத்துள்ளனர்.

**தரையில் மட்டுமன்றி கடற்பரப்பிலும் இந்த ஆண்டில் பலத்த பின்னடைவுகளை படைத்தரப்பினர் சந்தித்துள்ளனர்.**

இவற்றில் இருந்து மீள்வதற்கு படைத் தரப்பினர் கையாளப்போகும் உத்திகள் என்ன? பார்க்கலாம்!

நாரதர்

---

## அதிரடி அய்யாத்துரை



**"கொழும்பில் உள்ள** 'கயவர்கள்' பிரிவினைக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள்," என்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அந்த நாள் செயலாளர் விஜயதாசா கூறியிருந்தார். 'ராஸ்கல்' என்று ஆங்கிலத்தில் செப்பித் துப்பினார். குமாரர் மட்டும்தான் பதிலடி கொடுத்திருந்தார். பிற தமிழ்க் கட்சிகள் மூச்! பிரிவினை பற்றிப் பேசுவோர் கயவர்கள் என்றால், அதற்காக கருத்துக் கணிப்பு அறிவித்த கூட்டான கட்சி முதற்கொண்டு, முந்திக் கருவி ஏந்திய கட்சிகள்வரை அது பொருத்தமான தொப்பிதானே!

**மாகாண சபைத் தேர்தல்** நடந்தால் வடக்கு-கிழக்கில் கூட்டான கட்சித் தலைவர் போட்டியிடுவார் என்று சொன்னேன் அல்லோ? அது தப்புங்கோ. சேனாதியார்தான் களத்தில் இறங்கப் போகிறாராம். குட்டித் தேர்தலின் பின்னர் எட்டி எட்டி உற்சாக ஏணியில் ஏறத் தொடங்கியிருக்கினம்.சறுக்காவிட்டால் சரிதான்.

**யாழ் மாநகரத்தில்** பொறுப்பை ஏற்க முன்னர் ரெண்டு எழுத்தாரின் அனுமதியைப் பெற தூதுவிடப்பட்டதாம். பதில் சாதகமாக இல்லாமையால்தான் அதிகாரத்தரப்பார் குறிப்பிட்ட தினத்தில் அம்மணியார் பதவி ஏற்க முடியவில்லையாம்.

**மகா சிவராத்திரிக்கு** பொது விடுமுறை அறிவிக்கக் கோரினால் எத்தனை யோசனை பாத்தியளோ? நாட்டில் விடுமுறை கூடிப்போச்சு என்று குறைத்ததால் கண்ட பலன் என்ன? பொன் விழாவுக்கு எதிர்பாராத விடுமுறையாக எத்தனை நாள் அநியாயமாகிப் போச்சுது! குறைந்த விடுமுறைகளால் கிடைத்த பலனைவிட பலமடங்கு நஷ்டமல்லோ! போர் மூண்ட நாட்டில் எதுதான் பொசியும்?

**அரச பத்திரிகை** ஆசிரியரை ஏக வசனத்தில் திட்டிவிட்டாராம் கிழக்கின் தனித்துவ அமைச்சர். அதனால்தான் குறிப்பிட்ட பத்திரிகையில் மறைமுகமாக 'பத்திரிகையாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே!' என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். போக்குவரத்துக்கு பொறுப்பானவருக்கு சாதகமாக செய்திகள் வருகின்றன என்றும் தனித்துவ தலைவர் எகிறியதாகவும் குறிப்பிட்ட பத்திரிகை வட்டாரம் கூறுகிறது. தன் செய்திபோடாவிட்டால் "கொளுத்துவேன்" என்கிறார் தலைவர். அப்படிப் பார்த்தால் தமிழ்க் கட்சிகள் மூன்று நாட்களுக்கு ஒரு முறை கொளுத்த வேண்டியிருக்கும். அக் கட்சிகளின் செய்திகளை மூன்று நான்கு நாட்கள் வைத்திருந்துதான் போடுவது வழக்கம் என்றார் அங்குள்ள நண்பர் ஒருவர். செய்தியையும் கொடுத்துவிட்டு எந்தக் கோணத்தில், எந்த சைஸில் வரவேண்டும் என்றும கட்டளை போடுவாராம் தனித்துவ கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர்.

**'புளியங்குளம்'** என்று புதிதாக எழுதி, விரும்பிய இடத்தில் வைத்திருந்தவை. தமிழ்க் கொலையும், தமிழுக்குத் தரப்பட்ட இடமும் விஷயத்தை விளக்கிப் போட்டுது. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல் என்று தமிழில் ஒரு பழமொழி இருக்குது. எல்லாம் கிடக்க, பெயர்ப் பலகையில் தமிழுக்கு சம இடம் தரப்படவில்லை. சிறிய எழுத்தாக ஆங்கில மொழியுடன் சம இடம் தரப்பட்டிருந்தது. அதைப் பார்த்த ஒருத்தர் சொன்னது இது: "புளியங்குளத்தில் நிற்கிறபடியால்தான் தமிழ் உந்த அளவுப் பிரமாணத்திலாவது இருக்குது. தொடர்ந்து போகப்போக உதவும் சிறிதாகி கடைசியில் பூதக் கண்ணாடி வைச்சுத்தான் தேடவேண்டிய கட்டம் வரும்." என்றார். சனம் உப்பிடி நினைக்கும் என்பதுகூட சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு தெரியேல்லையோ?!.

**குண்டு வெடிப்பு** விளைவுகளைப் பார்க்க தடை வந்தது நல்லதுதான். ஆனால் சொல்லப்பட்ட காரணம்தான் உதைக்குது. வன்முறை எண்ணம் சிறுவர்களுக்கு வராமல் தடுப்பதுதான் நோக்கம் என்றனர். பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டப சுதந்திரதின கண்காட்சியில் பள்ளிச் சிறுவர்களுக்கு விதம் விதமான ஆயுதங்கள் காட்டப்பட்டன. டாங்கியில்கூட ஏறி இருந்து பார்க்கவும் அனுமதிக்கப்பட்டதாம். படையில் சேரும் ஆர்வத்தை தூண்டும் முயற்சிதானே! கொம்பனித் தெரு குண்டு தாக்குதலில் படையினர் பலியான காட்சிகளை தொலைக் காட்சிகள் பயங்கரமாகக் காண்பித்தன. படையில் சேரும் ஆர்வத்தை அப்படியான காட்சிகள் கெடுக்கக் கூடும் என்று நினைச்சுத்தான் தடைச்சட்டம் வந்ததோ? என்றும் சில செய்தியாளர்கள் சந்தேகப்படுகினம்.

**இந்தியப்** பொதுத்தேர்தலை முன்னிட்டு வெளியான ஜோக்குகளில் ஒன்று இது:

***நீதிபதி:*** உன்னுடைய கடைசி ஆசை என்ன?

***கைதி:*** ஒரே ஆள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு பிரதமராக இருக்கிறதைப் பார்க்கணும் எஜமான்!



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

170

# கைதான ரோகன விஜயவீரவும் தயாரான கனத்தை மயானமும்

கட்டுக்கோப்பான அமைப்பை கட்டியமைப்பது மட்டும் போதாது. அதனைத் தொடர்ந்து தக்கவைப்பதும் முக்கியம்.

1971ல் ஆயுதமேந்திய கிளர்ச்சி அடக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அப் புயலில் வீழ்ந்த அமைப்பை மறுபடியும் கட்டியெழுப்பினார்கள் ரோகன விஜயவீரவும், அவர் தோழர்களும்.

அது ஒரு சாதனைதான். உறுதியான உழைப்பின் பயன்தான். கடின முயற்சியின் அறுவடைதான்.

1971 காலம்வரையான வரலாற்றில் இலங்கையில் முதலாவது பாரிய ஆயுதக் கிளர்ச்சியை நடத்திய இயக்கம் ஜே.வி.பி. அதுபோல மாபெரும் அழிவில் இருந்து மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு தயாரான முதலாவது இயக்கமும் ஜே.வி.பி. தான்.

அதேசமயம் அளவுக்கு மீறிய உறுப்பினர் சேர்க்கையால் பாரிய நாசத்தை சந்தித்த அனுபவத்தையும் ஜே.வி.பி.யிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம்.

### உள்வாங்கல்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து எழுந்த இந்திய எதிர்ப்பு அலையை பயன்படுத்தி ஆயிரக்கணக்கான புதிய உறுப்பினர்களை உள்வாங்கியது ஜே.வி.பி.

வேலை இல்லாத் திண்டாட்டத்தால் விரக்தியுற்றிருந்த இளைஞர்கள் ஜே.வி.பி. நோக்கிச் சென்றனர்.

தமக்கு வேலை வழங்க முடியாத சமூக அமைப்புமீதும், முதலாளித்துவ அரசுமீதும் அவர்களுக்கு இருந்த கோபம், ஆயுதம் ஏந்தும் பாதையில் செல்ல அவர்களைத் தூண்டியது.

ஆனால், அரச படைகளின் தேடுதல் வேட்டைகளுக்குத் தப்பி தலைமறைவாக இருந்த ஜே.வி.பி. தலைவர்களால் தமது இயக்கத்தில் புதிதாக சேர்ந்து கொண்டிருந்த உறுப்பினர்களை கட்டுப்பாட்டுடன் வளர்க்கவோ, கொள்கை அடிப்படையில் பயிற்றுவிக்கவோ சந்தர்ப்பம் இருக்கவில்லை.

விரைவாக ஒரு ஆயுதக் கிளர்ச்சியை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றும் அவசர மனோபாவமும் ரோகனாவிடம் இருந்தது.

அதனால் புதிய உறுப்பினர்களை ஆயுதபாணியாக்குவதில் ஆர்வம் காட்டப்பட்டதே தவிர, அமைப்பின் கொள்கைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் விசுவாசமானவர்களாக பயிற்றுவிப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை.

அமைப்பின் தாங்கும் சக்திக்கு மீறிய வகையில் உறுப்பினர் திரட்டப்பட்டமை, அமைப்பின் கட்டுப்பாட்டை மிக மோசமாக பாதிக்கத் தொடங்கியது.

### அதே அனுபவம்

1983ல் இனக் கலவரத்தின் பின்னர் ஏற்பட்ட படுவேகமான ஆட்சேர்ப்பால் தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட் போன்ற அமைப்புக்களின் பிற்கால வீழ்ச்சிக்கு வித்திடப்பட்டது.

புலிகளும், ஈரோசும் மட்டும்தான் அந்த அலைக்குள் அடிபட்டுப்போகாமல் நிதானமான ஆட்சேர்ப்பில் ஈடுபட்டனர். தங்கள் அமைப்பின் தாங்கும் சக்திக்கு ஏற்றவகையில் ஆட்களைத் திரட்டினர். அதனால்தான் கட்டுப்பாட்டில் தளர்வை ஏற்படுத்தாமல் கெட்டியான அமைப்பாக புலிகள் வளர முடிந்தது.

கண்டபடி உறுப்பினர்களை திரட்டிவிட்டு அவர்களுக்கு ஊட்டமான உணவு கொடுக்கக்கூட முடியாமலும், உடுதுணி கூட தரமுடியாத நிலையிலும் பஞ்சப்பாட்டு பாடிய இயக்கங்களும் உண்டு. அதனால் பரட்டைத் தலை, கசங்கிக் கந்தலான உடை, கழுத்தில் ஒரு கறுப்பு நூல், அதுதான் புரட்சிகரத் தோழர்களுக்கு அடையாளம் என்று நினைத்துக் கொண்டு உறுப்பினர்களும் அலைந்தனர்.

புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களுக்கு மக்களிடம் நன்மதிப்புக் கெட்டதற்கும், இயக்கங்கள் என்றால் 'காடையர்கள், வேலையற்றதுகள், பிழைக்க வழியில்லாததுகள்' என்று இளப்பமாக நினைக்கப்படவும், ஏனைய இயக்கங்களால் சரியாகப் பராமரிக்க முடியாத இயக்க உறுப்பினர்களின் தோற்றங்களும் நடைமுறைகளும் ஒரு பிரதான காரணம் எனலாம்.

அதே அனுபவம்தான் 1987ன் பின்னர் ஜே.வி.பி.க்கும் ஏற்பட்டது.

### படையினருக்கு எச்சரிக்கை

பெண்களுடன் வம்புக்குப் போவது, ஆயுதத்தைக் காட்டி மிரட்டுவது, ஆண்கள் சிகரெட் பிடித்தால் உதடுகளை பிளேட்டால் கீறுவது, கொள்ளை அடிப்பது என்று தங்கள் இஷ்டப்படியெல்லாம் நடந்து கொள்ளத் தொடங்கினர் ஜே.வி.பி.யின் புதிய உறுப்பினர்கள்.

அதனால் மக்களும் ஜே.வி.பி.யை வெறுக்க ஆரம்பித்தனர். மக்களிடம் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினருக்கு தகவல்கள் பறக்க ஆரம்பித்தன.

ஹர்த்தால்கள், பகிஷ்கரிப்புக்கள், கொலைகள், கொள்ளைகள், நாள் ஒரு சட்டம் என்று மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு நெருக்கடிகள் தொடர்ந்தன.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல ஜே.வி.பி.யினரால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அரசின் படைகளில் உள்ள அனைவரும் உடனடியாக விலகிக் கொள்ளவேண்டும். தவறினால் தண்டிக்கப்படுவார்கள். என்று எச்சரித்தது அறிக்கை.

எச்சரிக்கையை உறுதிப்படுத்துவதற்காக படை அதிகாரிகள் சிலரது குடும்பத்தினர் மீது கைவைத்தனர். சுட்டுக் கொன்றனர்.

அடையாள நடவடிக்கை என்றளவில் ஜே.வி.பி. செய்த அந்த நடவடிக்கையை ரஞ்சன் விஜயரத்தினா, பிரேமதாசா போன்றோர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

படைவீரர்களின் குடும்பங்கள் மூன்றில் ஜே.வி.பி. கைவைத்தால், படைவீரர்களின் ஆறு குடும்பங்களை அரச சார்பு ஆயுதபாணிகள் போட்டுத் தள்ளினார்கள்.

அத்தனை பழியும் ஜே.வி.பி.யின் தலையில் விழுந்தது. ஜே.வி.பி.க்கு ஆதரவாக படைக்குள் இருந்த சிப்பாய்கள்கூட ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டினால்தான் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

படை அதிகாரிகளின் குடும்பங்களை கொழும்பில் பாதுகாப்பாக தங்கவைத்தது அரசாங்கம். கொழும்பின் ஐந்து நட்சத்திர விடுதிகள் பலவற்றில்கூட படை உயர் அதிகாரிகளின் குடும்பங்கள் தங்கியிருந்தன.

ஜே.வி.பி.க்குள் அரச உளவாளிகளும் புகுந்து கொண்டனர். ரோகன விஜயவீர உட்பட முக்கிய தலைவர்களின் நடமாட்டம், தங்குமிடம் போன்ற தகவல்களை உளவாளிகள் திரட்டத் தொடங்கினர்.

தகவல் கொடுப்பவர்களுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் பணமும், வெளிநாட்டுக்குச் செல்லும் வசதியும் செய்து தருவதாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டது.

ஒருபுறம் ஜே.வி.பி.யை பேச்சுக்கு அழைத்துக் கொண்டிருந்தார் பிரேமதாசா. மறுபுறம் ஜே.வி.பி.யை பூண்டோடு ஒழிக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

### சுற்றிவளைப்பு

ஜே.வி.பி. மற்றும் ஜே.வி.பி.யின் வெகுஜன அமைப்பான டி.ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைமையகம் பற்றிய துல்லியமான தகவல்கள் பாதுகாப்பு தரப்புக்கு கிடைத்தன.

ஜே.வி.பி.க்கு எதிரான ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழுவினர் தலைமையகத்தை முற்றுகையிட்டனர். அங்குதான் ஜே.வி.பி.யின் பொருளாளர் குணரத்ன வணசிங்க என்பவரும் இருந்தார்.



அரசியல் கருத்தரங்கில் விஜயவீர

வசமாக மாட்டிக் கொண்ட நிலையில், அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் ஆயுதங்களை ஒப்படைத்தார் குணரத்ன வணசிங்கா.

அதனையடுத்து ஜே.வி.பி.யின் அரசியல்பீட உறுப்பினர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி.க்குள் ஊடுருவிய உளவாளிகளால்கூட ரோகன விஜயவீரவின் சரியான இருப்பிடத்தை அறிய முடியவில்லை.

அரசியல் பீட உறுப்பினர்களுக்கு மட்டுமே ரோகன விஜயவீரவின் மறைவிடம் தெரிந்திருந்தது.

அதனால் அரசியல் பீட உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்தால் போதும், ரோகனாவை மடக்கி விடலாம் என்று திட்டம் தீட்டினர்.

புரட்சிகர சித்தாந்தப்படி கட்டியமைக்கப்படும் இயக்கங்களின் தலைமைப்பீடம் மத்திய கமிட்டி என்று அழைக்கப்படும்.

மத்திய கமிட்டி எடுக்கும் முடிவுகளை அமுல் நடத்தவும், மத்திய கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்கு இடையே கட்சிக்கு தலைமை கொடுக்கவும், மத்திய கமிட்டிகூட முடியாத நிலையில் கொள்கை முடிவுகளை எடுக்கவும் கூடிய உறுப்பு அரசியல்பீடம்.

மத்தியகமிட்டி உறுப்பினர்கள் சிலரையும், மத்தியகமிட்டிப் பொதுச் செயலாளரையும் உள்ளடக்கிய உறுப்பே அரசியல் பீடமாகும். மத்திய குழுவில் 40 பேர் இருந்தால், அரசியல் குழுவில் ஏழுபேரோ ஒன்பது பேரோ இருக்கலாம். அடிக்கடி கூடிப்பேச வசதியான தொகையினராக இருப்பதும் நெருக்கடியான காலங்களில் மிக முக்கியம். இல்லையெனில் கூண்டோடு கைதாகும் ஆபத்தும் நேரும்.

ஜே.வி.பி. அரசியல் பீட உறுப்பினர்களில் ஒருவரான பியதாச ரணசிங்க ஒருங்கிணைப்பு நடவடிக்கைக் குழுவால் கைது செய்யப்பட்டார். அவருக்கு 40 வயது.

1980ல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர். இயக்கப் பெயர் தேவ பண்டாரகே.

தேவ பண்டாரகேவை உளவாளிகள் காட்டிக் கொடுத்தனர், அவரை சித்திரவதை செய்து ரோகனாவின் மறைவிடத்தை கண்டு பிடித்தனர். நுவரெலியா உலப்பனவில் சென் மேரீஸ் தோட்டத்தில் ரோகனா மறைந்திருப்பது தெரிந்ததும் பாதுகாப்பு தரப்புக்கு தலைகால் புரியாத சந்தோசம். உடனே பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சனுக்கு தகவல் பறந்தது.

நம்பகமான ஆட்களுடன் சென்று ரோகனாவை கைது செய்ய வேண்டும். விசாரித்துவிட்டு கொன்றுவிடவேண்டும் என்று முடிவு செய்தனர். ரஞ்சன் பச்சைக் கொடி காட்டிவிட்டார். பிரேமதாசாவிடம்கூட ரஞ்சன் முழுத் தகவல்களையும் உடனடியாகத் தெரிவிக்கவில்லை.

### பிடிபட்டார்

1989 நவம்பர் 12ம் திகதி.

சென்மேரிஸ் தோட்ட வீடு இரகசியமாக கண்காணிக்கப்பட்டு, ரோகன விஜயவீர வீட்டில் இருப்பதை உறுதி செய்து கொண்டனர்.

கார் ஒன்றில் அரசியல் பீட உறுப்பினர் முத்து பண்டாரகேயை முன்னால் அனுப்பினார்கள்.

## நடந்தது ஒன்று சொன்னது இன்னொன்று

அப்போதுதான் மதிய உணவை முடித்துவிட்டு தினசரி ஒன்றை புரட்டிக் கொண்டிருந்தார் ரோகனா. மனைவி பிள்ளைகள் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

கார் வரும் சத்தம் கேட்டதும் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். முத்து பண்டாரகேயின் முகம் தெரிந்ததால் வீட்டை விட்டு வெளியே வந்தார் ரோகனா.

அப்போது அருகில் இருந்த குன்றுகளின் மறைவில் இருந்து சாதாரண உடையில் கையில் ஆயுதங்களுடன் திமுதிமுவென்று பலர் வந்து கொண்டிருப்பதை ரோகனா கண்டார்.

'ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு' தான் வருகிறது என்பது ரோகனாவுக்கு தெரிந்து விட்டது.

ஓடிவிடலாமா என்று பார்த்தார். நாற்புறமும் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது தெரிந்துவிட்டது.

எதிர்ப்பதோ, தப்பி ஓடுவதோ முடியாத காரியம் என்பதால் சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்ளத் தீர்மானித்த ரோகனா, "நீங்கள் கண்டியில் இருந்தா வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

கண்டியில் பிரேமதாசா உடுகம்பொலவின் முகாம் இருந்தது. ஜே.வி.பி.யினரை டயர்களில் போட்டு எரித்தது உட்பட பயங்கர வேட்டைகள் நடத்தியவர் பொலிஸ் அதிகாரி பிரேமதாசா உடுகம்பொல.

ரஞ்சன் விஜயரத்னாவுக்கு மிக நம்பிக்கையான பொலிஸ் அதிகாரி.

கேள்விக்கு பதில் சொல்லாமல் "நீதான் லொக்காவா?" (தலைவரா?) என்று கேட்டான் ஒருவன். வந்தவர்களில் அதிகாரி போன்று காணப்பட்ட ஒருவன் ரோகனாவின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்தபடி ஏதோ கேட்டான்.

ரோகானாவின் மனைவியும், பிள்ளைகளும் வெளியே வந்துவிட்டனர். ரோகனாவைச் சுடப்போகிறார்கள் என்று பயந்து அழத் தொடங்கிவிட்டனர்.



இறுதியானவிசாரணையின் போது ரோகன

மாலை 3.30 மணியளவில் ஒரு வண்டி ஒன்றின் பின் இருக்கையில் இருவருக்கு மத்தியில் ரோகனாவை இருத்தி வைத்து கூட்டிச் சென்றனர்.

அவர்களுடன் செல்ல முன்னர் ரோகனா தன் மனைவியின் முகத்தையும், பிள்ளைகளின் முகத்தையும் கடைசித் தடவையாக ஆழமாக நோக்கினார்.

'பிள்ளைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்' என்று கூறியதுதான் தன் மனைவியிடம் ரோகனா பேசிய கடைசி வார்த்தை.

கொழும்பில் உள்ள ஒருங்கிணைந்த நடவடிக்கை தலைமையகத்துக்கு ரோகனா கொண்டுவரப்பட்டார். துருவித் துருவி விசாரிக்கப்பட்டார். மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவின் பொறுப்பின் கீழ் இயங்கியதுதான் ஒருங்கிணைந்த நடவடிக்கைக்குழு.

"உங்களை ஒன்றும் செய்யமாட்டோம். உங்கள் உறுப்பினர்களிடம் சகல வன்முறைகளையும் நிறுத்துமாறு வேண்டுகோள் விடுங்கள்." என்றனர்.

ரோகனா மறுத்தார். ஆனால் தொடர்ந்து பிடிவாதம் காட்டமுடியாதளவுக்கு களைத்துப் போயிருந்தார்.

தொலைக்காட்சி கமரா ஒன்று அவர் முன்னால் வைக்கப்பட்டது. சற்று நேரம் அவகாசம் கேட்டபோதும், வழங்கப்படவில்லை.

### தகன ஏற்பாடுகள்

ரோகனா விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே, பொரளையில் உள்ள கனத்தை மயானத்தை சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

அங்குதான் ரோகனாவின் உடலை தகனம் செய்ய ஏற்பாடாகி இருந்தது.

ரோகனா பேசியதை பதிவு செய்து முடித்தனர். ரோகனாவுக்கு தன்னை கொல்லப் போகிறார்கள் என்பது ஓரளவு புரிந்துவிட்டது.

"ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நான் சில விஷயங்களைப் பேச விரும்புகிறேன்" என்று கூறினார் ரோகனா.

அத் தகவலை உடனடியாக ரஞ்சனுக்கு தெரிவித்தனர்.

பிரேமதாசாவுடன் ரோகனாவை பேசவிட்டால், பிரேமதாசா மனம்மாறிவிடவும் கூடும். ரோகனாவை தன்னுடன் சேர்த்துக் கொண்டு அரசியல் நடத்தவும் நினைக்கலாம்.

ஆகவே சந்திக்கவிடக்கூடாது என்று முடிவு செய்த ரஞ்சன், "அதற்கு அவசியமில்லை, முடித்துவிடுங்கள்" என்று கூறிவிட்டாராம்.

கொழும்பில் கோல்ஃப் விளையாட்டு மைதானத்திற்கு பக்கத்தில் இருந்த ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு அறையில் வைத்துத்தான் ரோகனா விசாரிக்கப்பட்டார்.

கோல்ஃப் மைதானத்திற்கு ரோகனாவை கூட்டிச் சென்று அங்கு வைத்துத்தான் துப்பாக்கி ரவைகளைப் பொழிந்தனர் என்றும் அறியப்படுகிறது.

இத்தகவலை அன்றைய எதிர்க்கட்சி பா.உ லக்ஷ்மன் ஜயக்கொடியும் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். கோல்ஃப் மைதானத்தில் வைத்து ரோகனா சுடப்பட்டதை அப்பகுதி வாசிகள் சிலர் கண்டனர் என்றும் ஜயக்கொடி கூறியிருந்தார்.

ரோகனாவை சுட்டுக் கொன்றுவிட்டு உடலையும் தகனம் செய்த பின்னர்கூட, ரோகனா கைதான தகவலை அரசாங்கம் மிக இரகசியமாக வைத்திருந்தது.

ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர்களான உபதிஸ்ஸ கமநாயக்கா உட்பட பலரது இருப்பிடங்கள் பற்றிய தகவல்களை பெற்று அவர்களும் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மீண்டும் ஜே.வி.பி.க்கு தலைமை தாங்கக் கூடிய தலைவர்கள் எவருக்கும் தலை இருக்கக்கூடாது என்று ரஞ்சன் விஜயரத்தினா திட்டவட்டமாக உத்தரவிட்டிருந்தார்.

தாம் நினைத்தபடி காரியம் யாவும் முடிந்ததும் இராணுவத் தளபதியால் அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டது.

பாதுகாப்பு தரப்பினர் தமது தேவை கருதியும், தந்திரத்துக்கு ஏற்பவும் உண்மைகளைத் திரித்துக் கூறவும், தவறான தகவல்களை வெளியிடவும் தயங்கமாட்டார்கள் என்பதற்கு இந்த அறிக்கை தக்க உதாரணம். அறிக்கை இது தான்:

"அரசைக் கவிழ்க்கும் வன்முறைகளுக்கு தூண்டுவோரைப் பற்றிய உளவுத் தகவல்களின்படி உலப்பனப் பகுதியில் தேடுதல் நடத்தினோம்.

1989 நவம்பர் 12ம் திகதி ரோகனா விஜவீர என்பவரை அடையாளம் கண்டு விசாரித்தபோது, 'நான்தான் விஜயவீர' என்று ஒப்புக்கொண்டார்.

அவரைக் கைது செய்து மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்து விசாரித்தோம். அவர் தானாகவே விரும்பிக் கேட்டுக் கொண்டதால், வீடியோவில் அவரது அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

நவம்பர் 13ம் திகதி காலையில் தமது தலைமையகத்திற்கு பாதுகாப்புப்படை மற்றும் பொலிசாரைக் கொண்ட குழுவினரை அழைத்துச் சென்றார்.

அங்கு அரசியல் பிரிவு முக்கியஸ்தரான ஹேரத் என்பவரிடம் விசாரணைக்குரிய ஆவணங்கள் அனைத்தையும் கையளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஹேரத் சில ஆவணங்களை ஒப்படைத்தார். வேறு சில ஆவணங்களை தேடிப்பார்ப்பது போன்று பாசாங்கு செய்துவிட்டு திடீரென ஒரு துப்பாக்கியை எடுத்து ரோகன விஜயவீராவை நோக்கிச் சுட்டார்.

படையினரும் உடனடியாக ஹேரத்தைச் சுட்டனர். அதனால் படுகாயமடைந்த நிலையில் ரோகன விஜயவீரவும், ஹேரத்தும் உயிர் துறந்தனர்.

இதன் பின்னர் அவசரகால சட்ட விதிகளுக்கு அமைய, அவர்கள் இருவருடைய சடலங்களும் உயர் பாதுகாப்புடன் தகனம் செய்யப்பட்டன."

அதுதான் அறிக்கை.

நடந்தது வேறு. நடந்ததாக ஜோடிக்கப்பட்ட சம்பவங்கள் முற்றிலும் வேறு.

ஜே.வி.பி. தலைமையகம் உட்பட ரோகனாவை பிடிக்க உதவிகரமான தகவல்களைக் கூறிய உளவாளி ஒருவருக்கு ஏழு இலட்சம் ரூபா சன்மானம் கொடுக்கப்பட்டதாகவும் தகவல். அந்த உளவாளியின் பெயர் இன்றுவரை இரகசியமாகவே இருக்கிறது.

ரோகனா விஜயவீராவின் மனைவியும் பிள்ளைகளும் தற்போதும் கடற்படைப் பாதுகாப்பில் திருமலையில் உள்ளனர்.

ரோகனாவின் மகன் படிப்பில் கெட்டிக்காரி. பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

ரோகனா இறுதிவரை தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவில்லை.

கொழும்பில் இருந்த தமிழ் முதலாளிகள் மீதும் கடுப்பில் இருந்தவர் ரோகனா. கே. குணரத்னமும் ஜே.வி.பி.யினரால் தான் கொல்லப்பட்டார்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை வகுப்புவாதப் போராட்டம், தமிழ் முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சார்பான போராட்டம் என்றும் ரோகனாவும் ஜே.வி.பி.யும் கொச்சைப் படுத்தி வந்ததையும் இந்த நேரத்தில் நினைவூட்டியே ஆக வேண்டும்.

ஜே.வி.பி. வீழ்ந்ததால் அடுத்த காயை நகர்த்த ஆரம்பித்தார் பிரேமதாசா.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பொதி சுமக்கும் தமிழ்க் கட்சிகள்

அலசுவது- இராஜதந்திரி

"ஐ.தே.கட்சி முன்வைக்கும் மாற்று யோசனையை தமிழ்க் கட்சிகள் ஏற்குமானால் அரசாங்கம் ஏற்கத்தயார்" என்று கூறியிருக்கிறார் நீதியமைச்சர் பீரிஸ்.

கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. புளொட் ஆகிய கட்சித் தலைவர்களை கூட்டாக சந்தித்தபோதே பேராசிரியர் பீரிஸ் அக்கருத்தை கூறியிருந்தார்.

கூட்டணி பா.உ திரு.நீலன் திருச்செல்வத்தின் ஏற்பாட்டின்பேரிலேயே அச் சந்திப்பு பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்றிருந்தது.

ஐ.தே.கட்சிக்கு எதிராக கூட்டறிக்கை விடுவதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளைத் தூண்டியவரான நீலன் திருச்செல்வம்தான், கூட்டுச் சந்திப்புக்கும் அக் கட்சிகளை அழைத்துச் சென்றிருந்தார்.

ஈ.பி.டி.பி.யினர் மட்டும் நீலன் திருச்செல்வத்தின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டனர். எனினும் பீரிசுடன் தனியாகச் சந்திக்க இணங்கியிருந்தனர்.

**ஐ.தே.கட்சிக்கு எதிராக நான்கு தமிழ் முஸ்லிம் கட்சிகளும் விடுத்த கூட்டறிக்கையும், அதன் பின்னர் அதே கட்சிகள் நீதியமைச்சர் பீரிசுடன் நடத்திய சந்திப்பு பற்றி பெரிதாக வெளியிடப்பட்ட செய்திகளும் அரச சார்புப் பிரசாரங்களாகவும் அரசின் அரைகுறை தீர்வுப் பொதியை காத்திரமான பொதிபோன்று போலித் தோற்றத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தன.**

பேராசிரியர் பீரிஸ் தமிழ், முஸ்லிம் கட்சிகளை தனது மாணவர்கள் போல கருதிக் கொள்கிறார். அரசின் அரசியல், இராணுவ நலன்களுக்கு ஏற்ற திட்டப்படி அவர்களுக்கு வகுப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்.

அக் கட்சிகளும் அவர் கூறிய கருத்துக்களை மிகுந்த பவ்வியத்துடன் பத்திரிகைகளுக்கு கூறிவருகின்றன.

**ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாகவும், கூட்டணியினர் தனியாகவும் அரசியல் தீர்வு தொடர்பாக தங்கள் யோசனைகளையும், திருத்தங்களையும் முன்வைத்திருந்தனர்.**

அத் திருத்தங்கள் முற்று முழுதாக அரசால் நிராகரிக்கப்பட்டன. நிராகரிக்கப்பட்டன என்ற கூற்றுக்கூட தவறானதாகும்.

சமர்பிக்கப்பட்ட திருத்தங்களை பரிசீலித்துவிட்டு, சாத்தியப்படாது என தள்ளி வைப்பதையே நிராகரிப்பு என்று கூறலாம்.

ஆனால், தமிழ்க் கட்சிகள் சமர்பித்த திருத்தங்களை புரட்டிக்கூடப் பார்க்காமல் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டது அரசாங்கம்.

**அது மட்டுமல்லாமல், எவ்வித தயக்கமோ, ஒளிவு மறைவோ இல்லாமல், நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள், வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதா இல்லையா என்பதற்கு கருத்துக் கணிப்பு நடந்தே தீரும் என்ற உத்தரவாதத்தையும் பௌத்த குருமாரிடமும் சிங்கள மக்களிடமும் தெரிவித்திருக்கிறார்.**

பௌத்த குருமாருக்கு கொடுத்த வாக்குறுதியை எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் திரும்பப் பெற முடியாது. அதற்கு மாறாக நடக்கவும் முடியாது. எனவே ஒருமுறைக்கு பல முறை யோசித்த பின்னரே அந்த உறுதி மொழியை கடந்த ஆண்டு பேராசிரியர் பீரிஸ் கொடுத்திருந்தார்.

எனவே, தமிழ்க் கட்சிகளின் திருத்தங்கள் படித்துப் பார்க்கப் படாமலேயே தூக்கிவீசப்பட்டதுடன், தமிழ் பேசும் மக்கள் நாடி நிற்கும் அரசியல் தீர்வுக்கான அடிப்படைகூட மறுதலிக்கப்பட்டுவிட்டது.

**வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமி, பிரிக்கப்பட முடியாத ஒரே பிரதேசம் என்பதுதான் அரசியல் தீர்வின் அடிநாதமாக, அத்திவாரமாக அமையவேண்டும்.**

அதற்கு குறைந்த எந்தவொரு தீர்வும் கண்ணை விற்று சித்திரம் வாங்குவதற்கு ஒப்பானதாகவும், சுவர் இல்லாமல் சித்திரம் வரையும் முயற்சியாகவுமே அமைந்திருக்கும்.

**பல்லாயிரம் இளைஞர்கள், யுவதிகள் தங்கள் இன்னுயிர்களால் கட்டியெழுப்பியுள்ள தமிழ் பேசும் மக்களின் தேசிய எழுச்சிக்கு எவ்வகையிலும் ஈடாகாத தீர்வுப் பொதியை, அரசின் சார்பாக சுமந்து கொண்டு திரிவதும், அந்தப் பொதிக்கு வக்காலத்து வாங்கும் நடவடிக்கைகளில் பங்கு கொள்வதும் தேசிய எழுச்சிக்கு செய்யும் மாபெரும் வரலாற்றுத் துரோகமாகவே அமைகிறது.**

அது மட்டுமன்றி, தமிழ்க் கட்சிகள் முன்வைத்த யோசனைகளை ஏறெடுத்தும் பாராது தூக்கி வீசிய ஆட்சியாளர்கள், ஐ.தே.கட்சியுடனான தங்கள் சொந்த அரசியல் சண்டைகளில் தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் இழுத்து விடுகின்றனர்.

ஐ.தே.கட்சியின் யோசனையை தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொண்டால், அதனை ஏற்கத் தயார் என பீரிஸ் கூறியிருப்பது சாணக்கியமான கூற்றேயாகும்.

**ஐ.தே.கட்சியின் யோசனையை தாம் நேரடியாக நிராகரித்தால் சிங்கள மக்களிடமும், உலக அரங்கிலும் தங்களுக்கு கெட்ட பெயர் ஏற்படும். எனவே தமிழ்க் கட்சிகள் மூலமாக நிராகரித்துவிட்டால் பிரச்சனை இல்லை என்பதுதான் ஆட்சியாளரின் உபாயமாகும்.**

"தமிழ்க் கட்சிகள் ஏற்றால் என்ன? ஏற்காவிட்டால் என்ன, தீர்வு யோசனைகளை முன்வைத்தே தீருவோம்" என்று கடந்த ஆண்டு சூளுரைத்தவர் அமைச்சர் பீரிஸ்.

அதே அமைச்சர் அவர்கள், 'தமிழ்க் கட்சிகள் ஐ.தே.கட்சியின் யோசனைகளை ஏற்றுக் கொண்டால் நாமும் ஏற்கத் தயார்" என்று கூறுவது முன்னுக்குப் பின் முரணானதாக இருக்கிறது.

பொதுஜன முன்னணியின் யோசனைகள் மூலம் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படுவதை எப்படி ஐ.தே.கட்சி விரும்ப மாட்டாதோ, அதே போல, ஐ.தே.கட்சியின் யோசனையால் இனப்பிரச்சனை தீர்ந்தது என்ற நிலை ஏற்பட பொதுஜன முன்னணியும் எக்காலத்திலும் விடப்போவதில்லை.

இரண்டு கட்சிகளிலும், ஒரு கட்சி தனது திட்டத்தை வைத்து மறு கட்சியின் ஆதரவைக் கேட்குமே தவிர, மறு கட்சியின் திட்டத்துக்கு தனது ஆதரவை வழங்க முன்வரமாட்டாது. அவ்வாறு வழங்கினால் திட்டத்தை முன்வைத்த கட்சிக்கு நற்பெயர் ஏற்பட்டு செல்வாக்கு வளர்ந்துவிடும் என்பதுதான் அச்சம்.

இது ஒன்றும் புதிய விடயங்களல்ல. ஜி.எல்.பீரிசின் கருத்துக்களும் புதிய தந்திரங்கள் அல்ல.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் சர்வகட்சி மாநாடு ஒன்று நடைபெற்று வந்தது. "வடக்கு-கிழக்கு இணைந்திருக்க சிறீலங்கா சுதந்திரக் கட்சி சம்மதித்தால் எமக்கு பிரச்சனையில்லை" என்றுதான் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருந்தார்.

**வடக்கு-கிழக்கு தனி மாகாணங்களாக பிரிந்திருக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும், தமிழ்க் கட்சிகள் கூறுகிறபடி வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி இணங்கினால் தமது நிலைப்பாட்டை பரிசீலிக்கத் தயார் என்றும்** ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளராகவும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்தவருமான ரஞ்சன் விஜயரத்ன சர்வகட்சி மாநாட்டில் கருத்துக்கூறியுமிருந்தார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் அதற்கு இணங்காது என்ற நம்பிக்கையில் ரஞ்சன் விஜயரத்ன வெளியிட்ட தந்திரோபாயமான கருத்தே அதுவாகும்.

**இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் ஆட்சியில் உள்ள கட்சி முன்வைக்கும் நிலைப்பாட்டைவிட, குறைந்தளவான நிலைப்பாட்டைத்தான் எதிர்க்கட்சி முன்வைக்கும். இதுதான் இங்குள்ள சுயநல அரசியலின் தொடர் வரலாறாகும்.**

அந்த நம்பிக்கையில்தான் அன்று ரஞ்சனும் அவ்வாறு கூறியிருந்தார். இன்று ஜி.எல்.பீரிசும் அந்த நம்பிக்கையில்தான் ஐ.தே.கட்சியின் திட்டத்தை தமிழ்க் கட்சிகள் ஏற்குமானால் அரசும் ஏற்கும் என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.



## அன்று ரஞ்சன் கூறியதை இன்று பீரிஸ் கூறுகிறார்

இதனைப் புரிந்து கொள்ளாமல் ஆட்சியாளர்களின் பெருந்தன்மையான கூற்று என்பதுபோல தமிழ்க் கட்சிகள் பத்திரிகைகளுக்கும், செய்தி ஊடகங்களுக்கும் கருத்து வெளியிட்டு வருகின்றன.

வடக்கு-கிழக்கை இப்போதே பிரிக்கலாம் என்கின்றனர் ஆட்சியாளர்கள். ஐந்து வருடம் கழித்துப் பிரிக்கலாம் என்கின்றனர் ஐ.தே.கட்சியினர்.

**தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தை கூறுபோட்டேயாக வேண்டும் என்பதில் இரு பெரும் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை இருக்கிறது. எப்போது பிரிப்பது என்பதில்தான் வேற்றுமை காணப்படுகிறது.**

இந்த வேற்றுமைகூட நல்ல நோக்கத்தின் அடிப்படையில் உருவானதல்ல. ஆளும் கட்சி ஒரு விதமாக கூறினால், எதிர்க்கட்சிக்கு அதற்கு மாறாக இன்னொருவிதமாக கூறவேண்டும் என்ற அரசியல் போட்டிச் சூத்திரத்தின் அடிப்படையில் எழுந்துள்ள வேற்றுமைகளாகவே விளங்கி வருகின்றன.

**இப்போதே பிரிக்க முற்பட்டால் விடுதலைப் புலிகள் மேலும் பலமடைவார்கள். தமிழ் மக்கள் அவர்களை மேலும் தீவிரமாக ஆதரிப்பர். எனவே ஐந்தாண்டுக்குள் புலிகளை ஓரம் கட்டிவிட்டு பின்னர் பிரிக்கலாம். அதற்குள் கிழக்கில் மேலும் சிங்கள மக்களின் விகிதாசாரம் உயர்ந்துவிடும் என்று தனது நிலைப்பாட்டுக்கு பேரினவாதிகளிடம் ஐ.தே.கட்சி நியாயம் கூறக்கூடும்.**

எவ்வாறு நோக்கினும், பெரும்பான்மை இனத்தின் இரு பெரும் கட்சிகளது நிலைப்பாடுகளும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு நேர்மாறானவையேயாகும். நிராகரிக்கப்பட வேண்டியவையேயாகும்.

எடுத்த எடுப்பில் நிராகரித்தால் வெளியுலகின் முன்னால் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும் என்று தமிழ்க் கட்சிகள் முன்னர் கூறி வந்தன.

ஆனால், பொதுஜன முன்னணி அரசுக்கு மூன்று வருட காலமாக தமிழ்க் கட்சிகள் முண்டுகொடுத்தாகிவிட்டது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் ஆண்டுக்கணக்காக விவாதம் நடத்தியுமாகிவிட்டது.

**எனவே, இனிமேலும் அரசின் மகுடி வாசிப்புக்கு ஏற்ப ஆடுவதையும் அரசின் பிரசார நலன்களுக்காக அறிக்கைகள் வெளியிடுவதையும் தமிழ்க் கட்சிகள் நிறுத்தியாக வேண்டும்.**

கடந்த ஆண்டு பாராளுமன்றத்தில் அரசியல் தீர்வு யோசனை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஒன்று மூன்வைக்கப்பட்டது.

அதனைத்தான் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைத்துவிட்டது என்பதுபோல சில செய்தி நிறுவனங்களும், தமிழ்க் கட்சிகளும் தெரிந்தோ தெரியாமலோ கூறிக் கொண்டிருந்தன.

'முரசு' மட்டுமே அது தீர்வுத் திட்டமல்ல, அறிக்கைதான் என்பதை பாராளுமன்ற சட்ட திட்ட ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியிருந்தது.

அதன் பின்னர்கூட அதனை 'தீர்வுத் திட்டம் சமர்ப்பிப்பு' என்றே சிலர் கூறிவந்தனர்.

தற்போது நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள், அரசின் தீர்வு திட்டம் விரைவில் பாராளுமன்றத்தில். சமர்ப்பிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப்போகிறோம் என்று அரசாங்கம் கூறினாலும்கூட தமது பதவிக் காலம்வரை அதனை ஒழித்துக்கட்ட பொதுஜன முன்னணியினர் முன்வரப் போவதில்லை.

**அடுத்த தடவை பதவிக்கு வருவது இயலாத காரியம் என்று திட்டவட்டமாக தெரிந்தால் மட்டுமே, ஐ.தே.கட்சி மறுபடி ஜனாதிபதி பதவியைப் பெறக்கூடாது என்பதற்காக ஆட்சி முறையை மாற்றியமைக்க பொதுஜன முன்னணியினர் முன்வரக்கூடும்.**

இதேவேளை சர்வசன வாக்கெடுப்பு ஒன்றுக்கு அரசு முன்வருமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தற்போதைய சூழலில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றுக்கு ஆட்சியாளர்கள் துணியப் போவதில்லை.

அரசியல் தீர்வை இழுத்தடிக்கக்கூடிய வகையிலான தேர்தல் வேடிக்கைகள், ஜனநாயக விளையாட்டுக்கள் என்பவற்றில்தான் ஆட்சியாளர் கவனம் செலுத்துவர்.

ஆகவே, மாகாண சபை தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் செல்வாக்கை நாடிபிடித்தறியவே அரசு விரும்புகிறது.

தற்போது தொடரான இராணுவப் பின்னடைவுகள் அரசுக்கு ஏற்பட்டுள்ளன. அரசின் பூசி மெழுகும் பிரசாரங்களை சிங்கள மக்கள் பெருமளவு நம்பவும் இல்லை.

எனவே, மாகாண சபைத் தேர்தலைக்கூட ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் நடத்தவே ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர் என்று தெரிகிறது.

**ஏப்ரல் புத்தாண்டில் வவுனியா யாழ் தரைப்பாதையை திறந்த சூட்டோடு சூட்டாக மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்களிப்பை நடத்தி முடிக்கலாமா என்பது பற்றியும் ஆட்சியாளர்கள் ஆராய்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.**

ஒட்டு மொத்தத்தில், தமிழ் பேசும் மக்களின் அரசியல் இராணுவ பலத்தை வெற்றி கொள்ளும்வரை தீர்வுப் பொதியை அரசு பிரிக்கப்போவதில்லை.

அதுவரை அந்தப் பொதியை அடிக்கடி உலகின் கண்களுக்கு முன்பாக காட்டிக் கொண்டிருப்பதும், இடைப்பட்ட நேரங்களில் தமிழ்க் கட்சிகளின் முதுகில் சுமத்தி பிரசார உலா நடத்துவதுமே ஆட்சியாளரின் தந்திரமாக இருக்கப் போகிறது.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களுக்கு தங்களை பேராசிரியர் பீரிஸ் அழைக்கவில்லையே என்று சில தமிழ்க் கட்சிகளுக்கு பொல்லாத கவலை.

தங்கள் யோசனைகளை அரசு தூக்கி எறிந்தபோதுகூட அவர்கள் இத்தனை கவலைப்பட்டதில்லை.

அரசுடன் பேச்சு நடத்திவிட்டு அறிக்கை விடுவது, ஜனாதிபதிக்கு ஃபக்ஸ் அனுப்புவது, அமைச்சர்களுடன் பேசிவிட்டு, "கண்டோம், எடுத்துக் கூறினோம், கவனிக்க உறுதி தந்தார்" என்று பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பது என்பவைதான் அரசியல் என்று தமிழ்க் கட்சிகள் அர்த்தப்படுத்தி வருகின்றன.

சாத்வீகப் பாதைக்கு திரும்பி விட்டோம் என்று கூறுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, ஜனநாயகப் பாதைக்கு திரும்பி விட்டோம் என்று கூறுகின்ற அரசியல் விற்பனர்கள் இந்தக் கட்சிகள்.

அடக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்துவதும் ஜனநாயக உரிமைதான். அப்படி இல்லை என்றால் இந்த கட்சிகளில் உள்ளவர்களை முன்னாள் போராளிகள் என்று அழைக்கக்கூடாது. முன்னாள் பயங்கரவாதிகள், அல்லது முன்னாள் ஜனநாயக விரோதிகள் என்று தான் அழைக்க வேண்டும்.

இவர்களுக்கு ஜனநாயகம் என்றாலும் என்னவென்று தெரியவில்லை, அரசியல் என்றாலும் என்னவென்று புரியவில்லை. அதுதான் குழப்பம்.

அரசாங்கத்தின் பிரதிநிதிகளை சந்திப்பதும், அமைச்சர்களையோ, ஜனாதிபதியையோ சந்திப்பதும் தங்களது போன ஜென்ம புண்ணியம் போல நினைக்கிறார்கள்.

நீதியமைச்சர் பீரிசுடன் பேச்சு என்று வெளியான செய்தியில் தங்கள் கட்சிகளின் பெயர்களோ, தங்கள் பெயர்களோ இடம் பெறவில்லையே என்று நினைக்கும் முன்னாள் போராளி அல்லது 'பயங்கரவாத' தலைவர்களுக்கு பெருமூச்சு பீறிட்டுக் கிளம்புகிறது.

சந்திக்க அழைக்கப்பட்டவர்கள் புண்ணிய ஆத்மாக்களாக தங்களைக் கருதிக் கொள்கிறார்கள். அழைக்கப்படாதவர்கள் பாவிகளாக தங்களை எண்ணிக் கொள்கிறார்கள்.

இவர்கள் அனைவரையுமே தாங்கள் சவாரி செய்யும் குதிரைகள் என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் நினைப்பதை மட்டும் இக் கட்சிகள் அறிய மாட்டார்கள்.

அவர்கள் தங்களுக்கு தேவையானபோது இவர்களை தட்டிக் கொடுக்கிறார்கள். தேவையில்லாதபோது குட்டியும் அடக்குகிறார்கள்.

பாவம் இந்த முன்னாள் போராளிகள் அல்லது 'ஜனநாயகப் பாதைக்கு திரும்பிய' முன்னாள் 'ஜனநாயக விரோதிகள்'.

▫▫

இ.தொ.கா.வும் அதன் தலைவர் தொண்டமானும் இதுவரை தந்திரமாகத்தான் மலையக மக்களை ஏமாற்றி வந்தனர்.

தோட்டத் தொழிலாளர்களது சந்தாக்களில் மாட மாளிகைகள், கூட கோபுரங்கள்,

## மலையகத்திலும் வெற்றிடம்

உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் ஏகப்பட்ட சொத்துக்கள் என்று தொண்டாவும் அவரைச் சார்ந்தோரும் செழிப்புற்று வந்தனர்.

தனக்கு அடுத்தகட்ட தலைவரும் தனது குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்றே தொண்டா விரும்பினார். சந்திரசேகரன், செல்லச்சாமி போன்றோருக்கு கட்சியைவிட்டு வெளியேறியே ஆகவேண்டிய நிர்ப்பந்தங்கள் கொடுக்கப்பட்டதும் அதனால் தான்.

மலையக தோட்டத் தொழிலாளரின் ஏகபோக தலைவராக இருந்து தானும், தனக்குப் பின்னர் பேரனும் தலைவராகக் கூடிய அரசியல் ஒன்றையே தொண்டா நடத்தி வருகிறார்.

எனினும் சந்திரசேகரன், காதர் போன்றோர் முன்னொரு காலத்தில் ஊக்கமான சக்திகளாக இருந்தவர்கள்.

ஆனால், மலையக மக்கள் முன்னணியும் இன்று தொண்டாவின் அதே பழைய பாதையில்தான் செல்கிறது.

ஒரே ஒரு மேலதிக பலன் சந்திரசேகரனுக்கு பிரதி அமைச்சர் பதவி. தொண்டாவுடன் இருந்திருந்தால் அப்பதவி கிடைத்திருக்காது.

மலையகத் தொழிலாளர்கள் விழிப்புற்று வருகின்றனர். தொழிற்சங்கத் தலைமைகளதும், இ.தொ.கா.வினதும் சந்தர்ப்பவாதத்தை இனம் காணத் தொடங்கி விட்டனர்.

ஆனால், அவர்களுக்கு தலைமை கொடுக்கக்கூடிய சரியான அரசியல் தலைமைத்துவம் வெற்றிடமாகவே உள்ளது.

அந்த வெற்றிடத்தை நிரப்பும் சந்தர்ப்பத்தை மலையக மக்கள் முன்னணி எப்போதோ தவறவிட்டுவிட்டது.

எனவே, வடக்கு-கிழக்கின் பகிரங்க அரசியல் களத்தில் உள்ளதுபோலவே, மலையகத்திலும் உறுதியானதும், உண்மையானதுமான அரசியல் தலைமைத்துவத்தின் வெற்றிடம் நீடிக்கிறது.

சரிந்துவரும் தனது செல்வாக்கை நிமிர்த்தி, மலையக மக்களின் தனிப்பெரும் தலைவர் என்ற பெயரை தக்கவைப்பதற்காக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார் தொண்டா.

அவரே எதிர்பாராத அளவுக்கு போராட்டம் விசுவரூபம் எடுத்தபோது, எங்கே தன் கட்டுப்பாட்டையும் மீறிப் போய்விடுமோ என்று பயந்தார்.

குறைந்த பட்சம் 110 ரூபாவரையாவது சம்பள உயர்வு கொடுத்தாகவேண்டிய சூழ் நிலை இருந்தது என்று சில தோட்ட முதலாளிமாரே ஒப்புக்கொள்கின்றனர்.

இரகசியமாக நடந்த பேரங்களும், சில உடன்பாடுகளும் காரணமாக அவசர அவசரமாகப் போராட்டம் குழப்பியடிக்கப் பட்டுவிட்டது.

ஆனால், முன்புபோல அல்ல, தொழிலாளர்கள் சுயமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். தனிப் பெரும் தலைவராக தன்னை கருதிக் கொண்ட தொண்டா இப்போது சந்தேகத்திற்கு அப்பாற்றப்பட்டவரல்ல.

தொண்டா கூறியும்கூட வேலைக்கு திரும்பாத தொழிலாளர்களின் எதிர்ப்பு அதனைத் தான் காட்டியுள்ளது.

தனது தலைமை கேள்விக்கு உள்ளாவதை பொறுக்காத தொண்டா, "விடுமுறை நாள் என்று நினைத்து தொழிலாளர்கள் வேலைக்கு செல்லவில்லை" என்று கூறினார். அதாவது தொழிலாளர்கள் அறிவற்றவர்கள் என்பது போல கூறத் தலைப்பட்டார்.

ஆனால் ஞாயிற்றுக்கிழமை மட்டுமல்லாமல், திங்கட்கிழமையும் வேலைக்கு திரும்பாத தொழிலாளர்கள் தாங்கள் சுயமாக சிந்திக்கக்கூடியவர்கள் என்று நிருபித்திருந்தனர்.

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம். பலரை சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால் இ.தொ.கா. நீண்ட காலமாக ஜமாய்த்து விட்டது. இது கொஞ்சம் அதிகம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

84

தருவது ரசிகன்



பூலான்

கடந்த வாரம்

பூலான் தேவியை சரணடையவைக்க முயலுகிறார் மத்தியப் பிரதேச பொலிஸ் அதிகாரி சதுர்வேதி. ஆனால் உத்தரப் பிரதேச பொலிசார் அந்த முயற்சியைக் குழப்புகிறார்கள். அதனால் பூலானுக்கு சதுர்வேதிமீது சந்தேகம் வருகிறது முயற்சி தோல்வியடைகிறது. இனி...

பூலானை சமாதானப்படுத்த வந்த கன்ஷியாம், பூலான் குழுவினரை பொலிசார் சுற்றிவளைத்திருப்பதையும், சரணடையுமாறு ஒலிபெருக்கியில் அறிவித்துக்கொண்டிருப்பதையும் கண்டுவிட்டான்.

அந்தக் காட்டுப் பகுதியின் சூட்சுமங்கள் அத்தனையும் கன்ஷியாமுக்கு அத்துப்படி.

அதனால், பொலிசாரின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகாத பாதையைக் கண்டுபிடித்து புகுந்துவிட்டான்.

பூலான் குழுவினரைத் தேடத் தொடங்கினான்.

இந்த நேரத்தில் தன்னைக் கண்டால், சந்தேகம் மேலும் அதிகரிக்கலாம். இவன்தான் பொலிசாரைக் கூட்டி வந்துவிட்டான் துரோகி என்று பூலான் தன்னைச் சுட்டும் கொல்லலாம் என்பதையும் கன்ஷியாம் யோசிக்கத் தவறவில்லை.

ஆனாலும் இக்கட்டான இந்த நேரத்தில் பூலானையும், அவள் குழுவினரையும் காப்பாற்றுவதுதான் நியாயம் என்று நினைத்து, தன் உயிரைப் பற்றியும் கவலைப்படாமல் சென்றான் கன்ஷியாம்.

பூலான் தேவி மான்சிங்கிடம் "சரணடையலாமா, அல்லது வீரமாக சண்டையிட்டு இரண்டில் ஒன்று பார்க்கலாமா?" என்றாள்.

"சண்டைபோடுவோம். தப்பிச் செல்லவும் வழி பார்ப்போம்" என்றான் மான்சிங்.

அப்போதுதான் கன்ஷியாம் தன் கைகள் இரண்டையும் தலைக்குமேலே உயர்த்தியபடி அங்கு தோன்றினான்.

அவனைக் கண்டதும் பூலான் சீற்றமடைந்தாள். தன் துப்பாக்கியை அவன் மார்பை நோக்கி குறிவைத்தும் விட்டாள்.

மான்சிங் மட்டும் குறுக்கிட்டு தடுத்திருக்காவிட்டால், கன்ஷியாமின் கதை அன்றோடு முடிந்திருக்கும்.

"வேண்டாம், ஏன் வந்திருக்கிறான் என்று விசாரிப்போம்" என்றான் மான்சிங்.

சரணடையுமாறு பொலிசார் விடுக்கும் அறிவிப்பு காட்டுக்குள் நாலாபுறமும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

மான்சிங்குக்கு கன்ஷியாமில் நம்பிக்கை இருந்தது. சொன்ன சொல் தவறாதவன் என்று அவனைப்பற்றி பலர் சொல்லக் கேட்டிருக்கிறான்.

"எதற்காக இந்த நேரத்தில் இங்கே?" என்று கேட்டான்.

கன்ஷியாம் தான் பூலானைக் காண வந்த நோக்கத்தைக் கூறினான். "என்னில் சந்தேகப்படுவீர்களோ என்று நினைத்து விளக்கம் தரவந்தேன். நடந்த சம்பவத்திற்கு பொலிஸ் அதிகாரி சதுர்வேதி பொறுப்பல்ல என்பதையும் அறிந்தேன். நான்கூட முதலில் அவரைச் சந்தேகித்தேன். ஆனால் பூலான் தேவி சதுர்வேதியிடம் சரணடைவதை உத்தரப் பிரதேச பொலிசார் விரும்பவில்லை. அதனால்தான் சரணடைய முன்னர் கொல்லத் திட்டமிட்டனர். நல்ல வேளை தப்பித்து வந்தீர்கள்."

பூலான் அவனை சந்தேகம் மாறாத பார்வையால் வருடிக்கொண்டே, "அப்படியானால் இப்போது சுற்றி வளைத்திருப்பது?" என்று கேள்வியை எறிந்தாள்.

"உத்தரப்பிரதேச பொலிசார்தான்."

"உன்னை எப்படி நம்புவது?"

"நிரூபிக்கப்போகிறேன்!"

"எப்படி?"

"இந்தக் காட்டுக்குள் இருந்து பொலிசாரின் பிடியில் இருந்து உங்களை தப்ப வைத்துக் காட்டுகிறேன்." என்றான்.

பூலான் குழுவில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதும், எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதும் சரியாகத் தெரியாமையால், மிக நிதானமாகவே பொலிசார் தேடிக்கொண்டும், அவ்வப்போது ஒலிபெருக்கியில் எச்சரிக்கை விடுத்தபடியும் இருந்தனர்.

அதனால் பூலான் குழுவினரை கன்ஷியாமினால் சுலபமாகத் தப்ப வைக்க முடிந்தது.

குறுக்குப் பாதைகள் வழியாக பூலான் குழுவினரை அழைத்துச் சென்றான் கன்ஷியாம்.

பூலான் அவனை நம்பவில்லை. மான்சிங்தான் நம்பலாம் என்று கண்களால் சைகை காட்டினான்.

முட்புதர்கள், சகதிகள் கடந்து ஓட்டமும் நடையுமாக அவர்கள் செல்ல வேண்டியிருந்தது.

காட்டுக்குள் பொலிசாரின் துப்பாக்கிகள் வேட்டுக்களைத் துப்பும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

"அங்கேதான் எங்கோ பதுங்கி இருக்கிறோம் என்று நினைத்து சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்," என்று மான்சிங் கூறிச் சிரித்தான்.

அன்று இரவுக்குள் வேறு காட்டுப் பகுதிக்குள் அவர்கள் புகுந்து விட்டனர்.

பூலானுக்கு ஒரே அசதியாக இருந்தது. சதுர்வேதியைப் பற்றி கன்ஷியாம் நல்லவிதமாக எடுத்துக் கூறினான்.

எதனையும் கிரகிக்கும் நிலையில் பூலான் இருக்கவில்லை. அவள் உடலும், மனமும் சோர்ந்திருந்தன.

கண்களை மூடிக்கொண்டு படுத்திருக்க வேண்டும், தனிமையில் எல்லாவற்றையும் யோசித்து எடைபோட வேண்டும் போலத் தோன்றியது.

கன்ஷியாம் விடைபெற்றுச் செல்கையில், "நன்றி கன்ஷியாம். உன் உதவியை மறக்க மாட்டோம்," என்று பலவீனமான குரலில் கூறினாள் பூலான்.

மான் சிங் தம் ஆட்களில் ஒருத்தனை அனுப்பி அருகில் இருந்த கிராமத்தில் இருந்து உணவு தருவித்தான்.

பூலானுக்கு உணவு கொடுக்கச் சென்ற போது, அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

மான் சிங்குக்கு பரசுராம் என்னும் ஒருவரைத் தெரிந்திருந்தது. அவர் ஒரு பண்ணை நடத்தி வந்தார்.

அங்குதான் பூலான் குழுவினர் சில நாட்கள் தங்கியிருந்தனர்.

பூலானுக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. ஒழுங்காக உணவு உட்கொள்ள மறுத்து வந்தாள். அதனால் உடலும் பலவீனமாகி விட்டது.

அவ்வாறான நிலையில் பரசுராமின் பண்ணைதான் பாதுகாப்பான இடம் என்று முடிவு செய்தான் மான் சிங்.

அங்குபோன பின்னர்தான் பரசுராமுக்கு பொலிஸ் அதிகாரி சதுர்வேதியுடன் பரிச்சயம் இருப்பது தெரிந்தது.

சதுர்வேதியைப் பற்றி பரசுராமும் நல்ல விதமாகத்தான் கூறினார். "நேர்மையான பொலிஸ்காரர். அவரை நம்பலாம்," என்றார்.

பூலான் சற்றுத் தேறியதும், சதுர்வேதியை தனியாகச் சந்திக்க ஒப்புக் கொண்டாள்.

பரசுராமின் ஆள் ஒருவன் சதுர்வேதியை மட்டும் தனியாக ஒரு மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்தான்.



கிராம மக்களுடன் பூலான்

பூலான் தன் காக்கி உடைக்கு மேலே கறுப்பு கம்பளிப் போர்வையை அணிந்திருந்தாள். அன்றுதான் பூலானை முதன் முதலாக நேரில் பார்த்தார் சதுர்வேதி. பூலான் சிறையில் இருந்த காலத்தில் எடுக்கப்பட்ட படத்தை மட்டும் சதுர்வேதி பார்த்திருக்கிறார்.

அதற்கும் நேரில் பார்க்கும் பூலானுக்கும் இடையே பாரிய வித்தியாசம் இருந்தது.

பூலானின் தோற்றமும், தன்னை அவள் பார்த்த பார்வையில் இருந்த கம்பீரமும் சதுர்வேதியைக் கவர்ந்தன.

பூலான் அவரை சமீபித்து 'வணக்கம்' கூறினாள். பின்னர் "உங்களை சோதனையிடப் போகிறேன்!" என்றாள்.

வேறு யாராவது சோதனையிட்டால் மரியாதையாக இருக்காது என்பதால் தானே நேரடியாக அவர் உடலை தடவிச் சோதனையிட்டாள்.

தன் மனைவி தவிர வேறொரு பெண்ணின் கைகள் தன் உடலைத் தடவுவது சதுர்வேதிக்கு புதிய அனுபவம். வெட்கமாக இருந்தது.

ஒரு சிறிய ஒலிப்பதிவுக் கருவியும், கமராவும் அவரிடம் இருந்தன. பூலான் சோதனையிட முன்பாகவே தன்னிடமிருந்த பிஸ்டலை அவளிடம் ஒப்படைத்திருந்தார்.

சோதனை முடிந்ததும் என்ன நினைத்தாளோ, "இந்தாருங்கள் உங்கள் பிஸ்டல்!" என்று பூலான் நீட்டியபோது, சதுர்வேதி லேசாக வியந்தார்.

"உங்களை நாங்கள் நம்புகிறோம்!" என்றாள். "ஆனால் உங்கள் பொலிஸ் நாய்களை நம்பமாட்டோம்!" சதுர்வேதி சங்கடப்பட்டார்.

"இதென்ன?" என்று கேட்டாள். அது ஒலிப்பதிவு கருவி. அதனை எப்படி இயக்குவது என்று சதுர்வேதி செய்து காண்பிக்க, ஆர்வத்துடன் அதனைக் கவனித்தாள்.

"நீங்களும் நானும் நடத்தும் பேச்சுவார்த்தை இதில் பதிவாகும். இதனை முதலமைச்சர் அர்ஜுன் சிங்கிடம் போட்டுக் காண்பிப்பேன்," என்று விளக்கினார்.

அன்றைய பேச்சுவார்த்தை சுமுகமாகவே முடிந்தது. மதிய உணவை பூலான் குழுவினருடனேயே அமர்ந்து உட்கொண்டார் சதுர்வேதி.

மாலை 4 மணிக்கு சதுர்வேதி புறப்பட்டார். "மிகுதி விபரங்களை பின்னர் பேசிக்கொள்ளலாம். முதலில் பூலான் சரணடைவதை உண்மையாக்வே அரசு விரும்புகிறதா என்பதை நாங்கள் அறிய வேண்டும். அதற்குரிய ஏதாவது ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள்!" என்று கூறியிருந்தான் மான் சிங்.

பூலானுக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை பதிவு செய்யப்பட்டதைப் போட்டுக் காண்பித்தார் சதுர்வேதி.

தன் குரல் பதிவாகி ஒலிப்பதை குழந்தையின் குதூகலத்துடன் காது கொடுத்துக் கேட்டாள் பூலான்.

பயங்கரமான கொள்ளைராணி என்று பெயர் எடுத்த பூலானின் குழந்தைத்தன ஆர்வத்தைக் காண சதுர்வேதிக்கும் சந்தோசமாக இருந்தது.

"உங்களை ஒரு படம் எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டார்.

மறுத்துவிட்டாள் பூலான்தேவி. நான் சரணடையும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், தேவையானளவு படம் பிடித்துக் கொள்ளுங்கள். இப்போது வேண்டாம்!" என்றுவிட்டாள்.

பூலானின் முன்னெச்சரிக்கை உணர்வு சதுர்வேதியைப் பிரமிக்கச் செய்தது.

"நான்கு நாட்களில் திரும்பி வருகிறேன். அதுவரை இங்கேயே இருங்கள்!" என்று சதுர்வேதி போகும்போது கூறிவிட்டுப் போனார்.

பூலான் தலையாட்டினாள். சதுர்வேதி சென்றதும், உடனடியாக தன் ஆட்களை அழைத்துக் கொண்டு காட்டுக்குள் சென்றுவிட்டாள் பூலான்.

"சதுர்வேதியை நம்பலாம். நம்புவதற்கும் அளவு இருக்க வேண்டும். என்னதான் இருந்தாலும் பொலிஸ்காரன் பொலிஸ்காரன் தானே!" என்று மான் சிங்கிடம் கூறினாள் பூலான்.

காட்டுப் பகுதியில் இருந்த கோவில் ஒன்றில் சாமியார் ஒருவர் இருந்தார். அவர் குறி சொன்னால் தப்பாது என்று நம்பிக்கை இருந்தது.

பூலானும் அந்தச் சாமியார் பற்றி கேள்விப்பட்டு, சில தடவைகள் சந்தித்திருந்தாள்.

தான் சரணடைவது நல்லதா என்று ஆரூடம் பார்க்க விரும்பிய பூலான் அவரிடம் சென்றாள்.

"இதுதான் மகளே தக்க தருணம். சரணடைந்துவிடு. ஒளிமயமான எதிர்காலம் உனக்காக காத்திருக்கிறது!" என்று கூறி விட்டார் சாமியார்.

அதன் பின்னர்தான் பூலானுக்கு சரணடையலாமா? கூடாதா? என்று மன ஊசலாட்டம் விலகியது.

எனினும் சரணடைய முன்பாக பொலிசாரிடம் சிக்கிக் கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வால், மிகப் பாதுகாப்பாகவே நடமாடினார்கள்.

காட்டுக்குள் மூன்று நாட்கள் பயணம் செய்து எட்டாவா மாவட்டக் கிராமம் ஒன்றிற்கு சென்றனர்.

காட்டு வழியாக செல்லும்போதே, இடைக்கிடையே சாலைக்கு வந்து, லொறிகளை வழி மறித்து கொள்ளையடித்தனர்.

அதனால் பெரும் தொகையான பணம் கையில் இருந்தது.

தாம் சென்ற கிராம மக்களுக்கு மனம் குளிர வாரி வழங்கினாள் பூலான்.

பூலான் குழுவினர் அந்தக் கிராமத்தில் இருப்பதை எட்டாவா பொலிஸ் அதிகாரி அறிந்து கொண்டார்.

அவர் பூலானைப் பிடிப்பதற்கு பொலிஸ் படையை அனுப்புவதற்கு பதிலாக ஒரு தூதரை அனுப்பிவைத்தார்.

தூதர் சொன்ன செய்தி பூலானைக் குழப்பியது.

(தொடர்ந்து வரும்)

## பாரிசுக்கு ரோஜா

காதலர் தினமான பெப்ரவரி 14 ஃபிரான்ஸ் நாட்டில் வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அதுவும் பாரிஸ் நகரில் காதல் ஜோடிகளின் கொட்டம் தாங்க முடியவில்லை.



காதலர் தினத்தை முன்னிட்டு ரோஜாக்கள் கொடுத்துவிட்டுத்தான் முத்தங்களை பரிமாறுவர் பாரிஸ் காதலர்கள்.

அதனால் பாரிஸில் காதலர் தினத்தன்று ரோஜாக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டன.

அதனை தெரிந்து வைத்துக்கொண்டு இந்தியா போன்ற நாடுகளில் உள்ள கில்லாடி வியாபாரிகள் ரோஜாக்களை பாரிசுக்கு கடத்தினார்கள்.

பெட்டிகளில் மறைத்துவைத்து, இறக்குமதிக்கான அனுமதி பெறாமல் களவாக அனுப்பப்பட்ட ரோஜாக்களில் ஒரு பகுதியை ஃபிரான்ஸ் விமான நிலையத்தில் பிடித்து விட்டனர். அவற்றின் பெறுமதி கிட்டத்தட்ட நாலரை இலட்சம் ரூபாய்கள்.

சில மேற்குலக நாடுகளில் கல்லூரிகளில் எச்சரிக்கை அறிவிப்புக்கள் தொங்க விடப்பட்டிருந்தன.

"மாணவிகளே! சொக்கலேற்றுக்கும், பூக்களுக்கும் மயங்கி உங்களை இழந்து விடாதீர்கள். ஒருநாள் சுகத்தால் பல மாதங்கள் வருந்த நேரும் என்பதை மறந்துவிடாதீர்கள்" என்று எழுதி வைத்திருந்தனர். மாணவிகள் மறக்காமல் இருந்தனரா தெரியவில்லை.

## குழப்பல் அழகிகள்

ஸ்டார் ரி.வி.யில் இரண்டு அழகிகள் தூள் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். இருவரும் இந்தியாவின் மும்பை அழகிகள்.



இருவரும் இரட்டையர்கள். ஒருவர் பெயர் மாயா. இன்னொருவர் பெயர் இரா. ஒட்டிப் பிறந்த இரட்டையர் அல்ல. 18 நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து பிறந்த இரட்டையர்.

மொடலிங் தொழில் செய்துவிட்டு, தற்போது விளம்பரப் படங்களில் நடித்து வருகின்றனர்.

இருவரும் சேர்ந்து வந்தாலும், தனியாக வந்தாலும் யார் மாயா, யார் இரா என்று தெரியாது. சகல சமாச்சாரங்களிலும் ஒரே விதமாகவே தெரிகிறார்கள்.

அவர்களாக அறிமுகப்படுத்திக் கொண்டால்தான் யார் எவர் என்று தெரிகிறது.

## ஆச்சரிய விடுதி



அகழ்வாராய்ச்சி மூலம் பழங்கால நாகரிக சின்னங்கள் பலவற்றை கண்டுபிடித்து வருகிறார்கள்.

கிரேக்க துறைமுகம் அருகே உள்ள சலோனிகாவில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழங்கால ஆச்சரியம் என்ன தெரியுமா? விபச்சார விடுதி.

நிலத்துக்கு கீழே அகழ்வாராய்ச்சி செய்தவர்களால் இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட இந்த விபச்சார விடுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வரவேற்பறை, நீராவிக் குளியல் அறை, கிளுகிளுப்பான சித்திரங்களும் வரையப்பட்ட சல்லாப அறைகள் என்று சகல வசதிகளுடன் கூடிய விபச்சார விடுதியாக இருந்திருக்கிறது.

குளியலறைகள் மட்டும் 25 உள்ளன. அறைகள் பளிங்குக் கற்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. எண்ணெய் விளக்குகளும் காணப்பட்டன.

உல்லாசமாக இருப்பதற்கு வஞ்சகம் இல்லாமல் செலவழித்திருக்கிறார்கள்.

## வசூல் மழை



ஹொலிவூட் படங்களின் வசூல் மூக்கில் விரலை வைக்குமளவுக்கு செல்வது வழக்கம்தான்.

ஹொலிவூட்டில் சமீபத்தில் வெளியாகிய திரைப்படம் 'டைட்டானிக்'. வெளியாகி இரண்டுமாதம் பூர்த்தியான போது அதன் வசூல் எவ்வளவு தெரியுமா? பத்தாயிரத்தி நாற்பது கோடி. இதே வேகத்தில் வசூலை அறுவடை செய்தால் ஏற்கனவே வசூல்மழை பொழிந்த ஹொலிவூட் படங்களையும் ஓரம் கட்டிவிடும் என்கிறார்கள்.

தற்போதைய நிலவரப்படி இதுகாலவரை வெளியான ஹொலிவூட் படங்களில் வசூலில் 10வது இடத்தில் இருக்கிறது டைட்டானிக்.

முதல் பத்துப் படங்களின் பெயர் விபரம்: 1. ஸ்டார் வோர்ஸ். 2. ஈடி 3. ஜுராசிக் பார்க். 4. பாரஸ்ட் கேம்ப் 5. தி லயன் கிங் 6. இன்டி பென்டன்ஸ் டே 7. ரிட்டர்ன் ஒப் தி ஜெடி 8. தி எம்பயர் ஸ்டிரைக்ஸ் பேக் 9. ஹோம் அலோன் 10. டைட்டானிக்.

## கிளின்ரனுக்கு கிடுக்கிப்பிடி

அமெரிக்க அதிபர் கிளின்ரன் ஈராக்கை அதிரவைப்பது என்று கங்கணம் கொண்டிருக்கிறார்.

ஆனால், கிளின்ரனின் செக்ஸ் ஊழல் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிடும் தகவல்கள் கிளின்ரனை அதிரவைத்துக் கொண்டிருக்கின்றன.

கிளின்ரன்மீது இறுதியாக புகார் கூறியுள்ள மோனிகாவுடன் கிளின்ரன் பூட்டிய அறைக்குள் இருந்ததை பாதுகாப்புப் பணியில் இருந்த ஒருவரின் சாட்சியம் உறுதி செய்திருக்கிறது.

வெள்ளை மாளிகையில் 27 வருடமாக பணியாற்றிய அந்த பாதுகாப்பு ஊழியரின் பெயர்: லீவிங் பொக்ஸ்.

"கடந்த ஆண்டு செப்டம்பரா அல்லது நவம்பரா என்று நினைவு இல்லை. அந்த மாதம் சனிக்கிழமை மாலை நேரம் கிளின்ரனை சந்திக்க மோனிகா வந்தார்: உள்ளே அனுப்பு" என்றார் கிளின்ரன்.

இருவரும் 40 நிமிடம் அறைக்குள் தனியாக இருந்தனர். நான் பூட்டிய கதவுக்கு வெளியே இருந்தேன்" என்று கூறியிருக்கிறார்.

"வெள்ளை மாளிகையில் கிளின்ரனின் அறையில் 'செக்ஸ்' வைத்துக் கொள்ளப் பெரிய வசதிகள் இல்லை. அதனால் வாய்மூல செக்ஸ் உறவே வைத்துக் கொண்டோம்" என்று மோனிகா கூறியிருக்கிறார்.

வெள்ளை மாளிகையின் இன்னொரு ஊழியரான நெல்விஸ் பின்வருமாறு சாட்சி அளித்துள்ளார்: "நான் கிளின்ரன் அறைக்கு ஒருநாள் சென்றேன். அப்போது கிளின்ரனும் மோனிகாவும் ஆடையின்றி கட்டிப்பிடித்த நிலையில் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். ஓடி வந்துவிட்டேன்" என்கிறார்.

வெள்ளை மாளிகை ஊழியரும் மோனிகா விவகாரம் அம்பலமாகக் காரணமாக இருந்த வருமான லிண்டா என்ற பெண்மணியும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.



"ஒருநாள் நான் கிளின்ரன் அலுவலகம் நோக்கிச் சென்றபோது, அங்கிருந்த கேதலின் வில்லி என்ற இளம் பெண் ஊழியர் கலைந்த கேசத்துடனும், லிப்டிஸ்க் அழிந்து, அவசரத்தில் சரியாக மாட்டப்படாத ஜாக்கெட்டுடனும் வந்ததைப் பார்த்தேன்" என்றுள்ளார்.

அழகி மோனிகாவை வெள்ளை மாளிகையில் இருந்து வேறு இடத்திற்கு பதவி மாற்றம் செய்திருந்தனர். அதன்பின்னரும் 37 தடவைகள் வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்து கிளின்ரனை தனியாகச் சந்தித்தாராம் மோனிகா.

புகார்களும், சாட்சியங்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. கிளின்ரன் தனக்கு முன்பிருந்த ஜனாதிபதிகளின் 'செக்ஸ்' சாதனைகளை வெற்றிகரமாக முடியடித்து விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# எல்லாமே நம்பிக்கைதான்



↑ வேடிக்கை காட்டுவதற்காக முகத்தை இப்படி வைத்திருக்கிறார் என்று எண்ணிவிடாதீர்கள்.

பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் நாட்டுக்கு நாடு மட்டுமல்ல, ஒரு நாட்டுக்குள்கூட பற்பல விதமாக இருக்கும். ஆபிரிக்காவின் தென்மேற்கே ஐவரி கோஸ்ட் என்னும் நாடு இருக்கிறது. உலகம் நாகரிகப் படிக்கட்டில் பல தூரம் முன்னேறிய பின்னரும், அங்குள்ள மக்கள் இன்னமும் மிகப் பழங்கால மரபுகளில் இருந்து மீளவே இல்லை.

அறுவடை காலத்தில் கெட்ட தேவதைகள் வந்து தங்கள் அறுவடையை நாசம் பண்ணிவிடக்கூடாதே என்பதற்காக, அறுவடை காலத்தில் தங்கள் உடல்களிலும் முகங்களிலும் பயங்கரமான ஒப்பனைகள் செய்து கொண்டு நடமாடுவர். காவலுக்கு இருப்பர். இந்தத் தோற்றத்தில் இவர்களைக் கண்டால் கெட்ட தேவதைகள் கிட்டவும் வராது என்று ஒரு நம்பிக்கை. இங்கு யாராவது இறந்துவிட்டால் இளம் பெண்கள் தங்களை விசித்திரமாக அலங்கரித்துக் கொண்டு நடனமாடுவார்கள். அத்தகைய சமயங்களில் அவர்களது அங்க அசைவுகள் பயங்கரமாக இருக்குமாம். சிரிக்காதீர்கள்; மண்முடிப் போகாத கண் முடித்தனமான பழக்கவழக்கங்கள் எங்குதான் இல்லை?!

# தகவல் பெட்டி

## உலக மகா ஆடு

↓ உங்கள் வீட்டு ஆடு, எங்கள் வீட்டு ஆடு அல்ல, உலக மகா ஆடு இது!

உலகிலேயே இதுவரை பிறந்து வளர்ந்த ஆடுகளில் எடைகூடிய ஆடு இதுதான், செம்மறி ஆடு.

என்ன எடை தெரியுமா? 247. 2 கிலோ (545 இறாத்தல்) (நைசாக இடையிலே தூக்கி வைத்துக்கொண்டு போகவே முடியாத எடை). இதன் உயரம் 1.09 மீட்டர் (43 அங்குலம்).

இந்த உலக சாதனை ஆடு அமெரிக்காவில் உள்ள ஒரேகன் மாநிலத்தில் போறிங் என்ற இடத்தில் ஜோசப் ஸ்கால்பேகர் என்பவரின் பண்ணையில் வளர்க்கப்பட்டது.

இந்த செம்மறி ஆட்டுக்கு பெயரும் சூட்டிவிட்டனர். 'ஸ்டார்ட்டட் விஸ்பர்' என்பது தான் பெயர்.





## அன்றுபோல் இன்றும்

← எதிரிப் படை நிலைகொண்டுள்ள திசை நோக்கி ஆட்டிலெறிகள் ஷெல்களை ஏவும் காட்சிதான் இது. ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்டிலெறிகளை நிறுத்தி வைத்து தாக்குதல் தொடுக்கப்படுகிறது. இதனையே ஆட்டிலெறிப் படைப் பிரிவு என்பர்.

தரைப்படை முன்னோக்கி நகருவதற்கு முன்னர் எதிரியின் நிலைகளைத் தாக்குவது, அல்லது எதிரிகளைப் பதுங்கிக் கொள்ளச் செய்துவிட்டு, அந்த அவகாசத்தில் தரைப்படைகள் எதிரியின் பிரதேசத்துக்குள் புகுந்து கொள்வது போன்ற தந்திரங்களுக்காகவும் ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தப்படும். அதுதவிர, தாம் நிலை கொண்டுள்ள பகுதிகளுக்கு அருகில் எதிரிப் படைகள் வந்து சேர்வதைத் தடுக்கவும் ஆட்டிலெறித் தாக்குதல் மேற்கொள்ளப்படும்.

படத்தில் இருக்கும் காட்சி இரண்டாம் உலகப்போர்க்களத்தில் எடுக்கப்பட்டது. ஆனால் வன்னிப் போர்க்களத்திலும் கிட்டத்தட்ட இதே காட்சிதான். இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

படையினரின் ஆட்டிலெறிப் 'பிரிவு இவ்வாறுதான் தரைநகர்வுகளின்போது செயற்படுகிறது. படத்தில் இருப்பவை 105 எம்.எம். ஹொவிற்சர் பீரங்கிகள்.

↓ பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்று அறிந்திருப்பீர்கள். இந்த மரச்சட்டத்திற்கும் அது பொருந்தும்.

வின்சன்ற் வான் கஃப் என்பவர் நெதர்லாந்து நாட்டின் தலைச்சிறந்த ஓவியர். அங்கு அம்ஸ்டர்டாம் நகரில் அவரது ஓவியங்களை பாதுகாக்க தனியான காட்சிச்சாலையே இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

1991 ஏப்ரல் 14ல் ஒரு துரதிஷ்டமான சம்பவம் நடந்தது. அந்தக் காட்சிச் சாலைக்குள் புகுந்து அவரது 20 ஓவியங்களை அபேஸ் பண்ணிக்கொண்டு போய்விட்டார்கள் திருடர்கள். திருடும் அளவுக்கு அப்படியென்ன இருந்தது அந்த ஓவியங்களில்? என்று நினைப்பீர்கள். என்ன இருந்ததோ, ஏது இருந்ததோ அவற்றின் மொத்தப் பெறுமதி 28 கோடி பவுண். நம்நாட்டு மதிப்பில் 2ஆயிரத்தி 856 கோடி ரூபாய்கள்.




உலகிலேயே நடைபெற்ற மிகப் பெறுமதியான ஓவியத் திருட்டு அதுதான். ஓவியங்கள் அனைத்தும் அழகான மரச் சட்டத்தால் பிரேமிடப்பட்டிருந்தன. என்ன காரணமோ தெரியவில்லை, பிரேம்களை விட்டுவிட்டு ஓவியங்களை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்துக்கொண்டு போய்விட்டனர். ஓவியத்தைப் பிரித்த மரச் சட்டங்களில் ஒன்று தான் இது. உலக சாதனைத் திருட்டு ஒன்றின் அடையாளமாக மிஞ்சியதால் இந்த மரச்சட்டமும் உலகப் புகழ் பெற்றுவிட்டது.

## பத்திரமான தூக்கம்

பொட்டென்று போய்விட்டார்களாக்கும் என்று நினைக்காதீர்கள். இது ஒன்றும் வித்தியாசமான சவப்பெட்டியல்ல. விமானக் குண்டுவீச்சால் சவமாகிவிடக் கூடாதே என்பதற்காக தயாரான பெட்டி.

இரண்டாம் உலகப்போரில் விமானக் குண்டுவீச்சுக்கள் முக்கிய இடம் வகித்தன. அந்நியர் தானே சாகிறார்கள் நமக்கென்ன என்ற அலட்சியத்தோடு ஒவ்வொரு நாடும் பிற நாடுமீது குண்டுமழை பொழிந்தது. இலங்கையிலும் திருமலை துறைமுகப் பகுதிகளில் ஜப்பான் விமானங்கள் குண்டுகளை வீசிவிட்டு போயிருக்கின்றன.

வெளிநாடுகள் பலவற்றில் இந்த காப்புப் பெட்டகம் செய்து விற்கப்பட்டது. இரும்பினாலும், கம்பிகளாலும் இது செய்யப்பட்டது.

கணவனும், மனைவியும் விமானத் தாக்குதல் பயமில்லாமல் ஒரே பெட்டியில் தூங்குகின்றனர். வீடு இடிந்து கூரைகள் விழுந்தால் கூட இரும்புக் கவசம் தாக்குப் பிடிக்கும் நசுங்காமல் தப்பலாம்.

நம் நாட்டில் வடக்கு-கிழக்குப் பகுதி மக்களுக்கு இவ்வாறான காப்புப் பெட்டிகள் கிடைத்தால் உபயோகமாக இருக்கும்.





படிப்பகம்

## மாமியும் — ஆன்டியும்

'அவ்வைச் சண்முகி' படத்தில் நடித்ததுபோலவே 'சாக்ஷி 420' படத்திலும் சேலை கட்டிக்கொண்டுதான் நடித்திருக்கிறார் கமல். சுரிதார் போட்டு நடிக்கத்தான் முதலில் திட்டமிட்டார். அது எடுப்பாக இருக்காது என்பதால் சேலையை சரணடைந்தார். தமிழில் போல் அல்லாமல் சிறு சிறு மேக்கப் வித்தியாசங்கள் உள்ளன. இந்தி மாமி தமிழ் மாமியை விட நகையும் அதிகம் அணிந்திருக்கிறார் பாருங்கள்.

'சாக்ஷி 420' பிய்த்துக் கொண்டு ஓடுகிறது. செம வசூல் கமலின் படம் இந்தியில் வெளியாக முன்பாக தனது படத்தை வெளியிட படாதபாடு பட்டார் கோவிந்தா. முடியவில்லை, கமல் முந்திக் கொண்டார். கோவிந்தாவின் படம் இன்னமும் வெளியான பாடாய் இல்லை.

'ஆன்டி நம்பர் 1' என்ற பெயரில் கோவிந்தா நடித்துள்ள படமும் மிஸஸ் டவுட் ஃபயர் படத்தின் தழுவல்தான். ஆனாலும் கமலின் மாமி மேக்-அப் முன்னால் ஆன்டியின் மேக்-அப் தாக்குப்பிடிப்பது கஷ்டம்தான். மாமி மாமிதான்.

'சாக்ஷி 420' பிரமாதப்படுத்துவதால் 'ஆன்டி நம்பர்1' படத்தை தாமதித்து வெளியிடலாமா? என்று யோசிக்கிறார்கள். தற்போது வெளியானால் வசூலில் அடிவாங்கும் என்று பயப்படுகிறார்களாம்.

## அம்மா வதி

சினிமாவுக்கு முழுக்குப் போடப் போகிறார் ரேவதி என்று செய்திகள் வந்தன. மறுக்காமல் இருந்துவிட்டு 'ரத்னா' படத்தில் நடிக்கிறார் ரேவதி. முக்கியமான விஷயம் யாதெனில், 'ரத்னா' படத்தில் ரேவதிக்கு அம்மா வேடமாம். அம்மாடி.

திரையுலக மறுபக்கம் 44

## மாட்டிக்கொண்ட மு
## கைதான 'வில்லி' நடிகை

எம்.ஜி.ஆர், சிவாஜி காலத்தில் பிரபலமான கதாநாயகர்களில் ஒருவராக இருந்தவர் அவர். தனது பெயரில் 'சந்திரன்' வைத்திருக்கிறார். சமீபத்தில் ரஜினி படம் ஒன்றிலும் நடித்தார்.

அந்த 'சந்திர' நடிகர் புகழின் உச்சியில் இருந்தபோது 'ஜெய' நடிகையுடன் சில காலம் நட்பாக இருந்தார். அவருடன் படம் ஒன்றில் கிட்டத்தட்ட அரை நிர்வாணமாக நடித்திருந்தார் 'ஜெய' நடிகை. எம்.ஜி.ஆருடன் பிரச்சனை ஏற்பட்ட காலத்தில் 'ஜெய' நடிகை அவருடன் நட்பாக இருந்தார். சிறிது காலம்தான் நட்பு தொடர்ந்தது. பின்னர் முறிந்தது. 'சந்திர' நடிகர் பின்னர் வில்லித்தனமான நடிகை ஒருவருடனும் நட்பானார்.


லலிதமான அந்த நடிகை தனது முழுக் கட்டுப்பாட்டில் நடிகரை வைத்திருந்தார்.

நடிகரோ ஏற்கனவே நடிகை ஒருவரை திருமணம் செய்திருந்தார். நடிகரை நம்பி நடிப்புக்கும் முழுக்குப்போட்டுவிட்டு ஒரு குழந்தையையும் பெற்றெடுத்திருந்தார் அந்த நடிகை.

ஆனால் நடிகரோ பல நடிகைகளின் பின்னால் சுற்றியதோடு, லலிதமான நடிகையின் வலையில் வசமாகச் சிக்கியும் கொண்டார்.

'லலித' நடிகைக்கு மாலையானால் மது அருந்தும் பழக்கம் உண்டு. மது உள்ளே போனால் நடிகை கண்டபடி புலம்பத் தொடங்கி விடுவார். நடிகரையும் தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டுவிப்பார்.

நடிகரும் தேனில் விழுந்த வண்டுபோல நடிகைமீது மையல்



விக்னேஷ்-இந்திரஜா
படம்: வேலை




ரம்பா
படம்: காதலா க

## மணி இல்லை

பொங்கல் படங்களிலும் மணிவண்ணனின் ஆட்சிதான். இன்னொரு மணியான கவுண்டமணிக்கு ஒரு படம்கூட இல்லை.

பார்த்தார் கவுண்டமணி, இப்படியே போனால் ஆபத்து என்று தன் சம்பளத்தை குறைத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்.

தனது சம்பளக் குறைப்புப் பற்றி சில பட நிறுவனங்களுக்கு அறிவித்தும் இருக்கிறாராம்.

## மழை இல்லை

'துள்ளித் திரிந்த காலம்' படத்தை இயக்கியிருப்பவர் பாலசேகரன். இவர் 'லவ்டுடே' வெற்றிப்பட இயக்குநர். இப்படத்தில் நடிக்க குஷ்புவை அழைத்தபோது முதலில் மறுத்தாராம். பின்னர் கதையைக் கேட்டபின்னர் அசந்துபோய் நடிக்க வந்தாராம். குஷ்புவுக்கு இதில் பெயர் சொல்லும்படியான பாத்திரம்.

அசத்தல் நாயகனுக்காக சகல இலட்சணங்கள் இருந்தும் அருண்குமார் காட்டில் மழை இல்லை. அந்தக் குறையையும் 'துள்ளித் திரிந்த காலம்' போக்கும் என்று நம்பப்படுகிறது.

## காதல் சங்கமம்

படப்பெயர்களில் 'காதல்' இருந்தால் பிய்த்துக் கொண்டு ஓடும் என்ற நம்பிக்கையில் சூட்டப்பட்டுள்ள படப் பெயர்களில் ஒன்று 'காதல் சங்கமம்'. வினித் கதாநாயகன். ப்ரீதா விஜயகுமார் கதாநாயகி. தெலுங்கில் 'ருக்மணி' என்ற பெயரில் வெளியான படம். அப்படியே தமிழுக்கு மொழி மாற்றுகிறார்கள்.

## நட்புக்காக

ஏ.எம்.ரத்னம் தயாரிக்க கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படம் 'நட்புக்காக'. இப்படத்தில் சிவாஜியும் நடிப்பதாக இருந்தது. பின்னர் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. சிவாஜி நடிக்க இருந்த வயதான பாத்திரத்திலும் சரத்குமார் நடிக்கிறார். சரத்குமார் வயதான பாத்திரத்தில் நடித்தால் அந்தப் படம் சூப்பர் ஹிட்டாகும் என்று நம்பிக்கையாம். உதாரணம் 'நாட்டாமை', 'சூர்யவம்சம்' படங்களின் செம வெற்றிகள்.



கமல்
படம்: சாக்ஷி 420

## வேலை கிடைச்சாச்சு

'வேலை' படத்தில் இந்திரஜாவுக்கு கவர்ச்சி காட்டும் வேலை. இந்திரஜாவின் கவர்ச்சியை கண்டு ஜொள்ளுவிடும் வேலை விக்னேசுக்கு.

அழகு இருந்தும் அதைக் காட்ட துணிச்சல் இருந்தும் படவாய்ப்புக்கள் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார் இந்திரஜா. வருத்தம் போயேபோயாச்சு. 'வேலை' கிடைத்திருக்கிறது. வெளுத்துக் கட்டுகிறார்.

"இந்திரஜாவுக்கு சிபாரிசு செய்தது நீங்கள் தானாமே?" என்று கேட்டால் விக்னேஷ் ஆம் என்றும் கூறாமல் இல்லையென்றும் கூறாமல் பின்வருமாறு அளக்கிறார்.

"வாழ்க்கையில் இப்போதுதான் செட்டிலாகி வருகிறேன். அந்தப் பெண் சுத்தமான தமிழ்ப் பெண் என்பதால் அவரை ஜோடியாப் போடுமாறு கூறியிருப்பேன்" என்கிறார். அதுபோதும்.

## வாரிசு நடிகை

நடிகையின் தங்கைகள் பட உலகில் சான்ஸ் பெறுவது சுலபம். தங்கைக்காக அக்கா சிபாரிசு செய்து விடுவார். யாரை எப்படி பிடித்தால் காரியம் நடக்கும் என்பது தெரியும்.

அம்பிகா, ராதிகா, பானுப்பிரியா, நக்மா ஆகியோரின் தங்கைகள் சினிமா உலகில் புகுந்தனர். இப்போது சரிதாவின் தங்கை பிரவீனாவும் நடிக்க வரப்போகிறார்.

## என்றென்றும் காதல்

விஜய்-ரம்பா ஜோடியாக நடித்துவரும் படம் 'நினைத்தேன் வந்தாய்' படம் வெளியாக முன்னரே புதிய படம் ஒன்றிலும் ஜோடி சேர்ந்துள்ளனர்.

குஞ்சுமோன் தயாரிப்பில் உருவாகும் புதிய படம் 'என்றென்றும் காதல்' அப்படத்தில்தான் விஜய்-ரம்பா இரண்டாவது தடவையாக ஜோடி சேருகிறார்கள்.

மனோஜ் பட்நாகர் இயக்குகிறார். 'ஊமைவிழிகள்', 'உழவன்' போன்ற படங்களுக்கு இசையமைத்த இரட்டை இசையமைப்பாளர்களில் ஒருவர்தான் மனோஜ் பட்நாகர். மனோஜ்-கியான் என்ற பெயரில் இசையமைத்தனர். தற்போது மனோஜ் படத்தை இயக்குவதோடு தனியாக இசையமைக்கவும் போகிறார்.

பானுப்பிரியா, ரகுவரன், செந்தில், ஜனகராஜ், சார்லி, விவேக் ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

## புளுகு சித்ரா

கமல், ரஜினி உட்பட பலருடன் கதாநாயகியாக நடித்தவர் ஜெயசித்ரா. இப்போது காங்கிரஸ் கட்சிக்காக பிரசாரம் செய்கிறார்.

இவர் பிரசாரங்களில் கூறும் தகவல்தான் கதிகலங்க வைக்கிறது.

-"ராஜீவ்காந்தி தனது கடைசிக் காலத்தில் கட்சியை காப்பாற்றுமாறு என்னிடம் கோரினார். அதனால்தான் அரசியலில் குதித்திருக்கிறேன்" என்று அற்புதமாக நடிக்கிறார். காங்கிரஸ் பிரமுகர்கள் சிலருடன் ஜெயசித்ராவுக்கு பலத்த புரிந்துணர்வு உண்டாம். அதனால்தான் அரசியலில் புகுந்து கொள்ள இடமளிக்கப்பட்டதாம். அதுதான் உண்மை. பாவம் ராஜீவ் பெயரை ஏன் இழுக்கிறார்?

தேவயானி

## இயக்குநர் மீது புகா

'சின்னக் கவுண்டர்' படத்தில் நட
தேவகி. இயக்குநர் களஞ்சியத்துடன் தே
நல்லுறவு ஏற்பட்டது. அவரும் தனது
சின்னப் பாத்திரம் ஒன்று கொடுத்
னார். அடிக்கடி தேவகி வீட்டுக்கு
வந்தார். களஞ்சியம் வளர்ந்து
இயக்குநர் என்பதால், அவரை தன்
திருமணம் செய்து வைக்க திட்ட
தேவகியின் அம்மா. விஷயம் தெரி
தால் இயக்குநர் விலகிக் கொண்ட

அதனால் கோபமடைந்த தே
வீட்டார் பல இலட்சங்கள் கேட்டு இய
மிரட்டினாராம். பயந்து போன இ
பொலிசில் புகார் செய்தார்.

பொலிஸ் விசாரணைக்குப் பயந்
தலைமறைவாகிவிட்டார். "என்மகளை
நர்தான் கடத்திக்கொண்டு போய்
என்று புகார் செய்திருக்கிறார் தா

## ஆடைத் திய

பொங்கல் படங்களில் வசூலி
ணணியில் நிற்கும் படம் 'உள
கதை என்று பார்த்தால் பூதக் க
வைத்து தேடவேண்டும். சண்டை,
பிரமாண்டம் என்று தன் ரசிக
விருந்து படைத்திருக்கிறார் விஜ

'உளவுத் துறை'யில் ஒரு அளவு
ஆடைகளை தியாகம் செய்ய மறு
மீனா. ஆனால் நாம் இருவர் ந
வரில் சென்சார் பற்றிய பயம்கூட இ
ஆடை இழப்புச் செய்திருக்கிறார்.
தில் மீனாவின் நடன அசைவுகளும்
நடத்தியுள்ளன. அதனை அறிந்த வி
மீனாமீது சற்று வருத்தத்தில் இருக்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## ...ன்னணி நடிகர்

...கொண்டு கிடந்தார். படப்பிடிப்புக்களுக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. நடிப்பிலோ, தன் பாத்திரத்திலோ முழுக் கவனம் செலுத்துவதும் இல்லை.

அதனால் இவர் நடித்த பல படங்கள் வரிசையாகத் தோல்வி காணத் தொடங்கின. ஆனால் பணத் தேவை அதிகமாக இருந்தமையால், மளமளவென்று பல படங்களில் ஒப்பந்தமானார் நடிகர். தொடர் தோல்விகளால் ஒப்பந்தமான படங்களில் இருந்தும் தூக்கப்பட்டார். வாய்ப்பில்லாமல் முடங்கிப் போனார்.

### உண்மைகள் புரிந்தன.

அப்போதுதான் நடிகருக்கு பல உண்மைகள் தெரியவந்தன. பல நடிகர்கள் 'லலிதமான' நடிகையிடம் மாட்டிக்கொண்டு துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடியிருக்கிறார்கள்.

நடிகருடன் தொடர்பு வைத்துக்கொண்டே, செட்டியாரான பட முதலாளி ஒருவருடனும் நடிகை இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார்.

நடிகருக்கு படவாய்ப்புக்கள் இல்லையென்றதும் நடிகை அவர் முன்பாகவே தயாரிப்பாளருடன் குலாவத் தொடங்கிவிட்டார்.

அந்தத் தயாரிப்பாளர் தவிர வேறு புது நண்பர்களும் நடிகை வீட்டுக்கு வரத் தொடங்கினார்கள்.

ஒரு நாள் நடிகர் வெளியே சென்றுவிட்டு திரும்பி வந்தபோது இளம் இயக்குநர் ஒருவர் சோபாவில் அமர்ந்திருக்க அவர் மடியில் அமர்ந்து குலாவிக் கொண்டிருந்தார் நடிகை.

நடிகர் எதுவும் பேசவில்லை. வந்த வழியே திரும்பிப்போனவர் போனவர்தான். பின்னர் நடிகை வீட்டுப் பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை. நடிகருக்கு தொடர்ந்து சோதனைகள். நடிகருடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டு மனைவி நடிகையும் தனியாகப் போய்விட்டார். தயாரிப்பாளர்களும் திரும்பிப் பார்க்காமல் இருந்தனர். 'லலிதமான' நடிகைக்கும் இளமை இருந்தவரைதான் வலைவீசி உல்லாசம் காண முடிந்தது. பின்னர் துணை நடிகைகளை கைக்குள் போட்டுக் கொண்டு பெரிய வீடு ஒன்றை வாடகைக்கு பிடித்து 'தொழில்' நடத்தினார்.

### கைது

பெரும் பிரமுகர்கள் வாடிக்கையாளர்கள். நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது. சென்னையில் பிரபலமான அரசியல் தலைவர்கள் அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரை லலிதமான நடிகை தன் உபசாரத்தால் கவர்ந்து கொண்டார்.

ஆனால் தமிழ் நாட்டில் கவர்னர் ஆட்சி வந்தபோது 'நடிகையின் தொழிற்கூடம்' முற்றுகையிடப்பட்டது. அங்கிருந்த துணை நடிகைகள், அழகிகள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். நடிகையும் கைதானார்.

தற்போது சில படங்களில் இடைக்கிடையே தலை காட்டிவருகிறார். விஜயகாந்த் நடித்த படம் ஒன்றிலும் வில்லியாக தோன்றியிருந்தார்.

## காதோடு சொல்லுகிறோம்!

**கா**தலுக்கு மரியாதை கொடுக்கும் மூன்றெழுத்து இளம் ஹீரோ முன்னர் 'சங்க' நடிகைக்கு பலமாக சிபாரிசு செய்துவந்தார். தந்தைக்குலமும், தாய்க்குலமும் தகுந்த நேரத்தில் தலையிட்டதால் ஒரு எல்லையோடு நட்பு நல்லவிதமாய் பூர்த்தியானது. இப்போது 'ரம்ப' நடிகைக்காக சிபாரிசு செய்யத் தொடங்கியிருக்கிறார் ஹீரோ. நினைத்ததும் நடிகர் அழைக்க வந்து தரிசனம் கொடுத்தாராம் நடிகை. அதனால்தான் அடுத்த படத்திலும் சிபாரிசு.

'**சி**ம்ம' நடிகையின் முன்னேற்றத்தால் பாதிக்கப் பட்டிருக்கும் 'ரம்ப' நடிகை முன்னர்போல அல்லாமல் பந்தாவை மூட்டை கட்டி மூலையில் வீசிவிட்டு, அழைப்பவர் குரலுக்கு அன்பொழுக பதில் சொல்வது, பிரதான அழைப்புக்களை ஏற்பது என்று சமர்த்தாக நடந்து கொள்கிறாராம்.

**இ**யக்குநர் இமயத்தால் அறிமுகம் செய்யப்பட்டு கறுப்பாக நடித்த நடிகை அவர். 'ஸ்ரீ' என்று பெயர் முடியும். அவர் வீட்டுக்குத் தயாரிப்பாளர்களோ, அல்லது இயக்குநர்களோ யார் போனாலும், 'இதோ குளித்துவிட்டு வருகிறேன்.' என்று சொல்லிவிட்டு, அரைக்காற்சட்டையுடன் திரும்பி வருவார். கிளுகிளுப்பாக நெருங்கி நின்று பேசுவாராம். நல்ல விறுத்தம்மா.

**தே**ர்தலிலும் இம்முறை குதித்துள்ள நடிகர் அவர். அல்வாவுக்கு பெயர் போன ஊர்ப்பெயர் கொண்ட தொகுதியில்தான் போட்டியிடுகிறார். மூன்றெழுத்து 'மா' வெண்ணெய் நடிகையுடன் ராசியானதால் மனைவியும் பிள்ளைகளும் தனியாகப் போய் வசித்தனர். அப்படியும் நடிகையைப் பிரிய மறுத்தார் நடிகர். மனைவி விவாகரத்துகோரி வழக்குத் தொடுத்தார். இப்போது சுமுகமான முடிவுக்கு வந்துள்ளார். ஒரு கோடி ரொக்கப்பணம், ஒரு பங்களா, ஒரு கார் ஆகியவற்றைக் கொடுத்து 'குட்பை' சொல்லிவிட்டார் நடிகர். குழந்தைகள் தாயிடம்தான் வளரப்போகின்றன.

**செ**ன்ற தேர்தலில் பிரசாரத்திற்கு வரமாட்டேன் என்று அடம்பிடித்த ரயில் நடிகை இம்முறை பிரசார வடம் பிடித்துக் கொண்டிருக்கிறார். தலைவரே நேரில் அழைத்து அன்புக் கட்டளை போட்டதால்தான் மனம் குளிர்ந்துபோனாராம். நடிகைகள் பிரசாரத்தில் ஈடுபட்டால் பல அனுகூலங்கள் இருப்பதாக தலைவர் கணக்குப் போட்டுத்தான் நடிகையை அழைத்தார். வேறு சில நடிகைகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. 'நோ' சொல்லி விட்டார்கள்.

**தா**மரைக் கட்சி சார்பாக 'கௌ' நடிகை பிரசாரம் செய்வதற்கு காரணம் இந்தி நடிகர் ஒருவர்தானாம். 'சத்துரு'வான அந்த நடிகர் 'கௌ' நடிகைக்கு பிரசார ஊதியமாக சில லகரங்களை வாங்கிக் கொடுத்து ஒப்பந்தம் செய்து வைத்தாராம். கையிலே காசு, வாயிலே பேச்சு.

## 'காதலிக்க நேரமுண்டு'

'காதலிக்க நேரமில்லை' அந்தக் காலத்தில் சூப்பர் ஹிட்டான படம். ஸ்ரீதர் இயக்கத்தில் ரவிச்சந்திரன், காஞ்சனா, நாகேஸ், பாலையா நடித்த படம்.

இப்போது தயாராகும் படம் ஒன்றுக்கு சூட்டப்பட்டுள்ள பெயர் 'காதலிக்க நேரமுண்டு'. நடிகர் ரவிச்சந்திரனின் மகன் அம்சவிர்தன் இப்படத்தில் கதா நாயகனாக அறிமுகமாகிறார். ரவிச்சந்திரன், நடிகை ஷீலா ஆகியோரின் மகன்தான் அம்சவிர்தன். அசப்பில் ரவிச்சந்திரன் மாதிரியே இருக்கிறார். கதாநாயகியும் புதுமுகம். பெயர் சாயிஸ்ரீ. முக்கிய வேடத்தில் ஜெமினி கணேசன் நடிக்கிறார். இயக்கம்: அபராஜிதன். இசை: எஸ்.ஏ. ராஜ்குமார். முழுக்க முழுக்க காதலுக்கு முக்கியத்துவம் உள்ள கதை.



கோவிந்தா
படம் ஆன்டி நம்பர்.1



விஜயகாந்த்-மீனா
படம் உளவுத்துறை

## மினி சினி

* முரளி-குஷ்பு-வினிதா நடிக்கும் 'வீரத்தாலாட்டு' படத்தில், முரளிக்கு அப்பாவாக கௌரவ வேடத்தில் நடிக்கிறார் ராஜ்கிரண். இதில் ராஜ்கிரணுக்கு ஜோடிகளாக ராதிகாவும் லட்சுமியும் நடிக்கிறார்கள்.
* அரவிந்தசாமி-மாதுரி டிக்ஷிட் ஜோடியாக நடிக்கும் 'என்ஜினியர்' படத்தை இயக்குபவர் புதிய இயக்குநர் காந்தி கிருஷ்ணா. ஷங்கரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த இவர் உண்மையிலே ஒரு என்ஜினியர்.
* 'கிழக்கு முகம்' படத்தில் கார்த்திக்கின் தங்கையாக அறிமுகமானவர் ஆஷா. அதன் பின் 'பொங்கலோ பொங்கல்' படத்தில் நடித்திருந்த ஆஷா, தற்போது தனது பெயரை ரங்கீலா என்று மாற்றி வைத்துள்ளார்.
* 'காதல் மன்னன்', 'காதலா காதலா' ஆகிய படங்களில் நடித்து வரும் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன், பல வருடங்களுக்கு முன் பி.யு.சின்னப்பா நடித்த 'கண்ணகி' என்ற படத்தில் சிறிய வேடமொன்றில் நடித்துள்ளார்.
* செல்வா முதன் முறையாக கதை, வசனம் எழுதி இயக்கி நடிக்கும் படம் 'கோல்மால்'. இதற்கு முன் இவர் தனது அண்ணன் டாக்டர் ராஜசேகர் நடித்த 'மீசைக்காரன்', 'ஓம்' போன்ற படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார்.
* சேரன் இயக்கிய 'பொற்காலம்' படத்தில் வாய் பேசமுடியாத பெண்ணாக வந்து அனைவரது பாராட்டையும் தட்டிச் சென்றவர் ராஜேஸ்வரி. இவரைத் தனது அடுத்த படமான 'பாரசீக ரோஜா' படத்திலும் நடிக்க வைத்துள்ளார் சேரன்.
* 'ஜீன்ஸ்' மற்றும் 'கல்யாண கலாட்டா' ஆகிய படங்களில் நகைச்சுவை வேடத்தில் நடித்து வருகிறார் எஸ்.வி. சேகர். விரைவில் இவர் குழந்தைகள் பற்றிய நகைச்சுவைப் படமொன்றை இயக்கவிருக்கிறார்.
* அகால மரணமடைந்த பிரபல பின்னணிப் பாடகர் ஷாகுல் ஹமீட்டின் சகோதரர் சம்சுடீன், பாண்டியராஜன்-ரசிகா நடிக்கும் 'கபடி கபடி' படத்தின் மூலம் பின்னணிப் பாடகராக அறிமுகமாகிறார்.
* மு. களஞ்சியம் இயக்கத்தில் நெப்போலியன்-தேவயானி நடித்த 'கிழக்கும் மேற்கும்' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் என்ன தெரியுமா? 'சாமி கொடுத்த வரம்'.
* 'உதிரிப்பூக்கள்', 'முள்ளும் மலரும்' போன்ற பல வெற்றிப் படங்களை இயக்கியுள்ள மகேந்திரன், இப்போது 'சாசனம்' என்ற படத்தை இயக்கி வருகிறார். கதாநாயகனாக நடிக்கும் அரவிந்தசாமி இப்படத்திற்காக ஊதியம் எதுவும் வாங்கவில்லை.
* அர்ஜுன் நடிக்கும் 'சூர்யப்பார்வை' படத்தில் நாயகியாக அறிமுகமாகும் பூஜா, நடிகை ஜெயசுதாவின் சகோதரி சுபாஷினியின் மகள். சுபாஷினி 'அழகே உன்னை ஆராதிக்கிறேன்' போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்தவர்.

## தர்மா தயார்

'உளவுத் துறை' வெற்றியால் உற்சாகமடைந்துள்ள விஜயகாந்த் அடுத்து நடிக்கும் படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'தர்மா'. கதாநாயகி தேர்வு நடந்துவருகிறது. இப்படத்தின் துவக்க விழா தமிழக மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனார் தலைமையில் நடைபெற்றுள்ளது. இயக்கம்: கேயார் இசை: இளையராஜா. இதுவும் விஜயகாந்தின் சொந்தத் தயாரிப்பு.

## கைவிடுவானா மன்னன்?

'காதல் மன்னன்' படமும் கைவிடுமானால் அஜித்குமார் காணாமல் போனாலும் ஆச்சரியமில்லை. தோல்விமேல் தோல்வி.

ஹீராவை எட்டியும் பார்ப்பதில்லை. ஹீராவும் எட்டிப் பார்ப்பதில்லை. 'ஆசை', 'காதல் கோட்டை' படங்கள் தந்த வெற்றிப் போதையில் எக்கச்சக்கமாக உளறிவிட்டதாக தினமும் வருந்துகிறார் அஜித்குமார்.

'காதல் மன்னன்' இளம் தலைமுறையை கவரும் படம். அதனால் வெற்றி நிச்சயம் என்கிறார் இயக்குநர் சரண். வெற்றி நிச்சயம் என்பது வென்ற பின்னர் தானே. உறுதியாகும். காதல் மன்னன் படத்தில் அஜித்குமாரின் ஜோடி மானு.

## நண்பர் மட்டும்தான்!

'என் ஆச ராசாவே' படத்தில் சிவாஜியுடன் நடிப்பதை நினைத்து நிலை கொள்ளாத சந்தோசத்தில் இருப்பவர்கள் இரண்டுபேர் ஒருவர் முரளி இன்னொருவர் சுவலட்சுமி.

"அந்த மாபெரும் கலைஞனுடன் நடிப்பதற்கான நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்" என்கிறார் சுவலட்சுமி.

சுவல்ட்சுமிக்கும் கார்த்திக்கும் இடையே படப்பிடிப்பு ஒன்றில் ஒரு 'இது' ஏற்பட்டதாக கதை பரவியது. இருவரும் கார் ஒன்றில் தனியாகச்சென்று நீண்ட நேரத்தை கழித்தனர் என்பதுதான் கதை. "பச்சைப் பொய். கார்த்திக் நல்ல நண்பர். அதற்குமேல் ஒன்றுமில்லை" என்கிறார் சுவலட்சுமி.

## சேரனுக்கு குட்டு

'பொற்காலம்' பட இயக்குநர் சேரன் கமலை குறைகூறியிருந்தார். சக தொழிலாளர்களை கேவலமாக நினைப்பவர் கமல் என்று கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

உடனே இயக்குநர் சந்தானபாரதி நடன இயக்குநர் ரகுராம் போன்றோர் சேரனை குட்டியுள்ளனர். "சக தொழிலாளர்களை மதிப்பவர்தான் கமல். சேரனுக்கு சின்ன வயது. அதனால் கமலை அறிந்து கொள்ளும் பக்குவம் போதாது என்று குட்டு வைத்திருக்கிறார்கள்.



படிப்பகம்

# இல்லை

'இல்லை'யில் தொடங்குகிறேன்.
ஏனெனில் 'இல்லை'யில்தான்
எல்லாம் தொடங்கின.

மேலும் 'இல்லை'யில்தான்
தொடங்க முடியும்.
'உண்டு' என்பது முடிவு.

எல்லாம் 'இல்லை'யில் தொடங்கி
'உண்'டில் முடிகின்றன.

'இல்லை' இருந்ததால்தான்
மனிதன் முன்னேறினான்.
'இல்லை' இல்லையென்றால்
அவன் பிறந்தபடியே
இருந்திருப்பான்.

'இல்லை'யின் வாசலில்
'வேலைக்கு ஆள் தேவை' என்ற
பலகை தொங்குகிறது.

'உண்'டின் வாசலில்
'வேலை காலி இல்லை' என்ற
பலகை தொங்குகிறது.

'இல்லை' என்பது
காலியாக இருப்பது.
காலியாக இருப்பதே
உபயோகப்படுகிறது!

நீரெடுக்கப் போகிறவன்
காலிக் குடத்தையே கொண்டு
போகிறான்.

வீட்டில் காலி இடத்தில்தான்
மனிதன் வசிக்கிறான்.

காலியாக இருப்பவனே
நிரம்புவான்.

'இல்லை' என்பது மறுப்பது.

இருப்பதைத்தான்
மறுக்க முடியும்.
இல்லாததையும் மறுக்க முடியாது.

'உண்டு' இருந்தால்தான்
'இல்லை' இருக்க முடியும்.
வெறும் 'இல்லை'க்கு
அர்த்தம் இல்லை.

எனவே 'உண்டி'ல் இல்லை உண்டு.
'இல்லை'யில் 'உண்டு' உண்டு.

'இல்லை' ஆண்
'உண்டு' பெண்.

இரண்டும் ஒன்றின்
பாதிகள்.
இரண்டும் காதலால்
ஒன்றை ஒன்று
ஈர்க்கின்றன.

'இல்லை' இல்லாமல்
'உண்டு' இல்லை.
'உண்டு' இல்லாமல்
'இல்லை' இல்லை!

இறைவன்
'இல்லை'யில் இருக்கிறான்.
'உண்'டில் மறைகிறான்.



அப்துல் ரகுமான்

# வந்துவிடு..!

தனிமை
என்
உயிர்
விருட்சத்தை
தறித்து
விடுவதற்குள்
வந்து விடு!

**

உன்
நினைவுகளின்
இம்சிப்பால்
தென்றலும் கூட
எனை
அனல் காற்றாய்
அச்சுறுத்துகின்றது!

**

பிரிவு...
உறுதியான பின்
இணைவதில்
இன்பமில்லை;
இதயத்தில்
நிம்மதியுமில்லை,
உறவு...
நிச்சயமான பின்
பிரிவதில்
இன்பமில்லை;
ஆனால்....
இதயத்தின்
ஒரு
ஓரத்திலாவது
நிம்மதி
நிச்சயம்!

**

எனனுள்
நிம்மதி
நிர்மூலமாகி
விட்டது.
இதயத்து
இன்பமும்
இடம் தெரியாமல்
தடம் புரண்டு
போய் விட்டது.

**

உன்னுடைய
உறவில்
உலர்ந்து,
பிரிவில்
கரைந்து
நான்..
மெழுகாய்
ஒழுகிப்
போகுமுன்
நீ—
வந்துவிடு!

ஏறாவூர் ஸபீர் ஹாபிஸ்.

# இனப் படுகொலை



இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் ஜெர்மன் படை தோல்வியைத் தழுவியது. அங்கு புகுந்த நேசநாட்டுப் படைகள் ஹிட்லரின் வதைமுகாம்களில் இருந்த கைதிகள் பலரை விடுவித்தனர். பலியான உடல்களை மீட்டன. பல்லாயிரம் யூதர்கள் ஹிட்லரின் படைகளால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

இங்குள்ள காட்சி மிகச் சோகமானது. வதை முகாம் ஒன்றில் அடைக்கப்பட்டு, உணவும் இன்றி வாடிச் செத்தனர் பல நூறுபேர். அவர்களில் சிலரது உடல்களைத்தான் பிரிட்டிஷ் படையினர் மீட்கின்றனர். பிரிட்டிஷ் படையிடம் சரணடைந்த ஜெர்மன் துருப்புக்கள் மீட்புக்கு உதவுகின்றன. உலக மகா கோரத்திற்கு ஒரு சிறிய உதாரணம் இப் புகைப்படம்.

# பாதுகாப்பு

'திருடர்கள்
ஜாக்கிரதை' யென்று
எழுதப்பட்டிருக்கிறது
ஆலய வாசல்களில்!

தனது பக்தர்களுக்காக
கல்லடிபடுகின்றன
பிள்ளையார் சிலைகள்...

அகிம்சையென்று
எழுதப்பட்ட கற்களால் உருவான
கட்டடங்கள்—
சிதறிப் பெயர்ந்து
இரத்தப் பொட்டிட்டுக் கொள்கின்றன!

கடவுள்களை
காப்பாற்ற வேண்டும்;
'காப்பாற்று! காப்பாற்று!' என்று
பின் எப்படி கெஞ்சுவதாம்!

எல்.பிரபா, பதுளை.

# கருகிய காதல்

எம் நேசத்திலிருந்து
துரத்தப்பட்ட
வெண்புறாவாய்
நம் உறவையும்
நீ தூக்கி
எறிந்து விட்டாய்!

நம் தலைவர்களின்
வாக்குறுதிகளாய்
உன் வார்த்தைகள்
காற்றிலே
காணாமல் போயின!

தேச ஒப்பந்தமாய்
நீ செய்த
சத்தியங்கள்
செயலற்று விட்டன!

பொன் விழா
கண்ட நாடுபோல,
பொற் தீயில்
எரிந்ததோ
நம் காதல்...!

எம்.ஐ. முஹாஜிரீன்-
மாவடிச்சேனை.

# தேன் கிண்ணம்

# ஹைக்கூ

எட்ட நின்று பார்த்தால்
பட்ட மரமும் அழகுதான்
இரு கிளிகள் இருப்பதால்!

★

முத்திரையில் முகம் பதித்ததால்
நித்திரையிலும் நித்தம் நித்தம்
முத்தமல்லக் குத்து.

★

கிழித்துப் போட்ட கடிதம்
கவலையால் உடைந்து போன மனக்கண்ணாடி
கலையாகும் கவலையும் உண்டு.

புகை நடுவில் சாம்பல், அதன் நடுவில்
இரத்தம் குடிக்கும் ஒற்றைக் கண்
கொள்ளிவாற் பிசாசு சிகரெட்!

★

தடவித் தடவித் தேடிய போது
அவசரத் தேவைக்கு அகப்பட்டது
செல்லாக் காசு!

★

உன்னைத் தொட்ட நுளம்பு
என்னைத் தொட வந்தபோது நெருப்பு
விலகியும் விடவில்லைக் காய்ச்சல்!

★

விரும்பினால் வேகமாய் ஓடும்
இல்லையேல் நேரமில்லையென்று ஒதுங்கும்
வித்தியாசமான இருகடிகார மனம்!

★

இருமல் காதல் போல் போரும்
மறைக்க மறக்க முடியாத அழிவுகள்!

க. நாகராசா- நுணாவில்.

# பேனா நண்பர்கள்



பெயர்: என்.கணேஷ்,
வயது: 21
முகவரி: 14/12ஏ, கீரபனே, கம்பளை.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.



பெயர்: எஸ்.எம்.அசூர்.
வயது: 17
முகவரி: 315/1, தம்புல்ல வீதி, முத்தெட்டுகலை, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: கதிரேசம்பிள்ளை சயந்தினி,
வயது: 16
முகவரி: வட்டு வடக்கு சித்தன்கேணி.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: மு.ராதிகா.
வயது: 17
முகவரி: பதுளை வீதி, கித்துள்வெவ.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

# இந்த வாரம் உங்கள் பலன்

(01.03.1998 தொடக்கம் 07.03.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

கும்பம் - சூரியன், வியாழன், கேது.
மீனம் - சனி, செவ்வாய், புதன்.
சிம்மம் - இராகு.
மகரம் - வெள்ளி.

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

## மீனம்: சுப நேரம்

(புரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியக் கேடு. | பி.ப. 2 மணி |
| புதன்- முயற்சி பலிதம், தொழில் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| வெள்ளி- கடன்சுமை, கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் நஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் 12 மணி |
| திங்கள்- கடன் சுமை, காரியக் கேடு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் செலவு, உறவினர் பகை. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், வீண் விரயம். | மு.ப. 10 மணி |
| சனி- பயனற்ற செயல், காரியத் தடை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| சனி- முயற்சி பலிதம், மனத்துயர் நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், கடன் படல். | பகல் 11 மணி |
| சனி- வீண் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-8

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் சுகம், காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண விரயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| புதன்- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் சகாயம், பண வரவு. | பகல் 11 மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன் - தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- வீண் கலக்கம், அந்நியர் நட்பு. | பகல் 11 மணி |
| திங்கள்- செய்தொழில் கஷ்டம், பண விரயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் பகை, காரியத் தடை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணவரவு தடை. | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் சுகம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- மனக் குறையுண்டு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியக் கேடு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பண வரவு. | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பண வரவு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பண விரயம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| புதன்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் கஷ்டம், கடன் படல். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பண வரவு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- கௌரவம், பெரியோர் சுகம். | பகல் 12 மணி |
| சனி- பலவித பேறு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com

## லேடீஸ் ஸ்பெஷல்
# சின்னச் சின்ன யோசனைகள்

* தையல் ஊசிகளைப் போட்டு வைக்கும் பெட்டியில் சிறிதளவு டல்கம் பவுடரைப் போட்டு அதன் மீது ஊசிகளைப் போட்டால் துருப்பிடிக்காது.
* ஒரு சிறுகட்டு காய்ந்த புல்லை பெயிண்ட் அடித்த அறையில் போட்டால் பெயிண்ட் வாசனை வீசாது.
* அரிசியை அதிக நாட்கள் வைத்திருக்க வேண்டுமானால், அதில் பூண்டு இதழ்களைப் போட்டுப் பாதுகாத்திடலாம்.



* மரத்தில் ஆணி அடிக்கும் போது ஆணியில் சிறிதளவு பரபின் மெழுகு தோய்த்தால் போதும் ஆணி வேகமாக இறங்கிவிடும்.
* துணிகளை வைத்திருக்கும் அலமாரிகளில் நப்தலின் உருண்டைகளைப் போடுவார்கள். அதன் வாசனை பிடிக்காதவர்கள் சோப்பை துணிகள் மத்தியில் வைத்தால் போதும் பூச்சி வராது.
* ஹேயார் டை உபயோகிப்பவர்கள் கையில் கறைபட்டால் அந்த இடத்தில் ஒரு வெங்காயத்தைத் தேய்த்துக் கழுவினால் போதும் கறை போய்விடும்.
* மெழுகு திரியின் முனைப்பகுதியில் சிறிது உப்பைத் தடவினால் திரி வேகமாக எரிந்து போகாது.
* பார்சல் கட்டும் கயிற்றைச் சுடுநீரில் நனைத்து விட்டுக் கட்டினால் கயிறு காய்ந்ததும் நன்றாக இறுக்கமாகிவிடும்.
* கடிதத்தின் மேல் பகுதியில் விலாசத்தை எழுதி விட்டு அதன்மீது மெழுகுதிரியால் தடவி விடுங்கள். அவ்வாறு செய்தால் தண்ணீர் விழுந்தாலும் எழுத்து அழிந்து போகாது.
* அறைக்குள் புகை அடைந்தால், நனைந்த துண்டால் வேகமாக வீசுங்கள். புகை வேகமாக விலகி விடும்.
* புதிதாகப் பெயிண்ட் அடித்த மேசையின் அறையைத் திறக்க கஷ்டமாக இருந்தால் அதன் சுற்றுப் பகுதியில் சிறிதளவு டல்கம் பவுடரைப் போடுங்கள் எளிதாகத் திறந்து விடலாம்.

# இயற்கை வைத்தியம்

இயற்கையிலேயே கிடைக்கும் பொருட்களில் ஏராளமான மருத்துவ குணங்கள் உண்டு. அப்பொருட்களால் எவ்வித பின் விளைவுகளும் ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### துளசி:

இது உறக்கமின்மையைப் போக்குகின்றது. அஜீரணக் கோளாறுகளால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துகின்றது. மாதவிலக்குப் பிரச்சனைக்குத் துளசியில் இருந்து எடுக்கும் தைலம் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. இருமலையும் இந்தத் தைலம் போக்குகிறது. மனநெருக்கடியைக் குறைக்கவும் துளசியைப் பயன்படுத்தலாம்.

### ஏலக்காய்:

இது அஜீரணக் கோளாறால் ஏற்படும் நோய்களைப் போக்கப் பயன்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் வாந்தியைக் கட்டுப்படுத்தும். நெஞ்சில் ஏற்படும் எரிச்சலையும் போக்கும்.

### கற்பூரவள்ளி:

நாடித் துடிப்பைச் சீர்செய்கிறது. இரத்த அழுத்தத்தைச் சீர் செய்யவும் உடற்சோர்வை நீக்கவும் இதிலிருந்து தயாரிக்கும் தைலத்தைப் பயன்படுத்துகிறார்கள். தலைச்சுற்றல், அதிகமாக வியர்த்தல், மாதவிலக்குக் கோளாறுகள் போன்றவைகளுக்கும் இது சிறந்த மருந்து. மனநெருக்கடியைப் போக்கவும், உற்சாகத்தைத் தரவும் இதனால் முடிகிறது.

### மிளகு:

அஜீரணத்தால் ஏற்படும் நோய்களைக் குறைக்கிறது. சோர்வை நீக்குகிறது. உடல் வலியைப் போக்குகிறது.

### ரோஜாப்பூ:

உடல் தளர்ச்சிக்கு இதிலிருந்து எடுக்கப்படும் சாறு சிறந்தது. மன நெருக்கடியைத் தீர்க்கவும், உடலுக்கு உற்சாகத்தைத் தரவும் இதுவல்லது. மாதவிலக்கு வலிக்கு நிவாரணமாகவும் ரோஸ் தைலம் விளங்குகிறது.

# இல்லறம் இனிக்க

மணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையை எல்லாரும் தொடங்கி விடுகிறோம். ஆனால் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு குடும்பத்தை இருவருமாகச் சேர்ந்து உருவாக்க வேண்டி இருக்கிறது. அந்த வழியில் சிறு விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கும் கூடப் பெரிய அளவில் பலன் கிடைப்பதுண்டு. அவற்றில் சில இவை:

* சரியான வாழ்க்கைத் துணை அமைந்தால் போதாது. சரியான துணையாக அமையும் பொறுமை வேண்டும்.
* உங்களுக்குக் கிடைக்காதவைகளுக்காகக் குறைபடாதீர்கள்.
* கிடைத்தவற்றை விட்டுக்கொடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
* எதிலும் நல்லதையும் இனியனவற்றையும் காண முயலுங்கள்.
* நேர்ந்தது எதையும் மறக்கவும், மன்னிக்கவும் போட்டி போடுங்கள்.
* எல்லாம் சரிவர முடிந்து விடாது. ஆனால் அவற்றிலும் ஒரு புன்னகைக்கு இடம் தர உங்களால் முடியும்.



* ஒருவருக்காக மற்றவர் எதையும் செய்கிறோம் என்ற நினைவு வேண்டும். ஆனால், அதில் நன்றி உணர்ச்சி தெரியவேண்டியதில்லை.
* எந்தச் சிறு காரியத்தையும் பாராட்ட மறக்காதீர்கள். உங்கள் அன்பிற்கு அது ஓர் அடையாளம்.
* உங்களிடையே இருக்கும் அன்பிற்கு வயது இல்லை. பருவம்தான் உண்டு. தோற்றம் தான் மாறும். உணர்ச்சி மாறுவதில்லை.
* எந்தக் கோபம் இருந்தாலும் தூங்கு முன் மறந்து விடுங்கள். அடுத்தநாள் ஒரு புதிய நாள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DG

பெயர்:............................
முகவரி:...........................
...................................
தொழில்:...........................
கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-03-1998
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 24

மனோவைத்திய நிபுணரான ஸ்ரீபன் ருவிக் என்பவரைச் சந்தித்த பின்னர் டயானாவின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

மனோதைரியத்தைக் கொடுக்கும் கருத்துக்கள் பலவற்றை அவர் டயானாவுக்கு புகட்டினார்.

"மற்றவர்கள் உன்னைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் உனக்கில்லை!" என்று அவர் கூறினார்.

அக்கருத்து டயானாவின் மனதில் ஆழப்பதிந்துவிட்டது.

அதன் பின்னர் தன் மனதில் தேங்கிக் கிடந்த சோகங்களையும், கோபங்களையும் துடைத்தெறிய ஆரம்பித்தார் டயானா.

சாள்ஸ்சுடன் வேண்டுமென்றே சிரித்துப் பேசத் தொடங்கினார். சாள்ஸ் வெளியே புறப்படும் நேரங்களில் கோட் போட்டுக் கொள்ள உதவினார்.

சாள்ஸ்சுக்கு டயானாவின் திடீர் மாற்றமும், கரிசனையும் புதிராக இருந்தது.

ஏதோ ஒரு திட்டத்தோடுதான் டயானா தன்னை அனுசரித்துச் செல்வதுபோன்று நடிக்கிறாள் என்று நினைத்தார்.

கட்டுப்பாடுகளை உடைத்து எறிந்துவிட்டு, தெருவில் திரியும் மனிதர்களுடன் சேர்ந்து வாழவே ஆசைப்படுகிறேன்.

இன்றைய சூழ்நிலை எனக்கு சௌகரியம் அளிக்கவில்லை.

துன்பப்படுபவர்கள், நோயாளிகள் ஆகியோருடன் என் வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளவே ஆசைப்படுகிறேன்.

எனக்கு நன்றாகத் தெரிகிறது. என்னையும் என் குழந்தைகளையும் விட்டு அந்தப் பெண்ணுடன் சாள்ஸ் போய்விடுவார். வேல்ஸ் பரம்பரைப் பெயரைக் காப்பாற்ற அரியணையில் வில்லியம்ஸ் ஏற்றப்படப்போகிறான்.

என் விருப்பப்படி தெருக்களின் நடைபாதைகளில் எதுவித தடைகளும் இல்லாமல் நடந்துதிரியவே ஆசைப்படுகிறேன்.

இப்போது உடனடியாக இல்லாவிட்டாலும், அதற்கான காலம் வந்தேதீரும். பாரிஸ் நகர வீதிகளில் சுதந்திரமாகத் திரியத்தான் போகிறேன்.

இலண்டனில் இருப்பது எனக்கு பாதுகாப்புத்தான். இருப்பினும் பிறநாடுகளில் சுற்றித்திரியவே மனம் ஆசைப்படுகிறது.



## "பாரிஸ் வீதிகளில் சுற்றிவர ஆசை"

அந்தத் திட்டம் என்னவாக இருக்கும் என்று மூளையைக் குடைந்தார். ஆனாலும் சாள்ஸின் மூளைக்கு எதுவும் பிடிபடவில்லை.

ஆனாலும் கமீலாவுடன் சாள்ஸ்சை இணைத்து ஆதாரபூர்வமாக வெளியான செய்திகளால் அரச குடும்ப மரியாதை குறைந்திருந்தது.

முடிக்குரிய மன்னராகப் போகும் சாள்ஸின் மதிப்பை சேதாரமில்லாமல் கட்டிக் காக்க விரும்பினார் மகாராணி.

"டயானாவுடன் அனுசரித்து நடந்துகொள். அரச குடும்ப மானம் சந்தி சிரிக்குமளவுக்கு போய்க் கொண்டிருக்கிறது. டயானாவுடன் அடிக்கடி வெளியே சென்றுவா. உனக்கும் அவளுக்கும் இடையே பிரச்சனை இல்லை என்று நம்பக்கூடிய விதமாக நடந்துகொள்!" என்று ஆலோசனை கூறினார் மகாராணி.



மகனும் மருமகளும் உண்மையாகவே மனமொத்த தம்பதிகளாக இருக்கிறார்களோ இல்லையோ, வெளியுலகுக்கு அப்படிக் காட்டிக்கொண்டால் போதும் என்பதே மகாராணியின் விருப்பம்.

### போலிப் புன்னகை.

டயானாவுடனும் பிள்ளைகளுடனும் சாள்ஸ் வெளியே சென்றுவரத் தொடங்கினார். குடும்ப சகிதமாக புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.

சாள்ஸ்–டயானா மத்தியில் பிரச்சனை எதுவுமில்லை என்று நம்ப வைப்பதற்காக அப்புகைப்படங்களில் சில அரச குடும்பத்தினரால் பத்திரிகைகளுக்கு விநியோகிக்கப் பட்டன.

புகைப்படங்களில் டயானா சாள்ஸ்சுடன் சிரித்தபடி காணப்பட்டார். அப் புகைப்படங்களை பார்த்த மக்களுக்கு தங்கள் இளவரசி சந்தோசமாக இருக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

எல்லாமே உதட்டளவிலான நடிப்பு என்பதை யார் கண்டார்கள்? உள்ளே அழுது கொண்டு வெளிக்குப் புன்னகைத்துக் கொண்டு டயானா நாடகமாடுகிறார் என்பது யாருக்கும் தெரியவில்லை.

### புதிய பாதை

இக்காலகட்டத்தில் டயானா சில முடிவுகளுக்கு வந்திருந்தார்.

அரச குடும்ப போலி மரியாதைகள், சம்பிரதாயங்கள், உலகுக்காக ஆடும் நாடகம் என்பவை சலிப்பூட்டுவதாக இருந்தன.

எல்லாக் கட்டுகளிலும் இருந்து விடுபட்டு சுதந்திரப் பறவையாக இலண்டன் வீதிகளில் கைவீசிக்கொண்டும், சாதாரண மனிதர்களுடன் கைகுலுக்கிக் கொண்டும் திரியும் ஆசை கிளர்ந்தது.

டயானா தன் எண்ணங்களை பின்வருமாறு கூறியிருந்தார்:

"நான் எனக்கென ஒரு புதுப்பாதையை அமைக்க விரும்புகிறேன். இன்றுள்ள

இத்தாலி, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் சுற்றித்திரிவதுபோல் நான் பகல் கனவு காண்கிறேன்.

கடந்த ஆகஸ்ட் மாதம் எனது சிநேகிதி ஒருத்தி என்னிடம் தமாஷாக, "நீ பிறநாட்டவர் ஒருவரை மணம் புரிவாய்!" என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்க சுவாரசியமாகத்தான் இருந்தது."

இவ்வாறு கூறியிருந்தார் டயானா.

டயானா எந்த வீதிகளில் சுற்றித்திரிய அன்று ஆசைப்பட்டாரோ, அதே பாரிஸ் நகரவீதிகளில் ஒன்றில்தான் விபத்தில் சிக்கிப் பலியானார் என்பதுதான் சோகம்.

### வெளியே டயானா

டயானாவுக்கு சிறுவயதில் இருந்தே நாவல்கள் படிக்கும் ஆர்வம் இருந்தது. காதல் கதைகள், சஸ்பென்ஸ் கதைகள், கொஞ்சம் காமம் கலந்த கதைகள் என்பவற்றை விரும்பிப் படிப்பதுண்டு.

ஒரு தடவை 'சாவை நோக்கி' என்றொரு நாவலை டயானா படித்துக்கொண்டிருப்பதைக் கண்ட சாள்ஸ்: "இதுபோன்ற நாவல்களைப் படித்துத்தான் நீ ஒன்றுக்கும் உதவாதவளாகப் போய்க் கொண்டிருக்கிறாய்!" என்று கண்டித்தார்.

டயானா அவர் கூறியதைக் காதில் போட்டுக்கொள்ளாதவள்போல் தொடர்ந்து நாவலை வாசித்துக் கொண்டிருந்தாள்.

சாள்ஸின் உதாசீனங்களைப் பற்றியோ, அரச குடும்ப முகச்சுளிப்புக்களைப் பற்றியோ டயானா அதிகம் கவலைப்படுவதில்லை.

எதையும் துணிவுடன் எதிர்கொள்ளப் பழகிக்கொண்டாள். டயானாவின் சிநேகிதிகளும் மன உறுதியுடன் செயற்பட உதவினர்.

படிப்படியாக அரச குடும்ப எல்லைகளைத் தாண்டி மக்களை நெருங்கத் தொடங்கினார் டயானா.

1991 மற்றும் 1992ம் ஆண்டுகளின் பனிக் காலங்களில் வீடு வாசல் இல்லாமல் தெருக்களில் நடுநடுங்கிக் கொண்டு வாழ்ந்த பலரைக் கண்டார்.

'இப்படியும் ஒரு வாழ்க்கையா? மாடமாளிகையில் குளிரே தெரியாமல் உறங்கும் நாங்கள் எங்கே, குடியிருக்கவும் வீடில்லாமல் தெருவில் பனிக் குளிரில் வசிக்கும் இவர்கள் எங்கே?

இங்கிலாந்திற்கு துயர் சூழ்ந்த இன்னொரு முகமும் இருக்கிறது' என்பதை டயானா அறிந்தபோது, வாழ்வதற்கு வசதி இல்லாத அந்த மக்கள்மீது அவரது இதயத்திலிருந்து அனுதாபம் பெருக்கெடுத்தது.

இங்கிலாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் கார்டினல் பேசல் ஹியூம், அநாதை விடுதி ஒன்றை நடத்தி வந்தார்.

### இரண்டு மணி நேரம்

தேம்ஸ் நதிக்கரையின் தெற்கேயும் ஒரு விடுதி இருந்தது. அந்த விடுதிக்கு கார்டினலுடன் டயானா சென்றிருந்தார்.

அது இளவயதினருக்கான விடுதி. அங்கு சிறுவர்களும் இருந்தனர். போதை மருந்துக்கு அடிமையாகி அதனால் பாதிப்புக்கு உள்ளான இளைஞர்களும் அங்கு இருந்தனர்.

சிறுவர்களுடன் இரண்டு மணிநேரம் இருந்து அன்பாக உரையாடினார்.

பொதுச் சேவையில் மனதைப் பறிகொடுத்தால் கவலைகள் பறந்துவிடும் என்பதை அந்த இரண்டு மணி நேரங்களில் டயானா உணர்ந்துகொண்டார்.

போதை மருந்துக்கு அடிமையாகி மனம் பேதலித்திருந்த இளைஞர்களையும் டயானா பரிவுடன் பார்வையிட்டார்.

அப்போது ஒரு இளைஞன் டயானாவைப் பார்த்து, "ஆஹா, நீ பிரமாதமான அழகியாக இருக்கிறாயே!" என்றான்.

டயானாவுடன் வந்தவர்களும், விடுதிப் பொறுப்பாளர்களும் கதிகலங்கிப் போனார்கள்.

அந்த இளைஞனை தனியாக அழைத்துப்போய்: "நீ யாருடன் பேசுகிறாய் தெரியுமா? இங்கிலாந்தின் இளவரசியுடன்!" என்றனர்.

"யாராக இருந்தால் எனக்கென்ன? அவர் பிரமாதமான அழகுதான்!" என்றான்.

அவர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. டயானா அவன் கூறியதைக் கேட்டு கோபப்படப்போகிறார் என்று பயந்தனர்.

ஆனால் நடந்ததோ அதற்கு நேர்மாறான சம்பவம்.

அந்த இளைஞனுக்கு அருகில் சென்றார் டயானா. அவன் சிறு குழந்தைபோல விழிகளை நன்கு அகல விரித்து டயானாவின் எழிலைப் பருகினான்.



கமீலா பாக்கர்

டயானா புன்னகைத்தார். "நான் அத்தனை அழகியாக இருக்கிறேனா என்பது எனக்கே தெரியாது. இருந்தாலும் நீ அப்படிக் கூறியதற்காக நன்றி!" என்று வாய்விட்டுச் சிரித்தார்.

விடுதிப் பொறுப்பாளர்களுக்கு அப்போதுதான் நிம்மதியே வந்தது.

### விழுந்தார் சாள்ஸ்

1990 ஜூன் மாதம் சிரியென்ஸ்டர் என்ற இடத்தில் நடைபெற்ற போலோ விளையாட்டில் சாள்ஸ் குதிரையில் இருந்து விழுந்தார்.

அவருடைய வலது புஜ எலும்பு முறிந்தது. தேசிய சுகாதார சேவை மருத்துவமனையில் சாள்ஸ் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சாள்ஸை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு செல்லுவார் டயானா. சாள்ஸ் எதுவும் பேசமாட்டார்.

எத்தனை நேரம்தான் சாள்ஸின் முகத்தைப் பார்த்துக்கொண்டு இருப்பது?

அந்த வைத்தியசாலையில் உள்ள ஏனைய நோயாளர்களைப் பார்வையிடக் கிளம்பி விடுவார் டயானா.

அதன் காரணமாக புதிய உறவு ஒன்று மலர்ந்து, சர்ச்சையைக் கிளப்பியது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ஏ. உதயவதனி,**
70, ஹஸ்கிஸன் வீதி, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசகவாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





திக்குக்கள் எட்டும் சிதறி-தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
தீம்தரிகிட
பக்கமலைகள் உடைந்து-வெள்ளம்
பாயுது பாயுது பாயுது-தாம்தரிகிட
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் ஒரு பாட்டி சாப்பாட்டுக் கடை நடத்தி வந்தார்.

பாட்டியின் சாப்பாட்டுக் கடைக்கு நான்கு திருடர்கள் தினமும் வந்து சாப்பிட்டு விட்டுப் போவார்கள். ஆனால் பாட்டிக்கு இவர்கள் நால்வரும் திருடர்கள் என்று தெரியாது.

ஒரு நாள் நான்கு திருடர்களும் தாம் கொள்ளையடித்த பொற்காசுகளை ஒரு பானை நிறையப் போட்டு வைத்தனர். அதை யாரிடமாவது கொடுத்துப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள்.

முதலாவது திருடன் இந்தப் பொற்காசுகளை சாப்பாட்டுக் கடை வைத்திருக்கும் பாட்டியிடம் கொடுத்தால் பத்திரமாக வைத்துத்தருவார் என யோசனை கூறினான். மற்றவர்களுக்கும் இந்த யோசனை சரியாகப்பட்டது.

உடனே அந்தப் பானையைப் பாட்டியிடம் எடுத்துச் சென்ற நால்வரும்,

"பாட்டி! நாங்கள் நால்வரும் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த பொருட்களை இதற்குள் வைத்திருக்கிறோம். அதை நீங்கள்தான் பத்திரமாக வைத்திருந்து எங்களுக்குத் தரவேண்டும்.

அத்துடன் நாங்கள் நால்வரும் சேர்ந்து வந்து கேட்டால்தான் இந்தப் பானையைத் தரவேண்டும்; ஒருவர் குறைவாக வந்து கேட்டாலும் இதை எங்களுக்குத் தரக்கூடாது." என்று கூறினர்.

பாட்டியும் சரியெனக் கூறி அதனைப் பெற்றுக் கொண்டார்.

ஒருநாள் பாட்டியின் வீட்டிற்கு அருகில் இருந்த மரத்தின் கீழ் நான்கு திருடர்களும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். அது கோடைகாலமாக இருந்தபடியால், வெய்யிலில் களைத்துப்போன அவர்கள் மோர் குடிக்க விரும்பினர்.

உடனே ஒரு திருடன், மற்றத் திருடனிடம்,

"நீ பாட்டியிடம் ஒரு பானை வாங்கி குடிப்பதற்கு மோர் வாங்கி வா," என்று அவனை அனுப்பினான்.

பாட்டியிடம் சென்ற திருடன், பொற்காசுகள் உள்ள பானையை அபகரிக்கும் திட்டத்துடன், "அன்று நாங்கள் கொடுத்த பானையைத் தாருங்கள்," என்று கேட்டான்.

"நீ மட்டும் தனியாக வந்து பானையைக் கேட்டால் கொடுக்க முடியாது. எங்கே மற்ற மூவரும்?" என்று கேட்டார் பாட்டி.

"அவர்கள்தான் வாங்கி வரச் சொன்னார்கள். வேண்டுமானால் நீங்கள் இங்கிருந்தே கேட்டுப்பாருங்கள்," என்று சொன்னான் திருடன்.

பாட்டியும் மரத்தடியில் இருந்த திருடர்களைப் பார்த்து, "பானையை இவனிடம் கொடுக்கவா?" என்று கேட்டார்.

அவர்களும் மோர் வாங்குவதற்கான பானையைத்தான் பாட்டி கேட்கிறார் என நினைத்து கொடுத்துவிடும்படி கூறினர். பாட்டியும் பொற்காசுகள் உள்ள பானையைத் திருடனிடம் கொடுத்துவிட்டார்.

மோர் வாங்கச் சென்றவன் வெகுநேரமாகியும் திரும்பிவராததைக் கண்ட திருடர்கள், பாட்டியிடம் சென்று விசாரித்தார்கள். முதல் திருடன் பொற்காசுகள் உள்ள பானையைக் கொண்டு போய்விட்டதாகச் சொன்னார்.

"எங்களுக்கு மோசம் செய்து விட்டாய். உன்னைச் சும்மா விடமாட்டோம்!" என்று கூறித் திருடர்கள், பாட்டியை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நீதிபதியிடம் திருடர்கள் தங்கள் வழக்கைக் கூறினார்கள். பாட்டியும் நீதிபதியிடம் நடந்தவற்றைக் கூறினார்.

## சரியான தீர்ப்பு



இவற்றைக் கேட்ட நீதிபதி,

"நான்கு பேரும் ஒன்றாக வந்து கேட்டால்தான் பானையைக் கொடுக்க வேண்டும். இப்போது நீங்கள் மூன்று பேர்தான் இருக்கிறீர்கள். நீங்கள் நால்வரும் சேர்ந்து வந்தால்தான் பாட்டி பானையைக் கொடுப்பார்," என்றார்.


இதைக்கேட்ட பாட்டி நீதிபதிக்கு நன்றி கூறிச் சென்றார். திருடர்கள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி பேசாமல் சென்று விட்டனர்.

## அதிசயம்-ஆனால் உண்மை!



**கல்லறை:**

திபெத் நாட்டில் உள்ள லாசலாவில் இருக்கும் 13வது தலாய்லாமாவின் கல்லறையின் மேற்கூரை 3 இலட்சம் அவுன்ஸ் தங்கத்தால் மூடப்பட்டுள்ளது.



**வாத்துமலர்:**

மெல்லிய தண்டின் மீது இலாவகமாகச் சாய்ந்தாடும் இப்பூக்கள் பார்வைக்கு உயிருள்ள வாத்துக்கள் போல இருக்கும்.


**சிங்கத்தை முத்தமிடும் கரடி:**

ஃபிரான்ஸ் நாட்டின் அருகேயுள்ள காசலஜோ என்ற இடத்தில் இருக்கும் பாறை சிங்கத்தை கரடி முத்தமிடுவது போன்று இயற்கையாக அமைந்துள்ளது.



**அதிக ஆயுள்:**

இலண்டன் மிருகக் காட்சி சாலை ஒன்றில் இருந்த இராட்சத ஆமை ஒன்று 200 ஆண்டுகாலம் உயிர் வாழ்ந்தது.



## வாரம் ஒரு நாடு

### அன்டிகுவா மற்றும் பாபுடா



தலைநகர்- சென்ட் ஜோன்ஸ்
பரப்பு- 442 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை- 80 ஆயிரம்
மொழி- ஆங்கிலம் மற்றும் படோய்ஸ்
எழுத்தறிவு- 90%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- கிழக்கு கரீபியன் டொலர்
தனிநபர் வருமானம்- 4,870 டொலர்.

**அமைவிடம்:**

கிழக்கு கரீபியன் கடலில் மூன்று அன்டிரிஸ் தீவுக்கூட்டங்களை உள்ளடக்கியது. மேற்கில் சென்ட் கிட்ஸ், நெவிஸ் தீவுகளும், தெற்கில் மான்செராட்டும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**

1493ல் கொலம்பஸ் அன்டிகுவாவைக் கண்டுபிடித்தார். 1632ல் பிரிட்டிஷ் காலனியானது. அடுத்து இருக்கும் பாபுடா 1661ல் பிரிட்டிஷ் காலனியானது. 1981ல் சுதந்திரமடைந்தது. மூன்றாவது தீவில் மனிதர்கள் எவரும் வசிக்கவில்லை. பிரிட்டிஷிடமிருந்து சுதந்திரமடைந்தாலும், இன்றும்கூட இங்கு பிரிட்டிஷ் ஆட்சி உரிமை அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

**பொருளாதாரம்:**

சீனி, பருத்தி என்பன முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள். சுற்றுலாத்துறை முக்கிய வருமான மூலம் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.03.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 234
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 232


**பரிசுக்குரியவர்:**
பாத்திமா நிஷ்மா நஜீம்,
ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| மோகன் பிரியதர்ஷினி, ப.த.ம.ம.வித்தியாலயம், பண்டாரவளை. | ந.தர்ஷனி, பு/எருக்கலம்பிட்டி, மு.த.வித்தியாலயம், நாகவில், பாலாவி. |
| பாத்திமா ஷஸ்னா, தெஹிகஸ்தலாவ, பலாங்கொடை. | கே.ஸப்ராஸ் மொஹமட், மஹவெல முல்ல, முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. |
| நிரோஷன் அமிர்தலிங்கம், உவெஸ்லி கொலேஜ், கொழும்பு-09. | பா.ரகுநாதன், சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார். |
| ஆர். பிரசன்னா, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | ஜெயரத்தினம் ரஜினி, மட்/களுதாவளை.ம.வி, களுதாவளை-01, களுவாஞ்சிகுடி. |
| ம. கோமதி, விஷ்ணு ம.வித்தியாலயம், பெரியநீலாவணை; கல்முனை. | எஸ்.எம்.நியாஸ், முஸ்லிம் மத்திய கல்லூரி, அக்கரைப்பற்று-06. |

## முதல் 'சிக்னல்'

முதன் முதலாக வீதிப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்த 1868ம் ஆண்டு சிக்னல் முறை ஆரம்பமாகியது. அப்போது சிவப்பு, பச்சை என்ற இரண்டு நிறங்கள்தான் இருந்தன. இதற்கு வாயு விளக்குகளே பயன்படுத்தப்பட்டன.



முதலில் சிக்னல் நிறுவப்பட்ட இடம் இங்கிலாந்தின் தலைநகர் இலண்டனில் உள்ள பாராளுமன்றக் கட்டடத்தின் அருகே உள்ள சந்தியில் ஆகும். ஆனால், அது நிறுவப்பட்ட சில நாட்களிலேயே அந்த விளக்கு வெடித்ததனால் ஒரு பொலிசார் கொல்லப்பட்டார். எனவே சிக்னல் முறை அப்போது நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக 1914ம் ஆண்டு அமெரிக்காவில், தற்போது புழக்கத்தில் உள்ள மூவர்ண (சிவப்பு, அம்பர், பச்சை) விளக்குகள் கொண்ட சிக்னல் அமைக்கப்பட்டது.

## கிளிமஞ்சரோ



உலகின் மிக அற்புதமான மலை என்ற பெயரை ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள கிளிமஞ்சரோ என்ற மலை பெற்றுள்ளது. வருடம் முழுவதும் கடும் வெப்பநிலையில் உள்ள கிளிமஞ்சரோ, பூமத்திய ரேகைப் பிரதேசத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இம்மலையின் உச்சியில் எப்பொழுதும் 60 மீட்டர் உயர பனி மூடி இருக்கும்.

இதன் ஒரு சிகரமான 'கிபோ'வில் பனி படர்ந்திருக்கும். மற்றொரு சிகரமான 'மாவென்சி'யில் பனி இருக்காது. அதன் சரிவில் விவசாயிகள் கோப்பி பயிரிட்டுள்ளனர்.

இம்மலையின் அடிவாரம் முதல் உச்சி வரை அழகிய காட்சிகள் நிறைந்திருக்கும்.

## ஏன் தெரியுமா?

தீப்பிடித்து எரியும் பொருட்களின் மீது தண்ணீரை ஊற்றினால் தீ சட்டென அணைந்து விடுகிறது அல்லவா? ஏன் இப்படி என்று யோசித்திருக்கிறீர்களா? விஷயம் இதுதான்:



தீ எரிவதற்கு என்ன தேவை? ஒட்சிசனும் வெப்பமும் தேவை. இவை இரண்டும் இருந்தால்தான் நெருப்பு எரிய முடியும். எரியும் நெருப்பின் மீது தண்ணீரை ஊற்றும் போது தண்ணீரின் குளிர்ச்சி வெப்பத்தைத் தணித்து விடும்.

மேலும் நெருப்புக்கும், ஒட்சிசனுக்கும் உள்ள தொடர்பையும் தண்ணீர் தடுத்து விடும். எனவே நெருப்பு அணைந்து விடுகிறது.

ஆனால், எண்ணெயில் பிடித்த நெருப்பை அணைக்க தண்ணீர் உதவாது. ஏன் தெரியுமா? எண்ணெய் தண்ணீரில் மிதக்க ஆரம்பித்து விடும். இதனால் நெருப்பு தொடர்ந்து காற்றுடன் தொடர்பு பெற்று எரிந்து கொண்டிருக்கும்.

எண்ணெயில் பற்றி எரியும் நெருப்பை எப்படி அணைப்பது? அதற்கு நுரை பயன்படுத்தப்படுகின்றது. நெருப்பின் மீது பாய்ச்சி அடிக்கப்படும் நுரை, காற்றுக்கும், நெருப்புக்கும் இடையே உள்ள தொடர்பைத் துண்டித்து நெருப்பு அணைய உதவுகின்றது.

## முதல் மொழி எது?

உலகின் முதல் மொழி எங்கு, எப்போது, எப்படித் தோன்றியது என்பதற்கான ஆதாரங்கள் எழுத்து வடிவில் இல்லை. ஆரம்பகால மனிதன் சைகைகளைக் காட்டி குரல் எழுப்ப முயன்றபோது, மொழி தோன்றியிருக்கலாம் என்பது விஞ்ஞானிகளின் கூற்று.


அப்படித் தோன்றிய போதிலும் மொழி பேச்சு வடிவிலேயே இருந்திருக்கலாம். வேட்டை மனிதன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறான். அவனுக்குத் தேவையான உணவு அப்போது கிடைத்தது. அதனால் அன்றைய சூழ்நிலையில் எழுத்துக்கள் தேவையில்லாத ஒன்றாகவே இருந்தது. எனவே மிக மிக பிற்பட்ட காலத்திலேயே எழுத்துக்கள் தோன்றியிருக்கலாம்.

முதன் முதலாக எழுத்துக்களின் உபயோ



கத்தை அறிந்தவர்கள் சுமேரியர்கள். இவர்களது காலம் கி.மு.3500 ஆண்டு. எகிப்தியர்கள் கி.மு.3000 ஆண்டில் உருவங்களை எழுத்துக்களாக மாற்றி உபயோகித்தனர்.

## சீனாவின் துயரம்



'சீனாவின் துயரம்' என்று அழைக்கப்படுவது சீனாவில் உள்ள ஹுவாங் ஹோ நதியைத்தான். இதற்கு இன்னொரு பெயரும் உண்டு. மஞ்சள் நதி என்பதுதான் அந்தப் பெயர். இந்த நதியில் வெள்ளம் பெருகும்போது மஞ்சள் நிற மண்ணை பெருமளவில் அடித்து வரும். இதனால் இந்நதி மஞ்சள் நிறமாகத் தோன்றும். எனவே இதற்கு மஞ்சள் நதி என்று பெயர் வழங்கப்பட்டது.

சீனாவில் உள்ள பெரிய நதிகளில் ஒன்றான இதன் நீளம் சுமார் 4300 கிலோ மீட்டர். இந்த நதியில் அவ்வப்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் ஏராளமானோர் உயிரிழந்திருக்கிறார்கள். இதனால் இந்த நதியை 'சீனாவின் துயரம்' என்று கூறுவர். 1887ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சுமார் 10 இலட்சம் மக்கள் வரை இறந்தார்கள்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இனி என் முறை

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி 'சஸ்பென்ஸ்' கலந்து எழுதிய விறு விறு நாவல்.

## புதிய தொடர் 12

"அது சரி." பெரியவர் சாய்ந்து கொண்டார்.

வண்டியை அவர் வீடு நோக்கி செல்வா ஓட்டினான்.

"அப்ப நான் வரேன் தம்பி." பெரியவர் இறங்கி கை கூப்பினார்.

"ஐயா" செல்வா கீழிறங்கினான். எதிரே கரம் குவித்தான். "எப்படி நன்றி சொல்றதுன்னே..."

"பதிலுக்கு நான் எதுவும் எதிர்பார்க்கலை. எனக்கு சண்டை உன்னோடதான்.

"நான் உங்ககிட்ட அதிகமா பேசிட்டேங்க."

"நல்லது அமுதா. மனசு விட்டுப் பேசறது இரண்டு பேருக்கும் நல்லது. இல்லேன்னா உனக்குள்ள ஒரு குறை இருக்கறது எனக்குத் தெரிஞ்சிருக்காது.

"என்ன தெரிஞ்சுது இப்ப?"

"புருஷனுக்கு பொண்டாட்டி முக்கியம். பொண்டாட்டிக்குப் புருஷன் முக்கியம். உத்தியோகம், பிள்ளை, இதோட பொண்டாட்டி மேலேயும் அக்கறை காட்டணும். நீ

ஏதாவது தெரியுதா பார்?"- டி.ஐ.ஜி. போட்டோ நீட்டினார்.

திக்கென்றது.

ஒரு பெண்ணின் நிர்வாண போட்டோ கால் விரலிலிருந்து கொலுசு கோர்த்த கணுக்கால், முழங்கால் தொடை அடிவயிறு வரை நிர்வாணமாய் இருக்கும் போட்டோ. மேல் பகுதி கத்தரிக்கப்பட்டிருந்தது.

"தலைகாணி உறைக்குள்ள இருந்தது. வாட் ஈஸ் இட்?"

"இவங்க மாதிரி ஆளங்க செக்ஸ் பர்வர்ட்ஸ் ஸார்."

"இருக்கும். கிழிச்சுப் போட்டிருங்க.

உன்வீட்டு மனுஷாளோட இல்லை. அது தான் உனக்கும். என்னை அடி. நான் தாங்குவேன். என் வீட்டுக் குழந்தைகளைத் தொடாதே! இது சொல்றதுக்குத் தான் இத்தினியும். போய்ட்டு வா."

உள்ளே முகம் துடைத்தபடி நகர்ந்தான்.

வண்டி வீடு நோக்கித் திரும்பிற்று.

ஃபோன் பண்ணி டிரைவரைக் கூப்பிட்டான். பையன் குளித்துக் கிளம்பி புத்தகப்பை மாட்டி காரில் ஏறி பள்ளிக்குப் போனான்.

பேண்ட் பாக்கெட்டில் கை விட்டு நெகடிவ் எடுத்துப் பிரித்து மறுபடி பார்த்து அமுதாவிடம் நீட்டினான். போட்டோக்கள் பிரித்துப் பார்த்தான். அமுதா சகலமும் பார்த்தாள்.

"போய் அடுப்பு மூட்டு. அதுல வாணலி வை."

காஸ் அடுப்பில் வாணலி ஏறிற்று. சகலமும் அதில் போடப்பட்டது. சிறிதளவு எண்ணை ஊற்றப்பட்டது. நெகடிவ் சுருங்கி மடிய, உள்ளே விட்ட எண்ணையில் ஒரு நெருப்புக் குச்சி கிழித்துப் போட, சூடு எண்ணை பற்றிக் கொண்டது. ஃபோட்டோ திகுதிகுவென்று எரிந்தது. புருஷனும் மனைவியும் எரிவது பார்த்துக் கொண்டிருந்தார்கள். முற்றிலும் சுருங்கியதும் அமுதா தண்ணீர் ஊற்றினாள். வாணலியை எடுத்து ஸிங்கில் போட்டு குழாய் திறந்தாள். சாம்பல் நீராகி சாக்கடைக்கு ஓடியது.

அமுதா ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னால் வந்து அருகே நிற்கும் புருஷன் மீது சாய்ந்து கொண்டாள்.

"அமுதா!"- செல்வா குமுறினான்.

"ஐ லவ் யூ!" இறுக்கிக் கொண்டான்.

வானொலியில் செய்தி அறிவிப்பு ஒலிபரப்பாயிற்று.

"சென்னை சென்ட்ரல் ரயில்வே நிலையத்தில் இரண்டு பயங்கரவாதிகளை பொலிஸார் சுட்டுக் கொன்றார்கள். பொது மக்களுக்கிடையே பயங்கர ஆயுதங்களுடன் ஓடியவர்களைத் தடுத்து நிறுத்தி சுட வேண்டியிருந்தது என்று ஒரு அதிகாரி குறிப்பிட்டார். சுடப்பட்ட இருவரும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அம்மாநில பொலிஸாரால் தேடப்பட்டவர்கள் என்றும் தெரிய வருகிறது."

தைரியசாலி அமுதா."

"நீங்க கொடுத்த தைரியம்தான்."

"நீ அழகா இருக்கே அமுதா."

"நீங்க கொடுக்கற சந்தோஷம்."

"உன்னைப் பார்த்து யாராவது லவ்யூன்னு சொன்னா என்ன செய்வே?"

"எனக்கு வேணும்கற அளவு லவ் என் புருஷன் கிட்ட கிடைக்குது தம்பி. வேற எங்கனா பாருன்னு சொல்வேன். ஏன் கேட்கறீங்க?"

"ஒரு பொறாமைதான்."

"என்ன பொறாமை?"

"இத்தினி திடம், இத்தினி அழகு, யார் வேணா இது காலடியில விழுவான்னு ஒரு பொறாமை."

"நான் விழ வேணாமா? என்னை விழ வைக்கிற அளவுக்கு ஆம்பளை வேணாமா? இருப்த்தி நாலு மணி நேரத்துல கண் மூடாம பொண்டாட்டி தொட்டவனைத் தேடி நெஞ்சு மிதிக்கற ஆம்பளை எங்க கிடைக்கும் எனக்கு?"

"அமுதா."

"சொல்லுங்க."

"என்னை லவ் பண்றியா?"- செல்வா தழுதழுத்தான்.

"சை... என்ன கேள்வி இது?" பாய்ந்து இறுக்கிக் கொண்டாள். அவர்கள் பேசாமல் காதலித்தார்கள். சொல்லாமல் செய்தார்கள். திரைகானம் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. கேட்பதைவிட பாடுவதைவிட இறுக்கி இணைத்துக் கொள்ளும்போது சத்தம் அதிகமிருந்தது.

செல்வா விடுவித்துக்கொண்டான். அவளைத் தூங்க விட்டான். தூங்கியதும் மறுபடி பேண்ட் பாக்கெட்டில் கை விட்டு கவிதையை எடுத்தான். கிழித்தான். பெரியவர் நிர்வாண போட்டோ பார்த்ததை அமுதாவிடம் சொல்லவில்லை. சொன்னால் கூசுவாள் என்று சொல்லவில்லை. நானும் சொல்ல மாட்டேன். இந்தக் கவிதையைப் பற்றிப் பேச மாட்டேன்.

கவிதை கொம்மோடில் மிதந்தது. பிடி சுழற்றி நீரடிக்க, உள்ளே போயிற்று.

★ ☆ ★

"மிஸ்டர் செல்வராஜ்."

"எஸ் ஸார்."

"அந்தப் பசங்க இரண்டு பேர் ப்ராப்பர்ட்டீஸ் செக் பண்றப்ப இந்த போட்டோ கிடைச்சுது. என்ன இது உனக்கு

நம்ம டிபார்ட்மெண்ட்ல இது பார்க்கவே பெரிய கும்மல் வரும். கிழிச்சுடுங்க."

செல்வா மறுபடி அந்தப் போட்டோவைப் பார்த்தான்.

அது அவனுக்குப் பரிச்சயமான கால்கள். அவன் வாங்கிய கொலுசு. அவனுக்குப் பிடித்த முழங்கால். அவன் தொட்டுத் தடவிய தொடைகள். அவன் காதலிக்கும் பெண். அவன் மனைவி.

மெல்ல கிழித்தான்.

"எரிச்சுடுங்க, செல்வராஜ்."

டி.ஜி.ஜி. தீப்பெட்டி நீட்டினார். கிழிக்கப்பட்டவை எரிந்தது. சாம்பலாயிற்று.

"சார், எனக்கு ஒரு வாரம் லீவு வேணும்."

டி.ஐ.ஜி. அவனை விநோதமாய் பார்த்தார்.

"கார் ஆபீஸ் வாசல்ல விட்டுட்டேன் சார். சாவி இங்க..." நீட்டினான்.

"எப்படி போவீங்க வீட்டுக்கு?"

"ஆட்டோல போயிடறேன் சார்."

"செல்வா."

"தேங்க் யூ சார்" மறுபடி சல்யூட் அடித்தான். வெளியேறினான்.

வெளியே நடந்து நின்றிருந்த ஆட்டோவின் முதுகு தட்ட உள்ளே டேப் ரிக்கார்டர் பாட்டு பட்டென்று நின்றது. அபிராமபுரம் என்று சொல்ல, மெல்ல நகர்ந்தது. ஆட்டோவில் கூட டேப் உண்டா? கடவுளே...

"பாட்டு போடேம்பா."

"வண்டி ஓட்டறச்சே பாட்டு போட்டா பொலிஸ் புடிச்சுக்கும்."

"பரவால்லை போடு-சின்னதா வை."

ஆட்டோக்காரன் சுவிட்ச் தட்ட;

*"உனக்கே உயிரானேன். என்னாளும் எனை நீ மறவாதே*
*நீயில்லாமல் ஏது நிம்மதி? நீ தானே நீ என் சந்நிதி!"*

செல்வா கண்களை மூடிக் கொண்டான். அன்பு வேண்டுமெனில் கெஞ்சத்தான் வேண்டும். எனை நீ மறவாதே என்று யாசிக்க வேண்டும். அதிகாரத்தில் அன்பு வருமா? ஆளுமை வருமா? அதிரடிக்கு கட்டுப்படுமா? அயர்ச்சியோ அலுப்போ காட்டினால் தோன்றுமா? கெஞ்சு செல்வா கெஞ்சு. அன்பவேண்டுமெனில் மண்டியிடு.

"ஏம்ப்பா என்ன படம் இது?"

"பழைய படம் சார். மூன்றாம் பிறை. பாலு மகேந்திராபடம். நான் ஆறு தடவை



எழுத்துச்சித்தர் பாலகுமாரன்

பார்த்தேன் சார்."

'இந்தப் படம் வீடியோ கேஸட் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும். வீட்டில் கேஸட் போட்டு அமுதாவின் விரல் பின்னி படம் பார்க்க வேண்டும். இந்தப் பாட்டு வரும் போது இறுக்கிக் கொள்ள வேண்டும்.'

"என்னப்பா நீயும் அம்மாவும் என்னை வுட்டுட்டு படம் பார்க்கறீங்க?" பிள்ளை பள்ளியிலிருந்து திரும்பி கொஞ்சும். அவனுக்காக மறுபடி போட்டுப் பார்க்க வேண்டும்.

*"கண்ணே கலைமானே*
*கன்னி மயிலென*
*கண்டேன் உனை நானே"*

பாட்டு செல்வாவை வருடிக் கொண்டிருந்தது.

**முற்றும்.**


## முரசின் முத்தான தொடர்களின் வரிசையில்..



ராஜேஸ்குமாரின்

புதிய தொடர் அடுத்த முரசில் ஆரம்பம்!

வாரா வாரம் விறுவிறுப்பு

பிரதிக்கு முந்துங்கள்


# இன்பமான துன்பம்

## 'காலமெல்லாம் காதல் வாழ்க' பட இயக்குநர் பாலு காதலைப் பற்றிக் கூறுகிறார்

காதலே இன்பமான துன்பம்தான், எங்கோ படித்திருக்கின்றேன்; அது என்ன இன்பமான துன்பம், வேதனையும்... சுகமும், ஒரே நேரத்தில் அனுபவிக்கும் சுகம் காதல்.

உங்களுக்கு பிடித்த பெண்ணை உங்களுடைய பெற்றோர்களுக்கும், சுற்றத்திற்கும் பிடிக்காத போது... இருப்பது இரண்டே வழிதான். ஒன்று அவர்களுக்காக காதலை துறப்பது. மற்றொன்று எதிர்த்து போராடி திருமணம் செய்து கொள்வது. ஆனால் இரண்டும் துன்பம்தான்.

மனதுக்கு பிடித்த துணையை மனதிலிருந்து தூக்கி எறிவது ஒரு வலி என்றால், பெற்றவர்களையும், சுற்றத்தையும் தூக்கி எறிந்து விட்டும் போவது ஒரு மனித தீவில் தாங்கள் மட்டும் தனிமையாக போகும் துன்பம்.

காதலின் வெளிப்புறம் வசீகரமாகத்தான் இருக்கும். அதன் உட்புறம் அதற்கு நேர்மாறானது வலியும்... வேதனையும் தாங்கும் சக்தியும், உறுதியும் உள்ளவர்களால் காதலில் வெற்றி பெற முடியும். வெளிப்புறத்தால் வசீகரிக்கப்பட்டவர்கள் வலிதாங்காமல் வழியிலே திரும்பக் கூடும்.

காதலை மட்டும் சமுதாயம் ஏற்றுக் கொள்வதேயில்லை. ஏனோ அதற்கு எப்போதும் எதிர்ப்பு இருந்து கொண்டேதானிருக்கிறது. காதலை கொச்சையாகவே பார்க்கிறது சமூகம். காட்டுமிராண்டியாய் அலைந்து திரிந்தவனை நாகரீகப்படுத்தியது காதல்.

ஒரு உயிரை ஒரு உயிர் நேசிப்பது எப்படி கொச்சை ஆகும்.

இனச் சேர்க்கையில் ஈடுபடும் உயிரினங்களில்... காதல் சேர்க்கையில் ஈடுபடுவது மனித இனம்தான்.

காதல் மனித சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை சமப்படுத்தும் அற்புதக் கருவியாகத்தான் நான் கருதுகின்றேன். ஆனால் இந்த கருவிக்கு ஆண்டாண்டு காலமாய் அவப்பெயரே.

பெற்றோர்களால் பார்த்து நடத்தும் திருமணத்தில் எனக்கு முற்றிலும் எதிர்ப்பில்லை. ஆனாலும், முற்றிலும் உடன்பாடில்லை. அந்த திருமணத்தில் பெண்ணடிமைத்தனத்தின் பகுதி கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கின்றது என்று நான் கருதுகின்றேன்.

தான் கூடி வாழப்போகும் ஒரு துணையை அந்தப் பெண்ணே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இல்லாமல், அவளுக்கான துணையை



பெற்றோர்கள் தேர்ந்தெடுப்பது, அதுவும் சந்தையில் ஒரு மாட்டை பார்ப்பது போல், வரதட்சணை என்கிற பல் பிடித்துப் பார்க்கும் பேரத்தை

ஆணாதிக்கம் என்பதா... அல்லது பெண்ணடிமைத்தனம் என்பதா?

ஆதிக்கத்தனமோ, அடிமைத்தனமோ இரண்டிற்கும் சமுதாயமே முக்கிய காரணம் என்றுதான் நான் கருதுகின்றேன். ஆதிக்கக் குணம் உருவாவதற்கு காரணம் பெண் அடங்கிப் போவதே. அடங்கிப் போவதையும் ஆதிக்கம் செலுத்துவதையும் அங்கீகரித்தது இந்த சமுதாயம்தானே. தந்தையால் அடக்கப்பட்டு.. சகோதரனால் கண்டிக்கப்பட்டு வளர்கின்ற சமுதாயமாக பெண் நம் நாட்டில் இருக்கிறாள். இப்படி வளர்ந்த பெண்ணை கணவன் கட்டுப்பாட்டிற்குள் பெற்றோர்கள் அனுப்பும்போது, அந்தப் பெண் எப்படி சுயமாக சிந்திக்க முடியும்... சுயகௌரவமாக வாழ முடியும்... இப்படி அடங்கிப் போகிற பெண்ணுக்கும்... அடக்கி ஆள்கின்ற ஆணுக்கும் பிறக்கும் குழந்தை எப்படியிருக்கும். அடக்கவும் தெரியாமல்... அடங்கிப் போகவும் தெரியாமல் இரண்டும் கெட்டத்தனமாக இருக்கும்.

இப்படிப்பட்ட அரைவேக்காட்டுத் தனமான சமுதாயத்தை உருவாக்கும் திருமணத்தில் எனக்கு உடன்பாடில்லை. அதேசமயம் எல்லாம் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் இந்த வகை இல்லை... கணவனை நண்பனாகப் பார்க்கும் பெண்களும்.. மனைவியை தோழியாய் நடத்தும் ஆண்களும் அபூர்வமாய் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதே சமயம் எல்லா காதலும் திருமணத்தில் முடிவதில்லை... அப்படியே திருமணத்தில் முடிந்த காதல் எல்லாம் வெற்றியும் பெற்றுவிடுவதில்லை.

நேசித்தவர்களை... நேசிப்புக்குள்ளானவர்களை... சிக்கலில் ஆழ்த்தி விடும் சூழ்நிலையும் சில சமயம் காதலில் நேர்ந்து விடுகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com




"நமது பொதுமக்கள் நடிப்புக் கலையில் ஈடுபட்டுள்ள பெண்களைப் பற்றி வித்தியாசமான எண்ணம் கொண்டுள்ளார்கள். ஒரு பெண் எந்தத் துறையில் இருந்தாலும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டியவள். நடிப்புத்துறை மட்டும் சோதனையான இடமென்று முடிவு கட்டுவது மூடத்தனமாகும்."
குமாரி என்.சரோஜினி ஒரு பேட்டியில் 'கலை' செப்டெம்பர் 1949 இதழில்...

கதிரவன் பானையிலிருந்து கொண்டு வந்து கொடுத்த தண்ணீரைக் குடித்தார் ஈஸ்வர்.

"என்ன நான் சொன்னதெல்லாம் புரிஞ்சுதா?"

கதிரவன் கலக்கமாக இருந்தான்.

"சார், எனக்குப் பயமா இருக்கு."

"என்ன பயம்?"

"ஏதோ படத்திலதான் நடிக்க சான்ஸ் தர்றீங்கன்னு பார்த்தா, வாழ்க்கைல நடிக்கச் சொல்றீங்களே சார்"

"அதனால என்ன?"

"நீங்க சொல்றது பெரிய விஷயம் சார்."

"ஆமாம். அதனாலதான் பெரிய தொகையாத் தர்றேன்னு சொல்றேன். ஒரு சின்ன நாடகத்துக்கு அம்பதினாயிரம் பெரிய தொகை இல்லியா?"

"ஆனாலும்..."

"மனச்சாட்சி உறுத்துதா?"

"அதில்லை. மாட்டிக்கிட்டா என்ன செய்யறதுன்னுதான் யோசனையா இருக்கு"

"எப்படி மாட்டுவே?"

"இந்தாள் சொல்றதெல்லாம் பொய் அப்படின்னு சொல்லி என்னை பொலிஸ்ல பிடிச்சுக் கொடுக்க ஸ்டெப் எடுத்திட்டா?"

"அவளைப் பத்தி எனக்குத் தெரியும். அந்த அளவுக்கெல்லாம் கண்டிப்பாப் போக மாட்டா."

"பத்திரிகைக்காரங்க பலவிதமாக் கேள்வி கேப்பாங்களே"

"இன்னும் நாலு நாள் கழிச்சுத்தான் இந்த நாடகத்தோட அரங்கேற்றம். அதுக்குள்ளே உன்னை நான் தயார் படுத்திடுவேன் கதிரவன். எப்படி பதில் சொல்லணும்னு எல்லாம் நான் சொல்லித் தர்றேன்."

"வேற, எதுவும் பிரச்சனை வராதே..."



"வராது"

"ஒருவேளை, இதனால நீங்க சொல்ற அந்த சந்திரசேகருக்குக் கடுமையா கோபம் வந்து என்னை ஆளை வைச்சி அடிச்சா?"

"நீ ரொம்பவும் விபரீதமா கற்பனை பண்ணிக்கிறே"

"எல்லாத்தையும் யோசிக்கணுமில்ல"

"ரைட்டு. இந்தா அட்வான்ஸ் இருபதாயிரம்."

கதிரவன் இரண்டு நூறு ரூபாய் கட்டுக்களையும் ஆர்வமாக வாங்கி வைத்துக் கொண்டான்.

"இப்ப சொல்லு. உன் பேரென்ன?"

"கதிரவன்"

"அதில்லையா! நம்ம நாடகப்படி உன் பேர் என்ன?"

"வேங்கட ரெட்டி"

"உனக்கு சொந்த ஊரு எது?"

"ஆந்திரால நெல்லூர் பக்கத்துல ஒரு கிராமம்"

"உனக்கும் மதுமிதாவுக்கும் எங்க கல்யாணம் நடந்துச்சு?"

"ஹைதராபாத்ல சார்"

"வெரிகுட்"

ஈஸ்வர் மேற்கொண்டு ஒரு மணி நேரத்திற்கு மேல் அவனைத் தயார்படுத்தி விட்டு எழுந்து, "நாளைக்கு நீட்டா ஷேவ் பண்ணிக்கிட்டு ஸ்டூடியோவுக்குப் போய் போட்டோ எடுத்துட்டு வா. அர்ஜெண்டுன்னு சொல்லி சாயங்காலமே டெலிவரி வாங்கு. நெகடிவையும் வாங்கிட்டு வந்துடு. நாலஞ்சு விதமா எடுக்கச் சொல்லு. அப்புறம், வேற என்ன?" என்றார்.

"நான் கொஞ்சம் அழறதுக்குக் கத்துக்கணும்."

"ஆமாம் அது முக்கியம். பேசறப்ப கடகடன்னு ரெண்டு சொட்டு கண்ணீர் வந்தாலே எல்லோரும் நம்பிடுவாங்க. அப்ப நான் வர்றேன்"

ஈஸ்வர் கார்ச்சாவியைச் சுழற்றியபடி நடந்தார்.

டோஸ்ட் செய்த பிரெட் துண்டுகளை பீங்கான் தட்டில் வைத்து, மிளகாய் சாஸ் ஊற்றிக்கொண்டு ஹாலில் வந்து அமர்ந்தான் சந்திரசேகர்.

ரிமோட் எடுத்து டி.வி.யைப் போட்டு சேனல் சேனலாய் மாற்றித் திரைப்பட பாடல்களில் நிறுத்தினான்.

"எக்ஸ்கியூஸ் மீ..."

"அடடே வாங்க சார்"

தேசிகாச்சாரி குடையை ஓரமாக வைத்துவிட்டு வந்தார்.

"உட்காருங்க சார்."

"என்ன இது, பிரெட் சாப்பிடறீங்க? பையன் டிஃபன் வாங்கிட்டு வரல்லையா?"

"இன்னைக்கு அவன் லீவு சார். ரெண்டே நிமிஷம்"

"மெதுவா சாப்பிடுங்க. எனக்கு அவசரமில்லை."

சந்திரசேகருக்கு விக்கல் எடுக்க, சாரி சென்று ஜக்கிலிருந்து டம்பளரில் நீர் சரித்துக்கொண்டு வந்து கொடுத்தார்.

சந்திரசேகர் பிரெட் சாப்பிட்டு முடித்து, "எனக்கு காபி போட்டுக்கப் போறேன். உங்களுக்கு?" என்றான்.

"சர்க்கரை இல்லாம"

சந்திரசேகர் இரண்டு காபிகளுடன் வந்து அவருக்கொன்று நீட்டி தன்னுடையதைப் பருகினான்.

காபி குடித்ததும், டி.வி.யை அணைத்து விட்டு ஒரு பெரிய அட்டைப் பெட்டியை எடுத்து டீப்பாய் மேல் வைத்தான்.

"என்ன இது?"

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, சாரியின் சிகரெட்டுக்குப் பற்ற வைத்து விட்டு சின்ன இருமலுக்குப் பிறகு சொன்னான்.

"எல்லாம் வாடகைக்கு எடுத்தது சார். விக், ஒட்டு மீசை, கோட், சூட், டை, பைப், மோதிரங்கள், செயின், வாக்கிங் ஸ்டிக்."

"இதெல்லாம் எதுக்கு?"

"ஒரு மிகப் பெரிய கோடீஸ்வரன்னு உங்களை மதுமிதா நம்ப வேணாமா? எழுநூத்தி நாப்பது கோடிக்கு சொந்தக்காரர்! அந்த கெட்டப்பை ஏற்படுத்தியாகணுமே"

"என்ன தம்பி இது. ஒரு கோடீஸ்வரன் சிம்பிளா இருக்கக் கூடாதா?"

"இருக்கலாம் நம்பிக்கை வராது. ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரை மஃப்டில பார்க்கறதுக்கும், யூனிஃபார்ம்ல பார்க்கறதுக்கும் வித்தியாசம் இல்லையா?"

"சரி சரி. அவ சினிமாக்காரின்கிறதால சினிமாத்தனமாகவே நடந்துக்கச் சொல்றீங்க. ரைட்டு! ஆமாம் இந்த நாடகம் அவசியம் தானா?"

"உங்களுக்காகத்தான் சார். எனக்கு அவசியம் இல்லை."

"அந்தப் பொண்ணு நல்லவன்னு நான் புரிஞ்சுக்கிட்டாக வேண்டியது அவசியம்தானான்னு கேக்கறேன்"

"அது அவசியம் சார். நான் ரொம்ப மதிக்கிறவங்கள்ல நீங்களும் ஒருத்தர் சார். அதனாலதான் நீங்க கல்யாணத்துக்கு சாட்சியா இருக்கணும்னு ஆசைப்படறேன். நான் வற்புறுத்திச் சொன்னா நீங்க வந்துடுவீங்க. ஆனா நீங்க மனப்பூர்வமா, முழு மனசோட வரணும். மதுமிதாவை நான் செலெக்ட் செஞ்சது தப்பில்லைன்னு நீங்க உணர்ந்தாத்தான் உங்களுக்கு இந்தக் கல்யாணத்தில ஈடுபாடு வரும். அதுக்காகத்தான் இந்த நாடகம்"

"நான் ஏன் இதுக்கு ஒத்துக்கறேன் தெரியுமா?"

"சொல்லுங்க சார்"

"என் மனசு சமாதானமாகிறது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த நாடகத்தில ஒருவேளை அவளோட சுயரூபம் வெளிப்பட்டு என் அபிப்பிராயம் சரியா இருந்து போச்சுன்னா நீங்க இந்தக் கல்யாண விலங்குலேர்ந்து தப்பிச்சிடலாமே... அதுக்காகத்தான் ஒத்துக்கறேன்"

"நீங்க மதுமிதாவைப் பார்த்துட்டு வந்து சொல்லுங்க சார்."

"ரைட்டு"

"இதையெல்லாம் போட்டுக்கிட்டு கோடீஸ்வர அப்பாவா வாங்க, சீக்கிரம்!"

தேசிகாச்சாரி அந்த அட்டைப் பெட்டியுடன் அடுத்த அறைக்குச் சென்றார். சிந்தனையோடு சிகரெட்டைப் புகைத்தான் சந்திரசேகர்.

சில நிமிடங்களில் முழு கெட்டப்பில் கோடீஸ்வரராய் ஹாலுக்கு வந்தார் தேசிகாச் சாரி.

"அற்புதமா இருக்கு சார். இந்த கெட்டப். நிஜமாவே நீங்க மீசை வெச்சிக்கலாம். ஸ்டைலா பைப்பை இப்படிப் பிடிக்கணும் சார்."

அவர் விரல்களை மாற்றியமைத்துத் திருத்தினான்.

"இப்ப உங்க பேர் என்ன?"

"எப்பவுமே என் பேர் தேசிகாச்சாரி தான்."

"அதான் தெரியுமே. இந்த நாடகத்துக்காகச் சூட்டினேனே."

"கைலாஷ்!"

கரெக்ட். நீங்க எந்த ஊரு?"

"காஷ்மீர்"

"அங்க என்ன தொழில்?"

"ஏக்கரா ஏக்கராவா ஆப்பிள் தோட்டம் வெச்சிருக்கேன். ஆப்பிள் ஜூஸ் தயாரிச்சு உலகம் பூரா எஸ்க்போர்ட் பண்றேன்"

"கரெக்ட்"

"உங்க பையன் பேரு என்ன?"

"ராகேஷ்"

"வெரிகுட். இப்ப ஃபோன் பண்றீங்களா?"

சாரி அமர்ந்து போனை எடுத்தார். அவன் சொன்ன எண்களை அழுத்தினார்.

"ஹலோ, அங்கே ஸ்பெஷல் வார்டுல ஆர்ட்டிஸ்ட் மதுமிதாவோட பேசணும். கொஞ்சம் கனெக்ட் பண்ணுங்க ப்ளீஸ்..."

காத்திருந்தார்.

"ஹலோ, மதுமிதா ஹியர்"

"வணக்கம் மதுமிதா"

"வணக்கம்"

"என் பேரு கைலாஷ். நான் காஷ்மீர்லேர்ந்து வந்திருக்கேன். ஒரு முக்கியமான விஷயமா உங்களை நேர்ல சந்திக்கணும்மா"

"என்ன விஷயம் சார்?"

"ரொம்ப பர்சனல் மேட்டர். ஒரு கல்யாணம் சம்பந்தமா பேசணும். நீங்க அடிபட்டு ஆஸ்பத்திரில ட்ரீட்மெண்ட் எடுத்துட்டு இருக்கீங்கன்னு தெரியும். இருந்தாலும் தொந்தரவு செய்ய வேண்டியிருக்கு. நேர்ல வரட்டுமா? சும்மா பதினைஞ்சி நிமிஷம் பேசினாப்போதும். மேட்டர் ரொம்ப அர்ஜெண்ட். தற்கொலைக்கு முயற்சி செஞ்ச என் பையனோட உயிரை நீங்கதான் காப்பாத்தணும்."

"சரி. வாங்க, பேசலாம்" என்றாள் மதுமிதா.

**(தொடரும்)**

பட்டுக்கோட்டை பிரபாகர்

19

---

# நில்-கவனி-முன்னேறு

"புத்ததேவா!"

அமைதியான குரல் ஒன்று ஒலித்தது.

தியானத்தில் அமர்ந்திருந்த புத்தன் கண்களைத் திறந்து பார்த்தான். இருபத்தைந்து வயதுக்கு மேற்படாத இளம் பிட்சு ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

புத்தன் கண்களாலே கேள்வி கேட்டான். பிட்சு சொன்னான்:

"புத்த தேவா! துறவறம் எனக்குக் கசந்துவிட்டது. நான் இல்லறத்துக்குத் திரும்பலாம் என்று கருதுகிறேன்."

புத்தன் இரண்டு கைகளாலேயும் முகத்தைத் துடைத்துக் கொண்டு, "நல்லது. இல்லறமாயினும், துறவறமாயினும்' மனிதனுக்கு அவை அறமே. துறவைத்தான் நீ உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை; எது உனக்கு மகிழ்ச்சி தரக்கூடியதோ, எது பிறருக்கு உதவுவதற்கு உனக்கு வழி வகுத்துத் தருகிறதோ, அதை நீ மேற்கொள்வதில் எனக்குத் தடையில்லை," என்றான்.

பிட்சு மண்டியிட்டு அவனை வணங்கி விட்டுப் புறப்பட்டான்.

சென்றவனை நிறுத்தி, "இதோ பார், இல்லறமும் கசந்துவிட்டது என்று திரும்ப வந்து சொல்லமாட்டாயே?" என்று கேட்டான் புத்தன்.

பிட்சு யோசித்தான்.

"இப்போது யோசித்தால் இது விளங்காது; அநுபவித்தால் தான் விளங்கும். போய் வா!" என்றான் புத்தன்.

காலங்கள் ஓடின.

அவை பத்து ஆண்டுகளாயின.

புத்தன் எங்கே, எப்படி இருந்தானோ, அங்கே அப்படியே இருந்தான்.

"புத்த தேவா!"

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த அதே குரல் அப்படியே ஒலித்தது.

புத்தன் கண்களைத் திறந்து பார்த்தான்.

பிட்சு மௌனமாக நின்றான்.

"இல்லறம் கசந்துவிட்டதா?"- புத்தன் புன்னகையோடு கேட்டான்.

பிட்சு அதே மௌனம்.

"இதோ பார், நோயாளியாக இருக்கும் போது மருத்துவன் பெரிதாகத் தோன்றுவான். மருத்துவனுக்கோ நோயாளியே



அதிஷ்டக்காரனாகத் தோன்றுவான்; உலகத்திலுள்ள தலையாய அறங்கள் இரண்டு தான்; இல்லறம், துறவறம். துறவறத்திலிருந்து இல்லறத்துக்குப் போனவன் மீண்டும் துறவறத்துக்கு வந்தே சேருவான். ஆனால், இல்லறத்திலிருந்து துறவறத்துக்குப் போனவன் திரும்புவதில்லை. நீ பக்குவம் இல்லாமல் சந்நியாசி ஆனவன். சுமை எங்கே அதிகம் என்று அறியாமல் வந்தவன். இப்போது அநுபவப்பட்டு வந்திருக்கிறாய். இனி நீ துறவறத்துக்கு இலாயக்கானவன் என்றாலும், துறவறம் உனக்கு இலாயக்கற்றது. ஆன்மா சிந்திக்கத் தொடங்கும் இடத்திலேயே அதைக் கையில் பிடித்துக் கொள்பவன் தான் நல்ல சந்நியாசி; அவர்களே பிறருக்குப் போதிக்கும் தகுதி படைத்தவர்கள். எனவே, நீ இல்லறத்துக்கே மீண்டும் திரும்பு."

பிட்சு வணங்கிவிட்டுத் திரும்பினான்.

புத்த மடாலயத்திலிருந்து இளம் பிட்சுகளின் குரல் ஓங்கி ஒலித்தது:

"புத்தம் சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி!
தர்மம் சரணம் கச்சாமி!"

புத்தன் மடாலயத்துக்குள் நுழைந்தான். சிஷ்யர்களெல்லாம் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். புத்தன் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தபடி தேவதாசி ஆம்ரபாலி உள்ளே நுழைந்தாள்.

கவியரசு கண்ணதாசன்

மடாலயத்தில் காம நடனமா?

சிஷ்யர்களுக்கு ஒரே உற்சாகம்.

ஆட்டம் தொடங்கிய அரை நாழிகையில் புத்தன் மூன்று சிஷ்யர்களைத் தன் பக்கம் அழைத்து நிறுத்திக் கொண்டான்.

ஆட்டம் தொடர்ந்தது.

மேலும் சில சிஷ்யர்களைப் புத்தன் தன் பக்கம் அழைத்துக் கொண்டான்.

ஆட்டம் தொடர்ந்தது.

இப்பொழுதும் சில சிஷ்யர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

ஆட்டம் முடிந்தபோது இரண்டு பேர் மட்டும் அமர்ந்திருந்தார்கள்.

சுமார் ஐம்பது பேரில் நாற்பத்தெட்டுப் பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

புத்தன் அவர்களைப் பார்த்துச் சொன்னான்:

"உங்கள் முகத்திலிருக்கும் வியர்வையைத் துடையுங்கள். குளிர்ச்சியான இடத்தில் முகம் வியர்க்கிறதென்றால், ஆன்மா அலைகிறதென்று பொருள். எவனுடைய உடம்பை ஆன்மா ஆள்கிறதோ, அவன் யோகி; எவனுடைய உடம்பு ஆன்மாவை ஆள்கிறதோ, அவன் போகி.

ஒரு பெண்ணின் முழு நிர்வாணத்தில் எவன் சபலப்படவில்லையோ, அவனே நிர்வாணத்துக்கு இலாயக்கானவன். அந்த இரண்டு பேர் எனக்குப் போதும்!"

ஆம்ரபாலி ஆடைகளை எடுத்துத் தன் உடம்பை மூடிக்கொண்டாள்.

'புத்தம் சரணம் கச்சாமி' என்ற குரல் மீண்டும் எழுந்தது.

அதை ஐம்பது பேர் சொன்னபோது இல்லாத கம்பீரம், அந்த இரண்டு பேர் சொன்னபோது இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# 'உள்ளம் என்பது ஊமை'

"அரவிந்தனுக்கு சுகந்தியைத் தெரியும். அவள் பேசுவது எல்லாம் புரியும்."

"சுகந்திக்குக் கனடாக் கோல்..."

ரிசெப்ஷனிலிருந்து அரவிந்தனின் குரல், விடுதியில் அங்கங்கே இணைக்கப்பட்டிருந்த சிறிய ஒலிபெருக்கிகளில் அழைப்பு விடுத்தது.

சுகந்திக்குக் கனடாவிலிருந்து கோல் வந்தாலென்ன, கரிப்பட்டமுறிப்பிலிருந்து திசைமாறி ஆமியே வந்தாலென்ன; அவ்வளவு அறைகளையும் தாண்டித்தான் ரிசெப்ஷனுக்கு வரமுடியும்.

"நம்பர் 'த்ரீ'யிலை எடுங்க...!" அவள் ரிசெப்ஷன் வந்ததும், அரவிந்தன் சொல்லி விட்டுச் சிரித்தான். மூன்றாம் இலக்க 'பூத்' புகுந்து, ரிசீவரைக் காதில் பொருத்தினாள்- "ஹலோ.."

"என்ன இவ்வளவு நேரம்...?"

"பின்னுக்கு நிண்டனான்."

"விசாக் கிடைச்சதும் சட்டு புட்டெண்டு, பரமேசைக் கொண்டு டிக்கற்றை ஏற்பாடு செய்யும். அவர்ற டெலிஃபோன் நம்பர் உம்மட்டை இருக்குத் தானே!?"

"இல்லை!"

"அப்ப எழுதும்."

"கொஞ்சம் பொறுங்கோ..."

ரிசீவரை அந்தரத்தில் தொங்கப் போட்டு விட்டு, 'பூத்' கதவு திறந்து, "அரவிந்த் ஒரு பேனை தாருங்கோ. டெலிஃபோன் நம்பர் ஒண்டு எழுத வேணும்," என்றாள். 'கடதாசியுமா?' என்று அரவிந்தன் சைகையில் கேட்டான். "வேண்டாம் கையில் எழுதிக் கொள்கிறேன்," என்றாள். மீண்டும் ரிசீவரைக் காதில் பொருத்தி, "சரி, நம்பரைச் சொல்லுங்கோ!" என்றாள்.

"ஆரது ரிசெப்ஷனிலை.? பெடியனோ..."

"ம்...."

"எத்தினை வயசிருக்கும்?"

"இருபத்தொன்பது!" -சொல்லும்போதே பயந்தாள் சுகந்தி.

"அதானே பாத்தனான்! தாருங்கோ வாருங்கோ எண்டு மரியாதை தூள் கிளப்பிறது!"

'ஏய், முட்டாள் கணவனே!' -என்று விளித்து ஏதாவது சொல்ல வேண்டும் போல் சுகந்திக்குத் தோன்றியது. சொன்னால் ருத்ரதாண்டவம் ஆடுவான். 'பூத்'தின் கண்ணாடிக்கு வெளியே அரவிந்தன் தெரிந்தான். அவன் மேசையில் எதுவோ கிறுக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

சுகந்தி இன்னமும் ரிசீவரை காதருகே வைத்திருந்தாள். பரமேலாரின் தொலைபேசி இலக்கம் சொல்வான் என்று காத்திருந்தாள். பழமொழிதான் சொன்னான். நாய் என்றான்; நடுக்கடல் என்றான்; நக்குத் தண்ணிதான் என்றான். அது பரவாணிக்குணம் என்றான்.

சுகந்திக்கு கோபமும், வெளியே காட்ட முடியாத கோபத்தால் அழுகையும், இரண்டும் சேர்ந்த கலவையில் உடம்பு பதறியது.

கண்ணாடிக் கதவு வழியே ரிசெப்ஷன் பார்த்தாள். மேசையிலேயே கைகளை மடித்து, கைகள் மேல் தலைவைத்து, அரவிந்தன் அசதியில் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

இருபத்தைந்து வயதுப்புறா, இளமை வனப்புடன் நைட்கவுனில் வந்துநின்று டெலிபோனில் பேசுகிறாள். அருகே யாருமில்லாத தனிமை, இரவு. இத்தனைக்கும் மத்தியில் ஒருவன், ஒப்புக்காகவேனும் நோட்டம் விடாமல், குழந்தைபோல் 'ஹே'! என்று வழிந்து கொண்டு தூங்குகிறான். இப்படிப்பட்ட அரவிந்தனையா என்னுடன் இணைத்துப் பார்க்கிறான் என் முட்டாள்க் கணவன்...?

மறுமுனையில் தொலைபேசியை அடித்து வைக்கும் சத்தம் கேட்டது. சுகந்திக்கு வாய் கோணி, கண்கள் கசிய ஆரம்பித்தன. பூத்தின் கண்ணாடிக் கதவு தாண்டி வெளியே வர, கேவலாக வெளிப்பட்டுவிட்டது.

சுகந்தியின் கேவலால் அரவிந்தன் திடுக்கிட்டு விழித்தான். அவள் சோகம் கண்டு, தானும் சன்னமாய்ச் சோகம் கொண்டான். செய்வதறியாது நின்றான். பின் சுதாகரித்துக் கொண்டு சூழலை ஞாபகப் படுத்தினான். அவளைச்- சமாதானப்படுத்தி, அழுகை தணித்தான்.

"நான்... எத்தனை நிமிஷம் பேசியிருக்கிறன்...?" சுகந்தியின் குரல் சோபையிழந்து வெளிப்பட்டது.

"அதைக் காலையில கணக்குப் பார்த்துக் கொள்ளலாம். இப்ப ரூமுக்குப் போங்க!"

"அரவிந்த், உங்களாலை எப்பிடி, இப்பிடி இருக்க முடியிறது..?"

"புரியலையே...!" புருவம் நெரிய சுகந்தியைப் பார்த்தான்.

"பொஸிடிவ்வா! ஓடி ஓடி எல்லாருக்கும் உதவி செய்து, எல்லாரோடையும் ஒத்துப் போய், எல்லார் கதையையும் அக்கறையாக் கேட்டு, எல்லாருக்கும் ஆறுதலாய் இருந்து..."

"இங்க பாருங்க சுகந்தி, ஒரு நாளைக்கு நீங்களும் சரி, நானும் சரி செத்துத்தான் போகப் போறம். அப்ப இந்த உடம்புக்கும், என்ர மனசுக்கும் பெறுமதி என்ன..? வெறும் பூச்சியம்! ஓடிக் கொண்டிருந்தாத்தானே ஆறு. ஒரேயடியா நிண்டுபோயிட்டா தேங்கிப்போன குட்டை எண்டுவாங்கள்... பிறகென்ன ஒரே நாத்தந்தான்... ஏதாவது செய்யணும்... யாருக்காவது செய்யணும் அதுவும் நல்லதா...!"

சுகந்திக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. காலையில் வந்த டெலிஃபோன் மனதை அரித்தது.

***

அரவிந்தன் எம்பெஸ்ஸி வாசலிலேயே நிற்க, சுகந்தி கோப்புடன் (FILE) உள்ளே போனாள். அரை மணித்தியாலம் கழித்துத் திரும்பி வந்தாள்.

"என்னாச்சு?"

"விசாக் கிடைச்சிட்டுது!"

"என்னங்க சுகந்தி நீங்க, விசாக் கிடைச்சிட்டுது எண்டுறதை, என்னமோ விஷம் கொடுத்திட்டாங்க எண்டுற மாதிரி சொல்லுறீங்க... ரொம்பச் சந்தோசமான நாள் இது தான் எண்டுற மாதிரி ஒரு ரியாக்ஷன் வேண்டாமோ...?"

"இல்லை அரவிந்த்! நேரம் நெருங்கிக் கொண்டு வருகிறதைப் பார்க்க பயமாய் இருக்கு! விசாக் கிடைச்சிட்டுது எண்டால் இனியென்ன டிக்கெற்று, பிறகு எயர்ப் போர்ட்டு, அதோட இந்த மண்ணை விட்டு வானத்திலைதான் வாழ்க்கை!" வானத்தை நிமிர்ந்து பார்த்து, விரக்தியும் சலிப்புமாய்ப் பேசினாள் சுகந்தி.

அரவிந்தனுக்கு சுகந்தியைத் தெரியும்.



பா. பாலேந்திரன்-நோர்வே

அவள் பேசுவது எல்லாமும் புரியும். அரவிந்தன் அவளது சலிப்பை மாற்றப் பிரயாசைப் பட்டான்.

"வானத்திலை வாழ்க்கையெண்டால், தரையிலை நிக்கிற இந்த அரவிந்தைத் தெரியாமல் போயிடலாம் இல்லையா...?"

"விளையாட்டுக்குக்கூட அப்பிடிச் சொல்லாதீங்க அரவிந்த்..!" அரவிந்தன் திரும்பி அவளது முகம் பார்த்தான். சுகந்தி உடைந்து கொண்டிருப்பது புரிந்தது. கொஞ்சம் விட்டால் அழுதுவிடுவாளோ...?

"இண்டைக்கு என்ன கிழமை சுகந்தி?"

"வெள்ளி"

"கோயிலுக்குப் போகலாமா...?"

"போய்..?"

"ரெண்டு கிலோ மீன் வாங்கிக் கொண்டு வரலாம்..! என்னங்க சுகந்தி நீங்க, கோயிலுக்கு எதுக்குப் போவாங்க..? ஒரு ஆறுதலுக்குத்தான்-"

"சரி, போகலாம்"

வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டு, உள்ளே நுழையவும் கற்பூரவாசம் முகத்தில் அறைந்தது.

நம் சமூக அமைப்பில் ஒரு பால் இனம், தன் எதிர்ப்பால் இனத்தின் மேல் உள்ள எல்லா உணர்வுகளையும் யதார்த்தமாக வெளிப்படுத்திவிட முடியாது. அரவிந்தன் தன் மனதில் தோன்றிய எண்ணங்களுக்கு அணை போட்டான்; ஆமையாக ஒடுங்கிப் போனான்.

சுகந்தி திருநீறு பூசிக் கொண்டு வர, அரவிந்தன் வெளியேறி செருப்பு மாட்டிக் கொண்டான்.

விடுதிக்கு வந்ததும் வரதனுக்கு மூன்று நிமிடக் 'கோல்' எடுத்தாள்; விஷயம் சொன்னாள். பரமேஸ்வரனின் டெலிஃபோன் இலக்கம் பெற்றாள்.

பயணம் நிச்சயமாயிற்று.

அரவிந்தனை 'எயர் போர்ட்'டுக்கு வரும்படி கேட்டுக் கொண்டாள். இரவிரவாக சாமான்களைப் பார்சல் செய்வதற்கும் நின்று உதவினான். அதிகாலையில் 'வேன்' பிடித்து, பின்புறம் சாமான்களை அடைத்து, தானும் ஏறிக் கொண்டான். யாராவது ஒரு வயதான பெண்மணியையும் ஏற்றிக் கொள்ளும்படி டிரைவர் கேட்டுக் கொள்ள, சரஸ்வதியக்கா சுகந்தியுடன் ஒட்டிக் கொண்டாள்.

"அரவிந்த்...!"

"என்ன சுகந்தி?"

"இல்லை! ஒண்டுமில்லை!"

"சும்மா சொல்லுங்க...!"

"என்னை மறந்திடுவீங்களா அரவிந்த்..?"- ஓவென்று கதறிவிடுபவள் போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்.

இல்லையென்பதாகத் தலையாட்டினான்.

"ஏதாவது சொல்லுங்க அரவிந்த்...!" அவசரப்படுத்தினாள்.

ஹூம்... கூடாது. இப்போது எது சொன்னாலும் உடைந்து ஓவென்று கதறுவாள் போல் தோன்றியது.

"ப்ளீஸ்...!" சுகந்தி கெஞ்சலாகக் கேட்டாள்.

அரவிந்தன் பல தடவைகள் யோசித்து, மூளை மடிப்புக்குள் உயர்ந்த வார்த்தைகள் தேடினான். அவை இங்கே பிரயோசனப் படாது. எளிமையாய் ஓரிரு வார்த்தைகள் சொல்லலாம்.

"எப்பவாவது எங்கையாவது சந்திக்கலாம். முடியாமப் போயிட்டா...?" அரவிந்தன் வாக்கியத்திற்கு இறுதி வார்த்தைகள் தேடினான்.

சுகந்திக்குக் கண்ணீர் முட்டி வழிய ஆரம்பித்தது.

இது என்ன உறவு..? சகோதர உறவா? அவ்விதம் சுகந்தியோ அல்லது அரவிந்தனோ சொல்லிக் கொண்டு, தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டதில்லை! ஒருத்தருக்கு இன்னொருத்தர் உதவி என்கிற பூலோக தர்மத்தில், இவள்-சுகந்தி: இவன்-அரவிந்தன் என்கிற உறவு.

பெண்ணுக்கு கொண்ட இடத்தில் அன்பும், பாசமும், நம்பிக்கையும், புரிந்துணர்வும், செக்கியூரிட்டியும் கிடைத்துவிட்டால் இந்த அரவிந்தன்கள் எம்மாத்திரம்...?

"நேரமாயிட்டுது; உள்ளே போங்க சுகந்தி."

உனக்கும் டாட்டா, எனக்கும் டாட்டா என்கிற இந்தக் கடைசி நேரம்தான் பொல்லாத நேரம்.

"உங்க கையைக் கொஞ்சம் தாங்கோ..."

அரவிந்தன் கையை நீட்டினான். சுகந்தி கைப்பை திறந்து அந்த ஒற்றை ரூபாயை எடுத்தாள்.

"இதை ஞாபகம் இருக்கா?" என்றாள். 'ஓம்' என்று தலையை அசைத்தான்.

அவனது உள்ளங்கையில் அந்த ஒற்றை ரூபாயை வைத்து மூடினாள். 'வித் யுவர் பெர்மிஷன்' என்று விட்டு, அரவிந்தன் சற்றும் எதிர்பார்க்காத வேளையில், அவன் மூடிய கைகளை எடுத்து, தன் கண்ணீர் துடைத்தாள். நகர்ந்து உள்ளே போனாள். அடிக்கடி திரும்பிப்பார்த்தாள்.

'போர்டிங் காட்' எடுத்து, விசாக் காண்பித்து, கடைசி வளைவு போய்த் திரும்பினாள்.

அரவிந்தனுக்கு இப்போதுதான் மெல்ல மெல்லக் கண்கள் கசிய ஆரம்பித்தன. அரவிந்தனும் அழுவான் என்று சுகந்திக்குத் தெரியாது. அரவிந்தன் உறுதியானவன் என்பது சுகந்தியின் கணிப்பு. அவன் உறுதியானவனோ இல்லையோ விவேகி! அதனால் தானோ என்னவோ இடைவெளிவிட்டு அழுகின்றான்.

இது சுகந்திக்குத் தெரிய வாய்ப்பும் இல்லை. அவள் நீண்ட தூரத்தில் நின்றிருந்தாள்.

---

# திசைமாற்றம்

"ரம்யாவின் மனதில் நிறைந்திருந்தது ஆகாசின் நினைவுகள் மட்டுமே"

"நீ பிரிஞ்சி போறதை நினைக்க கவலையா மட்டுமில்ல ரம்யா, பயமாகக்கூட இருக்கு. நீ..நீ என்னை மறந்திடுவியா?" குழந்தைத்தனமாக ஆகாஷ் கேட்டபோது மனசுக்குள் வலித்தது ரம்யாவுக்கு.

கபடமற்ற அவனது குணத்திற்காகவே ரம்யாவின் மனதில் அவன் நீங்காத இடம் பிடித்திருந்தான். அழகு, அறிவு இரண்டிலும் ரம்யாவைவிட குறைந்தவனாக காணப்பட்ட ஆகாஷின் அன்போ, மிக மிக ஆழமானதாக இருந்தது. இரண்டு வருடங்களுக்கும் மேலாக நீடித்து இருந்த இருவரது உறவுக்குள்ளும் திடீர் பிரிவை ஏற்படுத்த காரணமானது ரம்யாவின் மேற்படிப்பு விவகாரமே.

அம்மா-அப்பா ஆசைக்காக நான் கட்டாயம் கம்பஸ் போய்த்தான் ஆகவேணும் ஆகாஷ். ஆனா படிப்பைக் காரணம் காட்டி, உங்களை மறப்பேன்னு தப்பா மட்டும் நினைக்காதீங்க." அவள் அன்பாக சொல்லிய போதிலும் ஆகாஷின் முகத்தில் ஏதோ ஒரு சோகம் எட்டிப் பார்க்கத்தான் செய்தது.

"எப்பவுமே நீ என்னோட மனசில் இருந்திட்டேதான் இருப்ப ரம்யா, இந்தா என்னோட காதல் பரிசு." எனக்கூறிக் கொண்டே ரம்யாவின் விரலிலே அந்த அழகிய மோதிரத்தை அணிவித்தான் ஆகாஷ்.

"என்னடி மோதிரத்தையே பார்த்திட்டு இருக்க? ஆகாஷின் நினைப்பா?" எனக் கேட்டவாறே ரம்யாவின் அருகில் வந்தாள் தோழி கவிதா. சிரித்துக் கொண்டாள் ரம்யா.

ஆகாஷைப் பிரிந்து மூன்றரை வருடங்கள் ஓடிவிட்டன. இருவருக்குமிடையே உள்ள உறவு கடிதங்கள் மூலம் கடந்த மூன்று வருடங்களாக நீடித்து வந்தபோதிலும், பல மாதங்களாக ரம்யாவின் எந்தக் கடிதத்திற்குமே ஆகாஷ் பதில் அனுப்பியிருக்கவில்லை. மனம் உடைந்து போனாள் ரம்யா. ஆனால் ஒருவேளை அந்தக் கடிதங்கள் கூட ரம்யாவின் படிப்பைக் குழப்பலாம் என்ற நல்லெண்ணத்தில் அவ்வாறு செய்திருக்கலாம் என எண்ணி தன் மனதைத் தேற்றிக் கொண்டாள் ரம்யா.

தானுண்டு தன் படிப்புண்டு என்று காலங்கடத்திய ரம்யாவின் மனதெல்லாம் நிறைந்திருந் தது ஆகாஷ்பற்றிய நினைவுகள் மட்டுமே.

ஆகாஷ் பற்றி ரம்யாவின் கம்பஸ் தோழி கவிதா அறிந்தபோது ஆச்சரியப்பட்டாள். கொடுத்து வைத்தவன் ஆகாஷ் என்று எண்ணி அடிக்கடி கவிதாவும் தோழி ரம்யாவை எண்ணி பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு.

வாரங்கள் சில கடந்தன. கவிதா உற்சாகத்தோடு ரம்யாவை நோக்கி வந்து கொண்டிருப்பதை பார்த்து, "என்ன" என்பது போல ரம்யா தலையை ஆட்டினாள்.

"இங்க பாருடி ஆகாஷ் லெட்டர் போட்டிருக்கார்!" கவிதா சொல்லி முடிக்க முன்பே முகமெல்லாம் மலர அவசரமாகக் கடிதத்தை வாங்கி உடைக்கத் தொடங்கினாள் ரம்யா.

கடிதத்தின் சில வரிகளை வாசித்துக் கொண்டிருந்தபோதே தோழியின் முகத்தில் பூத்திருந்த சந்தோஷம் எங்கோ பறந்து போய் விட்டதையும், வேதனைக் கீறல்கள் ஏற்படுவதையும் அவதானித்த கவிதா பதறிப் போனாள். என்ன என்று அவள் கேட்கும் முன்பே அந்தக் கடிதத்தை கவிதாவின் கைகளில் திணித்தாள் ரம்யா.

"அன்பின் ரம்யா, ஏதோ சில வருடங்கள் ஒன்றாகப் பழகினோம். அப்பொழுது காதல் வேகத்தில் நமக்கிடையே இருந்த படிப்பு வேறுபாடு எமக்கு பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது நீ என்னை மதிப்பாய் என்று எனக்கு துளிகூட நம்பிக்கை இல்லை. உன் பெயருக்குப் பின்னால் பட்டம் வந்து விட்டால் இந்த ஆகாஷ் யார்? என்று கேட்கும் நிலைகூட வரலாம். எல்லாம் யோசித்துப் பார்த்துத்தான் இந்த முடிவை சில மாதங்களுக்கு முன் எடுத்தேன். உன்னை என் மனதில் இருந்து மறந்துவிட்டேன். உனக்கும் அந்தக் கம்பஸில் படித்தவர்களைப் பார்க்கும் போது நான் வெறும் பட்டிக்காட்டான் என்ற நினைப்பு ஏற்படாமலா இருந்திருக்கப் போகிறது. சரி அதிகமாக எழுதிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லை. பழகிய நாட்களை கனவாக எண்ணி மறந்துவிட்டேன். அடுத்த வாரம் எனக்குத் திருமணம். உன் நலனுக்கு என் பிரார்த்தனைகள்."

இப்படிக்கு.....
ஆகாஷ்.

வாசித்து முடித்த கவிதாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.



நிர்மலா

'சே இந்த சந்தேகக்காரனை நம்பித்தானா இத்தனை வருடங்களும் ஆசைகளை வளர்த்துக் காத்துக்கிடந்தாள் இந்த அப்பாவி!' என மனதில் எண்ணி வேதனைப்பட்டாள் கவிதா.

வழமையாக படிப்பு, பட்டம் என்றெல்லாம் கிடைத்தவுடன் பழைய உறவுகளெல்லாம் மறந்து கொம்பு முளைத்து விட்டதைப் போல சிலர் மாறிவிடுவார்கள். ஆனால் விதிவிலக்காய் நடந்து கொண்ட ரம்யாவுக்கா இந்த நிலை ஏற்பட வேண்டும்?

குழந்தையைப் போல குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்த ரம்யாவை நோக்கி, "பிளீஸ் இதை ஒரு தோல்வியா நினைச்சு, நீ வேதனைப்படுவதில அர்த்தமே இல்லடி, உன்னோட நல்ல மனசை புரிஞ்சிக்க முடியாத அவனை நினைத்து ஏன் கவலைப்படவேணும்? எல்லாம் நன்மைக்கேன்னு நினைச்சு மனசை தேத்திக்கொள்ளு!" என ஆறுதல் கூறினாள் கவிதா.

---

# புதுவித பயணம்...

யாழ்ப்பாணத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது என அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்துக்கும் ஏனைய இடங்களுக்குமான தரைப்பாதை இன்னும் மூடப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

கப்பல் மூலமும் விமானம் மூலமும்தான் மக்கள் யாழ் பயணஞ் செய்கிறார்கள். கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டு பல மாதங்கள் தாண்டிவிட்டது. இந்நிலையில் வரையறுக்கப் பட்ட பயணிகளை 'லையன் எயார்' விமான சேவையினூடாக அனுப்பிவைக்கிறது.

விமான பயணச்சீட்டைப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் மக்கள் காத்துக்கிடந்தனர்.

வரிசையின் இறுதியில் ஒட்டிக்கொள்ள அவனுக்கு மனசு இடந்தரவில்லை. இறுதியில் நின்றால் உள்ளே செல்லமுடியாது என்பது அது அவனுக்குத் தெரிந்துவிட்டது. அதனால் குழம்பிப்போன தனேஸ் தனது அவசரத்தை வாயில் காவலரிடம் கூறி, முன்னதாகவே உள்ளே செல்ல அனுமதி கேட்டான்.

முன்பே வரிசையில் வந்து நிற்பவர்கள் உள்ளே விட அனுமதிக்கமாட்டார்கள் எனக் கூறப்பட்டு அவனது கோரிக்கை நிராகரிக்கப் பட்டது.

சோர்வுடன் வரிசையின் இறுதியில் சேர்ந்து கொள்ளத் திரும்பியவனை, "தம்பி! இங்கை வாரும்!" என வரிசையில் நின்ற ஒருத்தர் அழைத்தார்.

முன்பு அறிமுகமில்லாத அந்நபரிடம் வந்தான்.

"பிளேன் ரிக்கற் ஒக்கே பண்ணவா?" எனக் கேட்டார்.

"ஆம்" என தலையசைப்பால் பதிலளித்தான்.

"இந்த இடத்தில் உம்மை நிற்க விடுகிறன். நீர் எவ்வளவு தருவீர்?" எனக் கேட்டார்.

தனேஸ் இதை எதிர்பார்க்கவில்லை.

சந்தோசத்துடன் ஐந்நூறு ரூபாவை அவர் கைக்குள் திணித்துவிட்டு, அவரது இருபத்தியெட்டாவது இடத்தில் தனேஸ் நின்றான்.

விமான பயணத்திற்கு போட்டி நிறைந்து காணப்படுவதால் பயணச் சீட்டைப் பெறுவதற்கு நிறையப் பேர் காத்திருப்பார்கள். இதனால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களே உள்ளே எடுக்கப்படுகிறார்கள். இதன் முன்பாகவே வரிசையில் வந்து நிற்பவர்கள் தங்களது இடத்தை யாருக்காவது- காசைப் பெற்றுக்கொண்டு கொடுப்பது பலருக்கு இப்போது தொழிலாகி விட்டது.

தனேஸ் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். உயர்தர கணித பிரிவில் சித்திபெற்று



பொறியியல் துறையில் பட்டப் படிப்பைத் தொடர பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு வந்து மூன்றாம் வருடத்தில் இருக்கிறான்.

தனேஸ் கடைசியாக ஊர்போய் வந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன. விடுமுறைகள் கிடைத்தும் போக்குவரத்துச் சீரின்மைகளால் ஊர் செல்ல முடியாமையினால் பெற்றோர், சகோதரங்கள், சுற்றத்தார் யாரையும் பார்க்காமல் விடுமுறைகளைக் கண்டியிலேயே கழித்திருக்கிறான். உற்றார் உறவினர்களைப் பார்க்காமல் இருந்தவனுக்கு-

"தனேஸ்! அப்பாவுக்கு வருத்தம் கடுமையாக இருக்கிறது. உன்னைப் பார்க்க ஆசையாய் இருப்பதாகக் கூறுகிறார். உடனடியாக வரவும்!" என மாமா தொலைபேசி மூலம் நேற்றுக் கொடுத்த செய்தியால் துவண்டுபோன தனேஸ், 'எப்படியும் ஊர் போய்விடவேண்டும்!' என்ற வேகத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

வரிசை மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. நீண்டநேரம் கழிந்தபின் உள்ளே சென்றான்.

"அப்பாவுக்கு வருத்தம் கடுமையாக இருக்குது என்று சொல்லி உடனடியாக ஊர் வரச் சொல்லியிருக்கினம். அதுதான் உடனடியாக பிளேனிலை போறதுக்கு இடந்தரவேணும்!" என தனேஸ் தன்னிலை விளக்கினான்.

மு.கலை

"பிளேனிலை போக விரும்பினால் அவரவர் இருக்கிற பொலிஸ் பிரிவிலை நீங்க விண்ணப்பப் படிவத்தைக் கொடுக்க வேணும்! அவை எங்களுக்கு அனுப்பி வைப்பினம். அதற்குப்பிறகு நீங்க ரிக்கற் ஓகே செய்துவிட்டுப்போக முடியும். இப்போது கப்பல் பயணம் தடைப்பட்டிருக்கிறபடியாலை முழுப் பேரும் பிளேனிலைதான் போறபடியால் விண்ணப்பிச்சு இரண்டு மாதத்துக்குப் பிறகுதான் போகமுடியும்!" அதிகாரியின் பதில் தனேஸுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"அவசரமில்லாவிட்டால் நீங்க சொல்லுகிற மாதிரிப் போகமுடியும். எனக்கு அவசரமாகப் போகவேண்டும்."

"தம்பி! நான் சொன்னதுதான் நடைமுறை. உங்க அப்பாவுக்குச் சுகமில்லை என்று ஊரிலையிருந்து 'ரெட்குறோஸ்' செய்தி வந்திருந்தால், அதை நீங்க ஆதாரமாகத் தர, உடனடியாக உங்களுக்கு அனுமதி பெறமுடியும்! ஆனால் உங்கட வாய்ச் சொல்லை வைச்சுக் கொண்டு உடனடியாக நாங்க இடந்தந்தால் பிறகு ஏதாவது பிரச்சனை வரும்போது நாங்க எப்படிப் பதில் சொல்லமுடியும்?"

இதற்கு மேல் என்ன செய்யமுடியும். மௌனமாக இருந்தான்.

"நீங்க உங்க விண்ணப்பத்தைத் தந்துவிட்டு உங்க பொலிஸ் பிரிவிலையும் ஒன்றைக் கொடுத்துவிட்டு 'ரெட் குறோ'சிலை ஒரு லெற்றர் எடுத்துக்கொண்டு வாங்க. பயண ஒழுங்கை செய்துதர முயற்சிக்கிறோம்!"

இனி எது கதைத்தும் பிரயோசனம் இல்லை எனப் புரிந்து கொண்டவன் எழுந்து வெளியே வந்தான்.

எப்படியாவது ஊர் போய்ச் சேர்வது என்ற முடிவுடன் கண்டிக்கு வந்து, விடுதியில் சேர்ந்துகொண்டான்.

அவன் நினைவில் அப்பா நிறைந்து போயிருந்தார். அவனது அப்பா கடுமையான உழைப்பைக் கொண்ட விவசாயி. தனேஸின் அப்பா சிறப்பாகப் படித்துக் கொண்டிருந்த போது அவரது அப்பா இறந்துபோக, வறுமையின் காரணமாக தனேஸின் அப்பா படிக்க முடியாமல் போனது. தன்னைப் போல் தனது பிள்ளைகள் படிக்காமல் விடக்கூடாது என்பதற்காகக் கடினமாக உழைத்தமையால் ஏற்பட்ட தாக்கம்தான் அவரை நோயாளி ஆக்கியிருந்தது.

"தனேஸ்! உனக்கு கோல் வந்திருக்கு," என சகமாணவனின் குரல் வெளியில் கேட்டது.

தளர்ந்த நடையுடன் வந்து ரிசீவரைத் தூக்கி, "ஹலோ! தனேஸ் பேசுறேன்!" என்றான்.

மறுமுனையிலிருந்து வந்த செய்தி அவன் காதுக்குள் ஈட்டியாய்ப் பாய்ந்தது.

அவன் அப்பாவின் உயிர், உடலை விட்டுப் பிரிந்து விட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



# கண்களே கண்களே

## இலக்கிய நயம்

ஆரம்பமாவதும் கண்ணுக்குள்ளே
காதல் ஆரம்பமாவதும்
கண்ணுக்குள்ளே!

கண் ஒன்று
புறக் கண்!
கண் இன்னொன்று
அகக் கண்!

புறக்கண் இல்லாவிடினும்
மனக்கண்ணால் பார்க்கலாம்!

ஆகவே காதல்
ஆரம்பமாவது கண்ணுக்குள்ளே!

காதல் யுத்தத்தில்
கண்தான் ஆயுதம்!

காதல் யுத்தத்தில்
கண்தான் போராளி!

காதல் யுத்தத்தில்
கண்தான் உளவாளி!

காதல் யுத்தத்தில்
கண்தான் துரோகி!

கண்கள் எப்படி
துரோகியாகும்?

உள்ளத்திற்குள்
ஒளிந்து கிடப்பதை
கண்கள் காட்டிக் கொடுப்பதுண்டு!
காட்டிக் கொடுப்பது
துரோகம்தானே!

ஆனால், இங்கே
துரோகங்கள் மன்னிக்கப்படும்!

காதல் யுத்தத்தில்
காட்டிக் கொடுப்புகளுக்கு
வரவேற்பு இருக்கிறது!

முத்தமிடும்போது
துடிக்கும் உதடுகள்
உள்ளூறும் விருப்பத்தை
காட்டிக் கொடுக்கும்!

கட்டித் தழுவிட
சிலிர்க்கும் தேகம்
உள்ளிருக்கும் மோகத்தை
காட்டிக் கொடுக்கும்!

ஆங்காங்கே
கை தொட்டு தழுவிட
பீறிடும் அனல் மூச்சு
தகிக்கும் தாபத்தை
காட்டிக் கொடுக்கும்!

கனியிதழ் சுவைக்கையில்
கண்களை மூடினும்
படபடக்கும் இமைகள்
காட்டிக் கொடுக்கும்!

எடுத்துச் சொல்லவோ
ஆசைகளை
அடுக்கிச் சொல்லவோ
முடியாது என்பதால்
காட்டிக் கொடுப்புக்கு
காதல் யுத்தத்தில்
முதல் மரியாதை!

முத்தச் சத்தமும்
காட்டிக் கொடுப்புத்தான்!
முனகல் சத்தமும்
காட்டிக் கொடுப்புத்தான்!
மூச்சுவிடும் ஓசையும்
காட்டிக் கொடுப்புத்தான்!
முத்தான வியர்வையும்
காட்டிக் கொடுப்புத்தான்!
தோளும், மாரும்
பொங்கித் தணிவதும்
காட்டிக் கொடுப்புத்தான்!

தளரும் மேனியும்
துவளும் இடையும்
புரளும் கால்களும்
காட்டிக் கொடுப்புத்தான்!

காதல் யுத்தம்
உரைப்பதால் அல்ல,
ஊகிப்பதாலும்
உணர்வதாலுமே
உக்கிரம் பெறுகிறது!

ஊகிக்க
தகவல்கள் தேவை!

உணர
அசைவுகள் தேவை!

இரண்டுக்கும்
காட்டிக் கொடுப்பு
தேவை! தேவை!

காட்டிக் கொடுப்பின்
தலைமைத் தளபதி
கண்தான்! கண்தான்!

கண்
தொடக்கி வைத்ததை
ஏனைய அங்கங்கள்
தொடர்ந்து செய்கின்றன!

ஆனாலும்
கண் தனித்துவமானது!

காதல் யுத்தத்தின்
உற்சாக வேளையில்தான்
ஏனைய அங்கங்கள்
பங்காளிகளாகின்றன!

கண் மட்டும்தான்
காதல் யுத்தத்தின்
சோக வேளையிலும்
பங்குகொள்கிறது!

காதல் வெற்றியில்
களிப்புக் கொள்ளும் கண்கள்,
காதல் தோல்வியில்
நீர்வீழ்ச்சியாகின்றன!

அழைப்பதும் கண்கள்தான்
அழுவதும் கண்கள்தான்
வெட்கிப்பதும் கண்கள்தான்
விரகத்தில் எரிவதும் கண்கள்தான்
துக்கிப்பதும் கண்கள்தான்!

இங்கே பாருங்கள்
ஒருத்தி இருக்கிறாள்.

காதல் யுத்தத்தில்
கரைகாணத் துடிக்கிறாள்!

ஒரு கை வீசினால்
ஓசையா எழும்?

## ரசிகன்

### தருவது



எதிரி இல்லாத
யுத்தம் எங்குள்ளது?

பகை கொண்ட
எதிரிகள் மோதினால்
நிஜ யுத்தம்!

பிரியமான
எதிரிகள் மோதினால்
காதல் யுத்தம்!

இவள் தன்
பிரியமான எதிரியை
பிரிந்துவிட்டாள்!

வந்துவிடுவான்தான்
யார் இல்லையென்றது,
ஆனால், மனது
வருந்துகின்றதே!

காற்றுப் பட்டாலும்
புழுக்கம் தீரவில்லை!
குளிரடித்தாலும்
வெப்பம் தாளவில்லை:

புனலிடை குளித்தாலும்
அனல் சூடு தணியவில்லை!

வழியைப் பார்த்திருக்கும்
விழிகள் மூடவில்லை!
உறவைப் பிரிந்ததினால்
உறக்கம் நெருங்கவில்லை!

தழுவிக் கொள்ளாமல்
மேனி ஆறவில்லை!
உருகும் மெழுகாக
உள்ளம் மாறியதே!

ஊருக்குத் தெரியாமல்
உள்ளம் அழட்டும் என
சோகத்தை
ஒளித்துவைத்தாள்.

வெளிக்கு புன்னைக்க
உதடு ஒத்துழைத்தது!
களிப்பாய் கதைபேச
குரலும் ஒத்துழைத்தது!
கைவீசி நடக்க
கரமும் ஒத்துழைத்தது!

அன்ன நடை போட
கால்களும் ஒத்துழைத்தது!

ஆனால் அவள்
கண்கள் மட்டும்
காட்டிக் கொடுத்தன!

உள்ளிருந்த சோகத்தை
கண்கள்
ஏந்தி நின்றன!

அறையப்படும்
பறைபோல-ஊரறிய
சோகத்தை
அறிவித்துவிட்டன
கண்கள்!

கண்கள்
பொய் சொல்லாது!
கண்கள்
கபடம் செய்யாது!

கண்கள்
இன்பத்தில் சிரிகின்றன.
கண்கள்
துன்பத்தில் அழுகின்றன!

உள்ளதை உள்ளபடி
காட்டும் கண்ணாடி
கண்கள்!
உள்ளத்தையும் உள்ளபடி
காட்டுவதும் கண்களே!

"மறைபெறல் ஊரார்க்கு
—அரிதன்றால்—எம்போல்"
அறைபறை கண்ணா ரகத்து"
அதிகாரம்- 118, குறள்- 1180

---

"எத்தனை இருக்கிறது என்பதை நீர் சரியாகச் சொல்லிவிட்டால், மூன்றையுமே உமக்குத் தந்து விடுகிறேன்!"

நண்பர் யோசித்துவிட்டு, "நான்கு" என்று கூறினாராம்!

✉ ✍

★ சிங்களத்தில் எழுதப்பட்ட சுற்றறிக்கைக்கு பதில் எழுதாத ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டனரே?

ஜெ. பாஸ்கரன், கண்டி.

'பயங்கரவாதிகள்' என்று உள்ளே பிடித்து போடாமல் விட்டார்களே! அதற்கு நன்றி சொல்லவேண்டும். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துப் போராடிய கட்சிகூட வாயை மூடிக்கொண்டு இருக்கிறது. அக் காலப் போராளிகளும் கப்சிப்! தொண்டாவும் துடிக்கவில்லை! மொத்தத்தில், தமிழ்க்கட்சிகளின் நோக்கம்தான் என்ன?!

✉ ✍

★ தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றியா? தோல்வியா?

கே. ராஜப்பா, நுவரெலியா.

வெற்றி! வெற்றி! ஆனால் தொழிலாளருக்கல்ல!!

✉ ✍

★ கடைசிக் காலத்தில் பெற்றோருக்கு உதவுவது ஆண்பிள்ளையா? பெண்பிள்ளையா?

எம். மீரா, மட்டக்களப்பு.

கைத்தடி!

✉ ✍

★ கடி ஜோக் ஒன்று கிடைக்குமா?

பி. சிற்றம்பலம், கொழும்பு-06.

"உருகும் புலவர் யார்?"
"அபிராமி 'பட்டர்'"

✉ ✍

★ தற்போது முதலிடத்தில் உள்ள குடும்பப் படம் எது?

சி. ரமா, தெகிவளை.

'காதலுக்கு மரியாதை!'

✉ ✍

★ கலைஞர்கள் அரசியலில் ஈடுபட்டால் பிரகாசிக்க முடியுமா?

உ. ரவிக்குமார், குருநாகல்.

நியூகேஸ்ட்ல் என்னும் பிரபு ஒருவர் இங்கிலாந்தில் இருந்தார். லோரன்ஸ் டர்ன் என்பவர் ஒரு எழுத்தாளர். அவரிடம் பிரபு கூறினார்:

"எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் எல்லாம் கற்பனை உலகில் இருப்பவர்கள். யதார்த்த வாழ்க்கைக்கு ஒத்துவராதவர்கள். அவர்கள் வியாபாரம் அரசியல் போன்ற துறைகளில் திறமையோடு செயற்பட முடியாது!" என்று விட்டு கிண்டலாகச் சிரித்தார்.

உடனே எழுத்தாளர் அந்த பிரபுவைப் பார்த்து நெத்தியடியாகச் சொன்னார்:

"கழுதைகள் செய்யும் வேலையை குதிரைகள் செய்ய முடியாது என்பதல்ல; குதிரைகள் அதைச் செய்ய விரும்புவதில்லை என்பது தான் உண்மை!"

✉ ✍

★ பெரிய நடிகர்களின் படங்கள் (தமிழில்) தோல்வியை தழுவுவது ஏன்?

எம்.எம். முஸம்மில், மருதானை.

நல்ல கதையைத் தழுவாததும் ஒரு காரணம். ஒன்றுக்கு இரண்டாக கதாநாயகிகளை நடிக்கவைத்து தழுவினால் போதும், படம் ஓடும் என நினைக்கிறார்கள். படம் ஓடத்தான் செய்கிறது, ஆம்- திரையரங்கை விட்டு!

✉ ✍

---

(ஸ்போர்ட்ஸ்)

## "என்னைச் சுற்றி இரசிகைகள்"

**இந்தி நடிகர் சுனில் ஷெட்டி அரவிந்த டி சில்வாவின் பரம இரசிகர். அவர் அரவிந்தவை பேட்டி காண்கிறார்.**

**சுனில்:** உங்களது இரசிகனான நான் உங்களைப் பேட்டி எடுப்பதில் கொள்ளை மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் முதன் முதலாக எப்போது மட்டை பிடித்தீர்கள்?

**அரவிந்த:** சரியாக நினைவில்லை. வீட்டில் ஒரு புகைப்படம் உண்டு. அதில் நான் குழந்தையாக இருக்கும்போது மட்டை பிடித்து நிற்கிறேன். 7 வயதில் இருந்தே ஆர்வத்துடன் கிரிக்கெட் விளையாடி வருகிறேன். எனது தந்தைதான் என்னை ஊக்கப்படுத்தினார். தாயார் எப்போதும் படி படி என்று கூறிக்கொண்டே இருப்பார்.



**சுனில்:** யாரைச் சிறந்த பேட்ஸ்மனாகக் கருதுகிறீர்கள்?

**அரவிந்த:** ரிச்சர்ட் ஹாட்லி சிறந்த பேட்ஸ்மன் என நினைக்கிறேன். பிரையன் லாரா, சச்சின் டெண்டுல்கர், சயீட் அன்வர், ஜெயசூரிய, மார்க் வோவ் ஆகியோரும் சிறந்த விளையாட்டு வீரர்கள்தான்.

**சுனில்:** எந்த அணிக்கு எதிராக அதிக 'ரிஸ்க்' எடுத்து விளையாடுகிறீர்கள்?

**அரவிந்த:** தென்னாபிரிக்கா. இதை அடுத்து அவுஸ்திரேலியாவைக் கூறலாம்.

**சுனில்:** உங்களால் மறக்க முடியாத போட்டி எது?

**அரவிந்த:** உலகக் கோப்பைப் போட்டியின் போது நடந்த அரையிறுதிப் போட்டியைக் கூறலாம். அப்போது இந்தியாவுக்கு எதிராக விளையாடினோம். அப்போது சச்சின் டெண்டுல்கர் புயல்போல விளையாடி ரன்களைக் குவித்தார். அவரது விக்கெட்டைப் பறித்தால்தான் இலங்கை வெற்றியைப் பற்றி நினைக்க முடியும் என்ற நிலை உருவானது. ஒருவழியாகப் போராடி டெண்டுல்கரை வீழ்த்தினோம். பிறகு மளமளவென்று இந்திய அணியின் விக்கெட்டுக்கள் பறிபோயின. நாங்கள் வெற்றி பெற்றோம்.

**சுனில்:** சில வருடங்களுக்கு முன் கிரிக்கெட் உலகில் இலங்கை குழந்தையாக இருந்தது. இன்று உலகின் சிறந்த அணியாகத் திகழ்கிறதே. இது எப்படிச் சாத்தியம்?

**அரவிந்த:** வேறு என்ன காரணம்? கடின உழைப்புத்தான். கடந்த பத்தாண்டு உழைப்பின் பலன் தான் இது. எங்களது அணியின் பயிற்சியாளர் அலெக்ஸியோவுக்குத் தான் இந்தப் பெருமை சேர வேண்டும். அவர் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் எங்களை ஊக்கப்படுத்தினார்.

**சுனில்:** இந்திய கிரிக்கெட் வீரர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**அரவிந்த:** கபில் தேவும், சுனில் கவாஸ்கரும் இந்திய அணிக்காக நிறையச் செய்துள்ளனர். முகமட் அஸாருதீன் உண்மையிலேயே திறமையானவர். சச்சின் டெண்டுல்கர் மிகவும் அருமையானவர். ராகுல் ட்ராவிட் ஆற்றல் மிக்கவர். ஸ்ரீநாத் சிறந்த பந்துவீச்சாளராக உருவாகி வருகிறார்.

**சுனில்:** ஒருநாள் போட்டிகளில் இந்தியா மோசமாக விளையாடுவதாக பொதுவான அபிப்பிராயம் உள்ளதே?

**அரவிந்த:** எங்கே தோற்றுவிடுவோமோ என்ற பயத்தில் ஆடுவதால், வீரர்களின் திறமை வெளிப்படுவதில்லை.

**சுனில்:** உங்களை 'லேடிஸ்மன்' என்று அழைக்கிறார்களே. உங்களைச் சுற்றி எப்போதும் அழகான பெண்கள் காட்சி தருகிறார்களே!

**அரவிந்த:** (முகபாவம் மாறுகிறது) இல்லையில்லை. நான் 'லேடிஸ்மன்' இல்லை. என்னைச் சுற்றி இருப்பது எனது இரசிகைகள்தான்.

**சுனில்:** இந்தியாவில் உள்ள இரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**அரவிந்த:** இதேபோல் எப்போதும் அன்பாக இருங்கள். என்னால் இயன்றவரை சிறப்பாக ஆடுவேன். ▫

---

★ அமெரிக்க ஜனாதிபதிகள் 'அந்த' விஷயத்தில் படுவேகம் போல் இருக்கிறதே?

ஏ. நீலன், கம்பஹா.

அமெரிக்காவின் புகழ்பூத்த ஜனாதிபதிகளில் ஒருவர் வோஷிங்டன். அன்னாரின் தத்துவம் என்ன தெரியுங்களா?

"எப்போது பெண் நம்மைச் சபலப் படுத்தி, விலக்கப்பட்ட கனியைச் சுவைத்து விட்டோமோ, அதன் பின்னர் பசியைக் கட்டுப்படுத்திக் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை."

✉ ✍

★ 'வை. கோபாலசாமி வாழ்க' என்று தொண்டர்கள் கோஷமிட்டதால் ஜெயலலிதா கோபப்பட்டாராமே! அது ஏன்? பொறாமைக் குணமா?

பி. ஜெயராஜ், கொழும்பு-10.



25 ஆண்டுகளுக்கு முன்னர் 'பொம்மை' சினிமா இதழில் ஜெயலலிதா கூறியிருப்பதைப் பாருங்கள்:

"பொதுவாகவே என்னிடம் ஒரு குணம் உண்டு. எதிலும் நான்தான் கொடி கட்டிப் பறக்க வேண்டும். விளையாட்டாக இருந்தாலும் சரி, படிப்பாக இருந்தாலும் சரி, நானே முதலில் வரவேண்டும் என்ற சுபாவம், என்னுடன் இயற்கையிலேயே பிறந்தது!"

✉ ✍

★ முட்டாள்களை கண்டுபிடிப்பது எப்படி?

செல்வி கி. விஜயகுமாரி, மாத்தளை.

ஒருவர் மூட்டை ஒன்றை சுமந்து கொண்டு தெரு வழியாகப் போனார். அப்போது எதிரே வந்த நண்பர் ஒருவர் அவரைப் பார்த்து, "மூட்டைக்குள் என்ன வைத்திருக்கிறீர்?" என்று கேட்டார்.

அதற்கு மூட்டை வைத்திருந்தவர்: "பூசணிக்காய் வைத்திருக்கிறேன்."

"எத்தனை வைத்திருக்கிறீர்?" என்று கேட்டார் நண்பர்.

மூட்டைக்காரர் சொன்னார்:

---

## சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! உண்மையைச் சொல்லுங்கள், இந்தியாவில் யாருடைய ஆட்சி வந்தால், இங்கு நமக்கு சாதகம்?

சி. நவநீதன், வவுனியா.

பாரதிய ஜனதா!

✉ ✍

★ இரண்டு பிள்ளைகளுக்கு மேலே இருந்தால் தேர்தலில் நிற்கமுடியாது என்று சட்டம் வரும் என்கிறதே பாரதிய ஜனதா?

கே.எம்.ஹனீபா, மூதூர்.

வாஜ்பேயி திருமணமே செய்யப்போவதில்லை என்பது திட்டவட்டமாக தெரிகிறது!

✉ ✍

★ தமிழ் நாட்டில் ஜெயலலிதா கட்சி வென்றால் என்னாகும்?

எஸ். குமார், திருமலை.

கலைஞர் ஆட்சியை டிஸ்மிஸ் செய்யுமாறு கோரி குறைந்தது வாரம் ஒரு அறிக்கையாவது வெளியிடுவார்.

✉ ✍

★ சிந்தியா! கோயம்புத்தூரில் நடைபெற்ற குண்டுவெடிப்புப் பற்றி என்ன நினைக்கிறீர்?

பா. வளர்மதி, கல்லாறு.

குட்டித் துப்பாக்கியைக் கண்டால்கூட விடுதலைப் புலிகள் கொடுத்ததாக இருக்கலாம் என்று குழந்தைத்தனமாக கூறிக்கொண்டிருந்தன தமிழகத்தின் சில பத்திரிகைகள். ஆயுதம் அங்கு வந்ததே ஈழப் போராளிகளால்தான் என்று அப்பத்திரிகைகளுக்கு தப்பான எண்ணம். ஈழப் போராளிகள் ஏ.கே.47.ஐ தொட முன்னரே இந்தியாவில் பல மாநிலங்களில் தீவிரவாதிகளிடம் ஏ.கே.47 அறிமுகமாகிவிட்டது. தற்போது கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு வெடி மருந்துகளும் ஆயுதங்களும் எந்தளவுக்கு அங்கு மலிந்திருக்கின்றன என்பதற்கு தக்க சாட்சியாகிவிட்டது.



★ 'ரேவதி' நாடகம் ரூபவாஹினியில் நிறுத்தப்பட்டது ஏன்?

எஸ். சரோஜா, கொழும்பு-11.

அலட்சியம்தான்! அதனை மறைக்க ரூபவாஹினித் தமிழ்ப் பிரிவுத் தலைவர் கூறிய காரணம் சொதப்பல்! கசட் முழுவதும் வரவில்லையாம். அதுதான் தாமதமாம்! யாருக்கு சொல்கிறார்கள் கதை? அப்படியானால் அதனை நாடகம் ஒளிபரப்ப வேண்டிய தினத்தன்று அறிவித்திருக்கலாமே! வன்னிய குலம் வக்காலத்து வாங்குகிறார்! கடந்த ஞாயிறுகூட 'சீதா' என்ற நாடகத்தைப் போட்டு பேச்சுத் தமிழை குதறிக் கொண்டிருந்தார்கள்!

✉ ✍ ▫



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 123

# தம்பியரோடு தரணி காத்தான்

இராஜகுமாரன்

இராமபிரான் தனக்குப் பதிலாக பதினான்கு ஆண்டுகள் கோசல நாட்டை, எக்குறையுமில்லாமல் ஆட்சி புரிந்து வந்த தனது தம்பி பரதனிடம் முக்கியமான ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தார். இப்பினும் இந்த மண்ணில் பிறந்தமைக்காக இங்கு செய்ய வேண்டியிருந்த எஞ்சிய பணிகளில் கவனம் செலுத்தினார்.

பாரத நாட்டில் அப்போதிருந்த ராஜ்ஜியங்களில் தலைசிறந்து விளங்கியது கோசல நாடு. அந்நாட்டின் மாமன்னன் என்பதனால் பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதற்குரிய ஆலோசனைகளைப் பெற, நாளாந்தம் பல மன்னர்களும் பிரமுகர்களும் அயோத்தி மாநகரை நாடி வந்து கொண்டே இருந்தனர். இவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கே இராமபிரானுக்கு நேரம் போதவில்லை. ஆகவே நாட்டின் அரச பரிபாலனத்தைச் செல்வனே நடத்துவதற்குரிய பொறுப்புகளை அநுபவசாலியான பரதனிடம் ஒப்படைத்தார். பரதனுடன் இலக்குமணனும் சத்துருக்கனும் இணைந்து செயலாற்றினர்.

மாமன்னன் என்ற மகுடத்தை ஏற்றதும், மகுடாபிஷேகம் காண வந்திருந்த அனைவருக்கும் நன்றியறிதலைக்கூறி, அவரவர்க்கு ஏற்ற பரிசில்களை வழங்கி, வழி அனுப்பி வைத்தார்.

இராமபிரானின் வலது பாதத்தைத் தொட்ட வண்ணம் வெகுநேரமாகவே இருந்துவிட்ட ஆஞ்சநேயர்மீது அண்ணலின் பார்வை விழுந்தது. அரியாசனத்திலிருந்து எழுந்து ஆஞ்சநேயரின் இருதோள்களையும் தனது தாமரை இதழ்கள் போன்ற கைகளால் பற்றி மேலே தூக்கிவிட்டார். வாரி அணைத்து ஆரத்தழுவிக் கொண்டார்.

இக்காட்சியை கவிச்சக்கரவர்த்தி எமக்குக் காட்டும் பாங்கினைப் பார்ப்போம்!

மாருதி தன்னை ஐயன்
மகிழ்ந்து இனிது அருளின் நோக்கி
ஆர் உதவிடுதற்கு ஒத்தார்
நீ அலால் அன்று செய்த
பேருதவிக்கு யான் செய்
செயல் பிறிது இல்லை பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய்
பொருந்துறப் புல்லுக என்றான்.
(யுத்த காண்டம்)

**பொருள்:**

*இராமபிரான், மாருதியான அனுமனை மகிழ்வுடன் இனிமையான பார்வையால் நோக்கி, "உன்னைப் போல் உதவுவதற்கு வேறு எவர்தான் உள்ளனர்? அன்று நீ செய்த உதவிக்கு கைமாறு எதுவும் இல்லை. போரிலே உனக்கு உதவுகின்ற உன்னுடைய அணிகலன்களைப் பூண்ட தோள்கள் என் உடலில் நன்கு பதியுமாறு என்னைத் தழுவிக் கொள்வாயாக!" என்று சொன்னார்.*

தனது கழுத்தை அணி செய்த அழகிய பெரிய முத்துமாலையை எடுத்து, மிதிலை மாநகரைவிட்டு தன்னுடன் வந்து இணைந்து கொண்ட இலக்குமிதேவியின் அவதாரமான சீதாப்பிராட்டியாரிடம் தந்தார். "இம்மாலையை உனக்கு விருப்பானவருக்குக் கொடுப்பாயாக!" என்று தனது சைகையினாலே, ஆஞ்சநேயரைச் சுட்டிக் காட்டினார். பிராட்டியாரும், தன்னுடைய துயரம் தோய்ந்த காலத்தில் தோன்றாத் துணையாய் தோன்றி உதவி புரிந்த ஆஞ்சநேயரின் கழுத்தில் அந்த முத்து மாலையை அணிவித்தார்.

அடுத்து கரடிகளின் தலைவனான ஜாம்பவனை அழைத்து வெகுமதிகளை அளித்தார் இராமபிரான், இலங்கைப் போர்க்களத்தில் தீய அரக்கரைத் துவம்சம் செய்த நீலான், சதவலி, கேசரி, நளன், குமுதன், தாரன், பனசன் ஆகியோரையும் அழைத்து பரிசில்களை இராமபிரான் கொடுத்தார்.

ஆஞ்சநேயருக்கு முன்னதாகவே சூரியன் மகன் சுக்கிரீவனையும் வாலியின் மைத்தன் அங்கதனையும் அழைத்து தனது நன்றியறிதலையும் தெரிவித்து, அளவிட முடியாத அணிமணிகளையும் படைக்கலங்களையும் பரிசாகத் தந்தார். சிருங்கபேரம் எனும் கங்கைப் பிரதேசத்துக்கதிபனான குகனையும் அழைத்து அளவிடற்கரிய பல பொருட்களைத் தந்தார்.

## விபீடணர் வேண்டியது?

இலங்காதிபதியான விபீடணனுக்கு ஈடிணையில்லாத பண்டங்களையும் தந்து, இலங்கை சென்று சிறப்புடனும் நன்னெறி பிறழாமலும் ஆட்சி செலுத்துமாறு பல அறிவுரைகளைக் கூறினார். இருப்பினும் இராமபிரானிடம் வேறு எதையோ எதிர்பார்ப்பவர் போன்று விபீடணர் காணப்பட்டார். "இலங்காதிபதியே! தங்களுக்கு எது வேண்டுமோ, தயங்காமல் கேளுங்கள்; தருகிறேன்!" என்றார்.

"பிரபு தாங்கள் வணங்கும் ஸ்ரீரங்க விமானம்தான் எனக்கு வேண்டும். அனந்த சயனனான அந்த மூர்த்தியை நான் எனது நாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்கு அம்மூர்த்திக்கு அழகுமிகு ஆலயம் அமைத்து, என் நாட்டு மக்கள் அனைவரும் உய்வதற்கு வழி தேட ஆசைப்படுகிறேன். தந்தருள்வீர்களா?" என்று விபீடணர் தன் இரு கைகளையும் ஏந்திக் கேட்டார்.



இராமபிரான் புன் முறுவல் பூத்தவராக அரியணையை விட்டிறங்கினார். வீபீடணரின் வலது கையைப் பற்றியவராக அரண்மனையிலுள்ள தனது பிரார்த்தனை மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்.

ஆதிசேடனின் மீது, பாற்கடலில், திருமகள் அருகிருக்க பள்ளிகொண்டிருந்த திருவரங்க நாதரின் தங்கவிக்கிரகம் ஒளி உமிழ்ந்த வண்ணம் இருந்தது. அதன் முன் இராமபிரான் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். தன் இருகைகளாலும் அதனை எடுத்து விபீடணரின் இரு கைகளிலும் வைத்தார். அளவிடமுடியாத ஆனந்தப் பெருக்கில் விபீடணர் கண்ணீர் உகுத்தார். அதே கண்களாலேயே இராமபிரானிடம் விடை பெற்றுக்கொண்டு, காத்து நின்ற புட்பக விமானத்தில் போய் ஏறிக்கொண்டார். அந்த விமானம் நின்ற இடம்வரை இராமபிரான் வந்து விபீடணருக்கு விடைகொடுத்தார். அவருடன் சீதாப்பிராட்டியார், இலக்குமணன், பரதன், சத்துருக்கன் ஆகியோரும் வந்து சேர்ந்துகொண்டனர்.

## "எங்கள் தலைவன்"

மேலேழு கீழேழு ஆகிய பதினான்கு உலகங்களிலுள்ளவர்கள், "எங்கள் தலைவன்" என்று ஏற்றிப் போற்றி ஏவல் செய்ய தனது தம்பிமாரோடு கோசலநாட்டை ஆட்சி புரிந்தார், பாற்கடலில் அனந்தசயனம் செய்யும் நிலையை விட்டு அயோத்தியில் அவதாரமெடுத்த இராமபிரான்.

இக்காட்சியை கம்பர் பெருமான் இவ்வாறு காட்டுகிறார்:

உம்பரோடு இம்பர் காணும்
உலகமோர் ஏழும் ஏழும்
எம்பெருமான் என்று ஏத்தி
இறைஞ்சி நின்று ஏவல் செய்ய
தம்பியரோடும் தானும்
தருமமும் தரணி காத்தான்,
அம்பரத்து அனந்தர் நீங்கி
அயோத்தியில் வந்த வள்ளல்.

## காவேரிக் கரை அமர்ந்த அரங்கன்

இராமபிரான் கொடுத்த ஸ்ரீரங்கவிமானத்தை தான் பயணம் செய்து வந்த புட்பக விமானத்தில் எடுத்துக் கொண்டு வந்த விபீடணர், தென்நாட்டின்மீது பறந்து வந்து கொண்டிருந்தபோது நாட்டின் இயற்கை வனப்புகளையும் நுகர்ந்த வண்ணம் சென்றார். அப்போது காவேரி எனும் பொன்னி நதி பொங்கிப் பொலிந்து பெருகி வருவதைக் கண்டர். அந்நதியில் இறங்கி நீராட வேண்டும் என்ற பேராசை எழுந்தமையினால் (இன்றைய) திருச்சீராப்பள்ளி அருகில் தரை இறங்கினார்.

இராமபிரானிடமிருந்து ஸ்ரீரங்க விமானத்தைப் பெறும்போது, இராமபிரான் விபீடணரிடம் ஒரு நிபந்தனை விதித்தார். "எத்தகைய அவசியம் ஏற்பட்டாலும் ஸ்ரீரங்க விமானத்தை கைகளிலிருந்து இறக்கித் தரையில் வைக்கலாகாது! இலங்கை மாநகரில் எங்கே ஆலயம் அமைக்கப்படுகிறதோ, அங்கேதான் இதனைப் பிரதிஷ்டை செய்தாக வேண்டும்!" என்பதே அந்த நிபந்தனை.

காவேரிக்கரையில் இறங்கியதும்தான் விபீடணருக்கு இராமபிரான் இட்ட ஆணை நினைவுக்கு வந்தது. ஸ்ரீரங்கவிமானத்தை கீழே வைக்கவும் இயலாது; நீராடும் ஆசையை அகற்றவும் முடியாது தவித்தார், விபீடணர்.

அந்த வேளையில்தான் ஒரு சிறுவன் காவேரியில் நீராடிவிட்டுக் கரையேறுவதை அவதானித்தார். அந்தச் சிறுவனை அழைத்து, அவன் கையில் அவ்விமானத்தைக் கொடுத்து, தான் நீராடிவிட்டு வரும்வரை கைகளிலேயே வைத்திருக்கும்படி கூறி நீருள் இறங்கினார் விபீடணர்.

காவேரியின் குளிர்ந்த நீரை விட்டு வெளியேறச் சற்றுத் தாமத மாகிவிட்டது. வெளியேறி வந்து பார்த்த போது, ஸ்ரீரங்க விமானம் தரையில் வைக்கப் பட்டிருந்தது; சிறுவன் வெகுதூரத்துக்கப் பால் போய்க் கொண்டிருந்தான். ஓடிச் சென்று விமானத்தை எடுக்க முயன்றார். எவ்வளவோ முயன்று-தனது பலம் கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தார். அவ்விமானம் அசையவேயில்லை.

விமானத்தைத் தரையில் வைத்த சிறுவன்மீது ஆத்திரமாத்திரமாகப் பொங்கியது. அவன் பின்னே ஓடிச் சென்றார். அவனும் மிக வேகமாகச் சென்று மலையின்மீது ஏறினான். அம்மலைமீதும் சிறுவனைத் தொடர்ந்து ஏறினார். மலை உச்சியில் சென்று அமர்ந்து கொண்ட சிறுவன், கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்து கொண்டான்.

விபீடணரின் ஆத்திரம் தீரவில்லை. அச்சிறுவனின் இடது கன்னத்தில் தனது வலது கையால் ஓங்கிக்குட்டினார். அவருடைய கையே வலித்தது. சிறுவன் சிரித்தான். ஓங்கார சொரூபத்தின் தோற்றம் கொண்ட பிள்ளையாராகக் காட்சி கொடுத்தான்.

விபீடணரால் எதுவுமே செய்ய முடியவில்லை. வந்த வழியே ஓடி இறங்கிச் சென்று மணலில் வேரூன்றிவிட்ட ஸ்ரீரங்கப் பெருமானின் விமானத்தின் முன் விழுந்து புலம்பினார். மயக்கமடைந்திருந்த அந்நிலையில் அவருடைய சிந்தனையில் திருமால் தோன்றினார். காவேரிக் கரையில் தானே விரும்பி அமர்ந்து கொண்டதாகவும், விமான மூலம் இலங்கை நகரிலிருந்து தினமும் தன்னை வந்து வணங்கிச் செல்லுமாறும், இலங்கை மாநகரை காவேரிக்கரையிலிருந்த வண்ணம்- தெற்கே இலங்கையைப் பார்த்து- பாதுகாத்து வருவதாகவும் திருமால் வாக்களித்தார்.

திருச்சீராப்பள்ளியில் காவேரி நதிக்கு அருகே திருவரங்கப் பெருமான் கோவில் கொண்ட இடம் ஸ்ரீரங்கம் என்ற நாமத்துடன் விளங்குகிறது.

ஸ்ரீரங்கத்தின் கர்ப்பக்கிரகத்தின் இடது புறம் விபீடண ஆழ்வாருக்கு ஒரு கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் இலங்கையில் களனி ஆற்றின் அருகே அமைந்த ரஜமகா விகாரையிலும் விபீடணருக்கும் ஒரு சிறு ஆலயம் இருக்கிறது.

திருச்சீராப்பள்ளி மலைக்கோட்டைப் பிள்ளையாரின் மூலஸ்தானத்துக்கெதிரே உள்ள மண்டபத்தில் பிள்ளையாரின் நூற்றுக் கணக்கான தோற்றங்களைக் காட்டும் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களுள் ஸ்ரீரங்கவிமானம் பற்றிய மேற்படி கதையும் ஆறு ஓவியங்களில் சித்திரிக்கப் பட்டுள்ளன.

**நிறைவுரை அடுத்தவாரம்**

**இராமாயணப் போட்டி: 121**

**சரியானவிடை:- சரயு நதி**

| | |
|---|---|
| 1. கே. தங்கேஸ்வரன், மீர்ஜாபெத்த, கொஸ்லந்தை. | 2. எம்.எம். இமாம் ஹஸன், கம்பளை வீதி, ஹெம்மாதகம. |
| 3. ஆர். முகுந்தன், குருக்கள் வீதி, பாண்டிருப்பு-02, கல்முனை. | 4. செல்வன் சி.ஸ்ரீரவி, குருநாகல் வீதி, சிலாபம். |

5. சந்தனம் வசந்தகுமார், பலாவலை தோட்டம், உட-நிரி எல்லை, இரத்தினபுரி.

**போட்டி இல. 123** கேள்வி:- ஆஞ்சநேயருக்கு எத்தகைய பரிசு கிடைத்தது?

பெப்ரவரி 07 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.123, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# கிளின்ரனும் கிலாரியும்

**கிலாரி:** அன்புள்ள அத்தான் வணக்கம். இங்குவர என்ன சுணக்கம்?

**கிளின்ரன்:** ஐ லவ் யூ கிலாரி வணக்கம். வழக்குக்கு போனதால் சுணக்கம்.

**கிலாரி:** அவளைத் தொடுவானேன் அவதிப் படுவானேன்?

**கிளி:** கண்ணே கிலாரி, நீயுமா என்னை சந்தேகிக்கிறாய்? அமெரிக்கா உலகத்தை சந்தேகிக்கலாம், உலகம் அமெரிக்காவைச் சந்தேகிக்கலாம், வானம் பூமியைச் சந்தேகிக்கலாம், பூமி வானத்தை சந்தேகிக்கலாம். ஆனால் நீ எப்படி என்னைச் சந்தேகிக்கலாம்?

**கிலா:** அழகிகளை நீங்கள் எப்படி தனியாகச் சந்திக்கலாம்? ஆகவே நான் அதனைச் சந்தேகிக்கலாம்தானே?

**கிளி:** மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்!

**கிலா:** கணவன் அமைவதெல்லாம் சாத்தான் கொடுத்த வரமா அத்தான்?

**கிளி:** ஓ. காட்! என் கண்ணே, ஏன் கண்ணே, என்னை இம்சிக்கிறாய்?

**கிலா:** மலருக்கு மலர் தாவும் வண்டு நீர்.

**கிளி:** ஆனால், என் இதயமலர் நீதான்.

**கிலா:** மற்ற மலரெல்லாம்?

**கிளி:** அவ்வப்போது முகர்ந்து பார்த்துவிட்டு மூலைக்குள் வீசிவிடுவேன்.

**கிலா:** வீசிய மலர்களில் சில வீதியில் வீழ்ந்து கற்களாக மாறிக்கொண்டிருக்கின்றன கண்ணாளா! பீ கேர் ஃபுல்.

**கிளி:** (பாடுகிறார்)
கிலாரி கிலாரி
டோண்ட் வொரி கிலாரி
காலம் நம் தோழன் கிலாரி.
கையில் இருக்கு வண்ணப்பதவி
ஈராக்குடன் சண்டையிடலாம்
உலகத்தை பங்குமிடலாம்
அமெரிக்காதானே எஜமான்
கிலாரி கிலாரி
டோண்ட் வொரி கிலாரி
காலம் நம் தோழன் கிலாரி

**கிலா:** நான் புகார் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன், நீங்கள் போர் பற்றி பாடிக்கொண்டிருக்கிறீர்கள்.

**கிளி:** கவலைப்படாதே கிலாரி. காலமெல்லாம் போர் வாழ்க. போரே நிம்மதி. போருக்கு மரியாதை.

**கிலா:** பத்திரிகையாளர்கள் அறிந்தால் பைத்தியம் என்று பந்தி பந்தியாக எழுதப் போகிறார்கள் டியர்.

**கிளி:** கண்ணே ஐ லவ் யூ.

**கிலா:** ஏன் டியர் அங்கம் அங்கமாக ஐ லவ் யூ சொல்கிறீர்கள்? ஒட்டுமொத்தமாகவே சொல்லி விடுங்களேன்.

**கிளி:** அதுவும் ஓ.கே.தான், கிலாரி ஐ லவ் யூ, ஐ லவ் யூ.

**கிலா:** சரி, சரி, ஐ லவ் யூவில் கொஞ்சம் மீதி வைத்திருங்கள், மேலும் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்கலாம். சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்.

**கிளி:** புகார்களை மறைக்கத்தான் கண்ணே போர்ப் பரணி! நார் நாராக என் பெயர் கிழிபடுவதைத் தடுக்கத்தான் ஈராக்மீது பாய்ச்சல்! போர் முழக்கத்தில் இங்கு கிளம்பிய புகார் முழக்கங்கள் அமிழ்ந்துவிடும் கண்ணே அடங்கிவிடும்!

**கிலா:** அத்தான்!

**கிளி:** அது நான்தான், சொல்லு கண்ணே, ரெல் மீ.

**கிலா:** ஒரு விண்ணப்பம்.

**கிளி:** அது என்னப்பா? பிளீஸ் சொல்லும்?

**கிலா:** நாளை நான் ஜனாதிபதியானால் நீங்கள்தான் எனக்கு ஆலோசகராக இருக்க வேண்டுமப்பா!

**கிளி:** அதற்கென்ன, மனைவி சொல்லே மந்திரம்!

**கிலா:** கணவர் சொல்லே தந்திரம்.

**கிளி:** தந்திரத்தில் ஒரு சறுக்கல். ஈராக்கை அடிக்க வேண்டாம் என்று பல நாடுகள் இடித்துச் சொல்கின்றன.

**கிலா:** அமெரிக்காவுக்கே புத்தி சொல்வதா? என்ன தைரியம்? எத்தனை ஆணவம்? நாங்கள் சூப்பர் பவர். குப்பி விளக்கெல்லாம் குறுக்கே வருவதா?

**கிளி:** கோபப்படாதே டியர். ஈராக்கை ஒரு வழி பண்ணிவிட்டால் அமெரிக்காவில் என்பெயர் உயரும். உலகில் அமெரிக்காவின் பெயர் உயரும்.

**கிலா:** வன் கல்லு. ரூ மாங்காய்.

**கிளி:** தட்ஸ் ரைட். குட் பொயின்ட்.

**கிலா:** அந்த சதாம் என்ன பெரிய ஆளா?

**கிளி:** பின்னே, போர்க்கப்பலை கொண்டு போய் நிறுத்தி வைத்தும், காலவரையறை பல கொடுத்தும், சூளுரைகள் பல விடுத்தும்கூட அசையாமல் அல்லவோ இருக்கிறார்கள்!

**கிலா:** என்ன அத்தான் நீங்கள்? அணுக்குண்டை கொண்டுபோய் கொட்ட வேண்டியதுதானே, ஏன் டிலே?

**கிளி:** கொட்டினால் உலகம் திட்டாதா? எதையுமே ஒப்பினாகச் செய்யக் கூடாது.

**கிலா:** ஆமாம், அதுதான் உங்களுக்கு தண்ணிபட்ட தந்திரமாச்சே!

**கிளி:** காலை வாராதே கண்ணே! உடைத்துப் பிரித்துப் போட்டால் மடங்கி இருப்பார்கள் என்று பார்த்தால், அந்த ரசியர்களும் முரண்டு பிடிக்கிறார்கள்.

**கிலா:** ப்பூ ரசியாவா? முன்னாள் உலக வல்லரசு. இந்நாள் ஏழைச் சிற்றரசு! யெல்சினுக்கு கொடுக்கவேண்டியதை கொடுத்தால், வாயை ஒடுக்கி வைத்திருக்கமாட்டாரா?

**கிளி:** எத்தனையோ பேரை விலைக்கு வாங்கித்தானே அத்தனை பெரிய நாட்டை பீஸ் பீஸாக்கினோம். இனி வாங்க ஆளில்லைக் கண்ணே.

**கிலா:** சரி, அவர்கள் கண்டிப்பதால் நமக்கென்ன கஷ்டம்?

**கிளி:** ஒன்றுமில்லை, நாம்தான் மூன்றாம் உலகப் போர் மூண்டாலும் சந்திக்க ரெடியாக இருக்கிறோமே.

**கிலா:** என்ன, மூன்றாம் உலகப் போரா? பெரிய அழிவு அன்றே வரும்?

**கிளி:** அழிவு வரும்! நம்மீதான புகாருக்கும் அன்றோ அழிவு வரும்! ஹா ஹா ஹா.

**கிலா:** பழி வராதா அத்தான்?

**கிளி:** அமெரிக்கா சூப்பர் பவர் என்று காட்டத்தான் யுத்தம் என்று உரத்துச் சொன்னால் விழும் பழிகூட விலகிப்போய்விடும்.


**கிலா:** சமாதானத்துக்கான யுத்தம் என்றும் கூறிவிடலாம்.

**கிளி:** இதனை, இதற்கு முன்னாடி எங்கோ கேட்டது மாதிரி இருக்கிறதே?

**கிலா:** சிறீலங்காவில் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

**கிளி:** யெஸ்! யெஸ்! நாங்கள்கூட அங்கு சமாதானத்திற்காக ஆயுத உதவி செய்து வருகிறோமே.

**கிலா:** ஜோக்கூட அடித்திருக்கிறோம்.




**கிளி:** ஜோக்கா?

**கிலா:** யெஸ்! நாங்கள் இராணுவப் பயிற்சி கொடுப்பது போருக்காக அல்ல என்றோமே, கிரேட் ஜோக்கடா கண்ணா.

**கிளி:** இப்படி எத்தனை ஜோக் அடித்திருக்கிறோம். எங்கள் ராஜாங்க அமைச்சு பக்கம் பக்கமாக விடும் மனித உரிமை அறிக்கைகள் எல்லாம் என்னவாம்? ஹா ஹா ஹா.

**கிலா:** இந்தியாவில் தேர்தல் நடப்பதாக கேள்விப்பட்டேன், யார் வென்றால் எமக்கு நல்லது?

**கிளி:** உலகில் யார் வென்றாலும் நமக்குக் கூடாதுதான் கண்ணே! அது ஒன்றே நமது சிந்தனையாக இருக்கட்டும். (தொலைக்காட்சியில் பெண்கள் சிலரின் குரல்கள் கேட்கின்றன.)

**கிளி:** (கவனம் திசை மாறுகிறது பாடுகிறார்)
என்ன சத்தம் இந்த நேரம்
குயிலின் மொழியா?
என்ன சத்தம் இந்த நேரம்?
நதியின் ஒலியா?
கிளிகள் முத்தம் தருதா
அதனால் சத்தம் வருதா அடடா...

**கிலா:** ஸ்டாப் இட்! முத்தமாம் முத்தம், உங்களுக்கு எங்கெங்கே மச்சம் இருக்கிறது என்று பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**கிளி:** ஐயோ... யாரங்கே... பொறுத்தது போதும், ஈராக்மீது போரைத் தொடங்குங்கள்! அமெரிக்காவின் பெயரைக் காப்பாற்ற போரைத் தொடங்குங்கள். அமெரிக்காவின் மானத்தைக் காப்பாற்ற போரைத் தொடங்குங்கள். கிலாரி ரி.வியை ஒஃப் பண்ணு. அந்தக் கன்றாவியை நீ ஏன் கேட்கிறாய். சதாம் ஒழிக.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# உலா

↓ ஆர்ட்டிக் கண்டத்தில் உள்ள வடதுருவமும் அண்டார்ட்டிக்கா கண்டத்திலுள்ள தென் துருவமும் வருடம் முழுவதும் பனி படர்ந்த பிரதேசமாகவே விளங்குகின்றன. இரத்தத்தையே உறைய வைக்கும் இந்தப் பனியில் வடதுருவ மைய முனைக்கும் தென்துருவ மைய முனைக்கும் மிகச் சிறுவயதிலேயே றொபட் ஸ்குமன் என்ற பையன் சென்று சாதனை புரிந்திருக்கிறார்.

1992 ஏப்ரல் 6ம் திகதியன்று தனது பத்தாவது வயதில் வடதுருவத்தை சென்றடைந்தான். 1993 டிசம்பர் 29ம் திகதியன்று தென்துருவத்தை ஸ்குமன் சென்றடைந்தான். குறிப்பிட்டளவுதூரம் விமானத்தில் தென் துருவத்தைச் சென்றடைந்து, மலை ஏறும் போது பயன்படுத்தப்படும் சைக்கிளில் தென்துருவ மையத்தை சென்றடைந்து திரும்பியுள்ளான்.

வட, தென் துருவங்களுக்கு முதன் முதலில் சென்று திரும்பிய இளவயது வீரர் என்று உலக சாதனை படைத்துவிட்டார். ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் ஆகியும் இச் சாதனையை யாரும் உடைக்கவில்லை. உடைக்க நினைத்தால் நடுங்கும். அந்தளவுக்கு வடதுருவ, தென்துருவ குளிர் பிரசித்தம். ஆர்ட்டிக்கா, அண்டார்ட்டிக்கா கண்டங்களில் மனிதர்கள் வசிப்பதேயில்லை.



# வரவு



→ வருவாரா, மாட்டாரா என்று புதிர் கிளப்பிக் கொண்டிருந்தார் சோனியா. கடைசியாக வந்தே விட்டார்.

அவர் வந்தது மட்டுமல்ல, தன் மகன் ராகுல், மகள் பிரியங்கா மற்றும் மருமகன் ஆகியோரையும் பிரசார களத்தில் இறக்கிவிட்டிருக்கிறார்.

ராஜீவ் அரசியலில் ஈடுபடுவதை கடுமையாக எதிர்த்தவர் சோனியா. ராஜீவை காதலித்த போதே சோனியா விதித்த நிபந்தனை 'அரசியலில் ஈடுபடக் கூடாது' என்பதுதான்.

ராஜீவின் சகோதரர் சஞ்சய் காந்தி விபத்தில் பலியானதால், தனக்கு உதவியாக ராஜீவை இழுத்தார் இந்திரா காந்தி. மறுக்க முடியாத நிலையில் மனமின்றி சம்மதித்தார் சோனியா. அதே சோனியா இன்று அரசியலில் குதித்திருக்கிறார். தன் குடும்பத்தினரையும் இழுத்துவிட்டிருக்கிறார்! என்ன காரணம்?

நாட்டின் மீதான பற்று என்று வெளியே சொல்லிக் கொண்டாலும், உண்மையான காரணம் கணவர் ராஜீவ்மீது கொண்ட மாளாக் காதல்தான். காங்கிரசில் ராஜீவ் காந்தி விசுவாசிகளை ஓரங்கட்டும் வேலைகள் தொடங்கிய போதுதான் சோனியா சீற்றமடைந்தார். காங்கிரசை கடைக்கண்ணால் கவனிக்கத் தொடங்கினார்.

அந்தக் கவனம்தான் படிப்படியாக வளர்ந்து இன்று நேரடி அரசியலுக்கு கொண்டுவந்திருக்கிறது. நரசிம்மராவுக்கு போட்டியிட தொகுதி கொடுக்காததுக்கும் சோனியாதான் காரணம்.

தான் மட்டும் அரசியலில் ஈடுபடத்தான் சோனியா விரும்பினார். ஆனாலும் சோனியாவின் பிரசாரத்திற்கு அவரைக் காணக் கூட்டம் கூடுகிறதே தவிர, வாக்காளர்களைக் கவரும் மந்திர சக்தி அவரிடம் இல்லை.

சோனியா இறங்கியும் காங்கிரஸ் படுதோல்வி கண்டால், தேரு குடும்ப மானம் என்னாகும்? யோசித்துப் பார்த்தார் சோனியா. தன் முன்னைய சபதங்களையெல்லாம் ஓரத்தில் வீசிவிட்டு, மகனையும், மகளையும் மருமகனையும் மேடையில் ஏற்றி கையசைக்க வைத்திருக்கிறார்.

'இத்தாலிப் பெண்' என்று தன்மீது குத்தப்படும் முத்திரையை தன் பிள்ளைகளின் புன்னகை மூலம் தகர்த்தெறிவதுதான் சோனியாவின் பிரசார தந்திரம். ராகுல் காந்தி ராஜீவ் பாணியிலும், பிரியங்கா இந்திரா பாணியிலும் வாக்காளர்களை கவர முயற்சிக்கிறார்கள்.

ராஜீவ் குடும்ப வரவால் காங்கிரஸ் உயிர் பிழைத்துக் கொள்ளும். ஆனால் ஆட்சியைப் பிடிக்குமா? அது சந்தேகம்தான். ஏனெனில் ராஜீவ் மறைவின் சூட்டோடு நடைபெற்ற தேர்தலில்கூட அனுதாப அலை தமிழ்நாட்டைத் தவிர வேறு மாநிலங்களில் வீசவில்லை.

எப்படியோ ஒன்று மட்டும், யார் முயன்றாலும் யார் தயவும் இன்றி காங்கிரஸ் தனியாக ஆட்சி அமைக்கக்கூடிய பலத்தை மேலும் ஒரு பத்துவருட காலத்திற்கு நினைத்துப் பார்க்க முடியாது.





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# துணை



↑ பயங்கரமான 'செக்ஸ்' சுழலில் மாட்டிக்கொண்டு முழிக்கும் கிளின்ரனுக்கு மனைவி ஹிலாரி மட்டும்தான் துணை.

"கிளின்ரனின் ஆண் உறவு பற்றியெல்லாம்கூட ஆராயும் அளவுக்கு விசாரணைகள் சூடுபிடித்துள்ளன. இவற்றிலிருந்து மீள்வதற்கு கிளின்ரனுக்கு உள்ள ஒரேவழி ஈராக்மீது யுத்தம் நடத்துவதுதான் என்று அமெரிக்க சஞ்சிகை ஒன்று எழுதியிருக்கின்றது. அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் தன்மீதான குற்றச்சாட்டை துடைக்க போர் வெறியைத் தூண்டுவது போன்ற திரைப்படம் ஒன்றும் முன்னர் ஹொலிவூட்டில் வெளியானது என்பதையும் அந்த சஞ்சிகை சுட்டிக்காட்டி, கிளின்ரனுக்கு சவுக்கடி கொடுத்திருக்கிறது.

கிளின்ரன் அழகான பெண்களைத்தான் தன் செயலாளர்களாக வைத்துக் கொள்வார். அழகான பெண்களாக இருந்தால் அவர்களின் கணவர்மாருக்கு பதவிகள் கொடுப்பார். ஒருவருக்கு தூதர் பதவியே கொடுத்தார் என்பதெல்லாம் அடுக்கடுக்கான ஆதாரங்கள் மூலம் அம்பலமாகின்றன.

ஆண், பெண் உறவுகள் அவரவர் தனிப்பட்ட விவகாரம். ஆனால் அமெரிக்க ஜனாதிபதி என்ற அதிகாரத்தை பயன்படுத்தி அழகிகளை மயக்கியதும் வெள்ளை மாளிகைக்குள்கூட விளையாட்டுப் பிள்ளையாக நடந்து கொண்டதும்தான் அமெரிக்க மக்களுக்கு வெறுப்பைக் கிளப்பி இருக்கிறது.

'என் கணவரை நான் நம்புகிறேன்' என்று ஹிலாரி சொல்லலாம். அமெரிக்கர்கள் நம்புவார்களா? ஈராக் மீதான கடும்போக்கு மட்டும் கிளின்ரனின் வீழ்ந்து வரும் செல்வாக்கை தூக்கி நிறுத்தமாட்டாது.

அடுத்த ஜனாதிபதியாகும் ஹிலாரியின் ஆசையையும் மூட்டை கட்டிப் போட வேண்டியதுதான்.

# மலைப்பூ

## பார்த்து மகிழலாம் சூடிக்கொள்ள முடியாது பாரம் தாங்காது




↑ பார்த்து மகிழலாம் சூடிக்கொள்ள முடியாது. பாரம் தாங்காது.

உலகில் உள்ள பூஞ்செடிகளுக்கு இல்லாத பெருமை, தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள ரஃப்லேசிய அனோல்டி என்றழைக்கப்படும் செடிக்கு உண்டு. இந்தச் செடிகளில்தான் மிகப் பெரிய பூக்கள் பூக்கின்றன.

இச்செடிகள் தனியாக வளர்வதில்லை, மரத்தில் தழுவிப் படர்ந்துதான் வளரும். தழுவாவிட்டால் வளராது. மரத்தைத் தழுவிக்கொண்டு மரத்தில் இருந்து தனக்கு வேண்டிய சத்துக்களை உறிஞ்சி வளரும்.

இதன் பூக்கள் செம்மை கலந்த இதழ்களைக் கொண்டவை. (படத்தில் பாருங்கள்) உலகிலேயே பெரிய இதழ்களைக் கொண்ட பூக்களும் இவை மட்டும்தான். இதழின் தடிப்பு மட்டும் முக்கால் அங்குலம். இதழ் ஒன்றின் குறுக்குவிட்ட நீளம் மட்டும் மூன்று அடி. பூவின் எடை பதினொரு கிலோ. உலக சாதனைப் பூ. ஆனால சூடமுடியாது. கூந்தல் தாங்காதல்லவா!

மேலும் இரண்டு தகவல்கள்:

உலகில் சிறிய பூவும் காயும் உள்ள செடியின் பெயர் வொல்ஃபியா அங்கஸ்ற்றா. இது அவுஸ்திரேலியாவிலுள்ளது. 06 மில்லி மீட்டர் நீளமும் (1/42 அங்) 0.33 மில்லிமீட்டர் (1/77 அங்) அகலமும் கொண்டுள்ளது. இதன் எடை 0.00015 கிராம். இதிலிருந்து வரும் காயின் எடை 0.0007கிராம்.

உலகில் அதிவேக வளர்ச்சி கொண்ட பூப்பூக்கும் தாவரத்தின் பெயர் ஹெஸ்பெறோ யுக்கா. இது பிரித்தானியாவின் சில்லி என்ற ஊரில் உள்ள ட்ரெஸ்கோ அபேஸ் தீவுகளில் காணப்படுகின்றது. 1978 ஜூலை மாதம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பொன்றில் 14 நாட்களில் 3.65 மீட்டர் (12 அடி) உயரம் வளர்ந்தது. அதாவது நாளொன்றிற்கு 25.4 செண்டி மீட்டர் (10 அங்குலம்) வீதம் வளர்கின்றது. அபார வளர்ச்சி.

## 6வது பிறந்ததின வாழ்த்து



கத்தரின் ரோகின்ஜா

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சத்தியசீலன்-மனோகரி தம்பதியினரின் செல்வப் புதல்வி கத்தரின் ரோகின்ஜா 6வது பிறந்த தினத்தை 23.02.1998ம் திகதி திங்கட்கிழமை பிறநாத்மலை அப்புத்தளையில் உள்ள இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். ரோகின்ஜாவை அன்பு அப்பா (NORWAY), அம்மா(CEYLON), அம்மப்பா, அம்மம்மாமார், அப்பம்மா,அப்பப்பா, பெரியப்பா, சித்தப்பா (MULLAITIVU) அண்ணாமார், அக்காமார், சித்தப்பா, சித்தி(MADDUVIL) பெரியப்பாமார், சித்தப்பாமார் (NORWAY), மாமாமார்,ராஜன் மாமா,சுதன்மாமா(NORWAY), பெரியப்பா (SWISS), சித்தப்பா (DENMARK), அம்மப்பா (HAPUTALE), சித்திமார், சித்தப்பாமார், தம்பிமார் தங்கைமார், மற்றும் யாழ். கொழும்பு பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள், மட்டுவில் தொட்டுலாகல, பிறநாத்மலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ரோகின்ஜாவை வாழ்த்து அன்னை அருளால் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

*மனோகரி சத்தியசீலன். (அம்மா,அப்பா)*

# வெளியே

## அதிக நாசம் விளைவித்த அழிவுப் புயல் நஷ்டம்-ஆயிரம்கோடி டொலர்

கரிபியன், மெக்சிக்கோ மற்றும் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலம் ஆகிய பகுதிகளில் 1988 செப்டம்பர் மாதம் 12ம் 19ம் திகதிகளுக்கிடையில் பயங்கரப் புயல் வீசியது.

இதில் 350 பேர் கொல்லப்பட்டனர். ஏழரை இலட்சம் மக்கள் வீடுகளை இழந்தனர். இதனால் ஏற்பட்ட சேதம் மொத்தம் ஆயிரம் கோடி டொலர் என்று கணக்கிடப்பட்டது.

புயல் வீசப்போகிறது என்பதை முன் கூட்டியே, நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கொண்டு கண்டறிந்து, உரிய காலத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் சேதம் கணிசமாகக் குறைந்தது என்று தெரிகிறது. புயலின் வேகத்தால் கடலில் நங்கூரமிட்டு நின்ற கப்பல் ஒன்று கரையேறியது. கரையில் இருந்தும் புயலால் விரட்டப்பட்டு தரைமீது நகர்ந்து குடிமனைகள் உள்ள பகுதிக்குள் புகுந்தது. இதிலிருந்தே புயலின் வேகம் எப்படியிருந்திருக்கும் என்று தெரிகிறது அல்லவா.

உலகம் தோன்றிய முதல் இதுகாலம்வரை வீசிய புயல்களில் அதிக பொருள் நஷ்டம் ஏற்படுத்திய புயல் இதுதான். ஆயிரம் கோடி டொலர் நஷ்டம் என்றால் சும்மாவா.

உலகில் இதுவரை வீசிய சூறாவளிகளில் அதிக உயிர் நஷ்டம் ஏற்பட்டது பங்களாதேஷில் 1970ல் வீசிய மூர்க்கச் சூறாவளியில்தான். மூன்று இலட்சம் முதல் ஐந்து இலட்சம் பேர்வரை மாண்டனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.




படிப்பகம்